
'லக்ஷ்மி'
காஷ்மீர் கத்தி
பூங்கொடி பதிப்பக

# காஷ்மீர் கத்தி

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 24640074

MAJESTIC BOOK HOUS
33-34, RAJA STREET,
NEAR FIVE CORNER,
COIMBATORE - 641 001.
Cell : 99943-43332, 99943-433

## நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர் : காஷ்மீர் கத்தி
நூலாசிரியர் : "லக்ஷ்மி"
மொழி : தமிழ்
நூலின் பொருள் : நாவல்
வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004
நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்
பதிப்பு ஆண்டு : முதற் பதிப்பு டிசம்பர், 1978
இரண்டாம் பதிப்பு மே, 1981
மூன்றாம் பதிப்பு மே, 1987
நான்காம் பதிப்பு நவம்பர், 1994
ஐந்தாம் பதிப்பு ஜூன், 2010
பக்கங்கள் : 144
நூல் அளவு : 1 x 8 கிரவுன்
எழுத்து : 11.5 புள்ளிகள்
தாள் : 10.9 கி.கி. வெள்ளைத்தாள்
பைண்டிங் : கார்டு போர்டு
ஒளி அச்சுக் கோர்வை : அமராஜோதி
செல்: 9444169725
அச்சிட்டோர் : அன் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 005

**விலை ரூ. 55-00**



## "லக்ஷ்மி"யின்

### பூங்கொடி வெளியீடுகளில் சில...

| | | |
|---|---|---|
| ☞ | அழகின் ஆராதனை | 80.00 |
| ☞ | அவள் தாயாகிறாள் | 35.00 |
| ☞ | அசோகமரம் பூக்கவில்லை | 55.00 |
| ☞ | அடுத்த வீடு | 145.00 |
| ☞ | அரக்கு மாளிகை | 180.00 |
| ☞ | அதிசய ராகம் | 90.00 |
| ☞ | அவளுக்கென்று ஒரு இடம் | 85.00 |
| ☞ | அவள் ஒரு தென்றல் | 75.00 |
| ☞ | இவளா என் மகள் | 65.00 |
| ☞ | இரண்டு பெண்கள் | 55.00 |
| ☞ | இரண்டாவது தேனிலவு | 55.00 |
| ☞ | இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 105.00 |
| ☞ | இன்றும் நாளையும் | 90.00 |
| ☞ | உறவுகள் பிரிவதில்லை | 40.00 |
| ☞ | உயர்வு | 80.00 |
| ☞ | உறவின் குரல் | 65.00 |
| ☞ | ஊன்றுகோல் | 60.00 |
| ☞ | என் வீடு | 55.00 |
| ☞ | ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 150.00 |
| ☞ | ஒரு சிவப்பு பச்சையாகிறது | 90.00 |
| ☞ | கடைசி வரை | 55.00 |
| ☞ | கங்கையும் வந்தாள் | 115.00 |
| ☞ | கதவு திறந்தால் | 95.00 |
| ☞ | கதாசிரியையின் கதை (முதல் பாகம்) | 60.00 |
| ☞ | கதாசிரியையின் கதை (இரண்டாவது பாகம்) | 70.00 |
| ☞ | கழுத்தில் விழுந்த மாலை | 70.00 |
| ☞ | கணவன் அமைவதெல்லாம் | 85.00 |
| ☞ | காளியின் கண்கள் | 75.00 |
| ☞ | கூறாமல் சன்னியாசம் | 60.00 |
| ☞ | கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 50.00 |
| ☞ | கைமாறியபோது | 85.00 |

| | | |
|---|---|---|
| | ::::: | 90.00 |
| ❖ தோரண நிழல்கள் | ::::: | 55.00 |
| ❖ திரும்பிப் பார்த்தால் | ::::: | 60.00 |
| ❖ துரோணா | ::::: | 35.00 |
| ❖ தோட்டத்து வீடு | ::: | 75.00 |
| ❖ நல்லவர்களின் வீணை | ::: | 150.00 |
| ❖ நாயகன் மகள் | ::: | 80.00 |
| ❖ நிழல் நேசிக்கவில்லை | ::::: | 90.00 |
| ❖ நிலாக்கள் மறையும்போது | ::::: | 95.00 |
| ❖ நிழற்குடை கனவுகள் | ::: | 60.00 |
| ❖ நீலப் புடவை | ::: | 80.00 |
| ❖ நீதிக்குக் கைகள் நீளம் | ::::: | 115.00 |
| ❖ பண்ணையார் மகள் | ::::: | 50.00 |
| ❖ பயணி | ::: | 55.00 |
| ❖ புனிதா ஒரு புதிர் | ::::: | 60.00 |
| ❖ புதுமலரே | ::::: | 60.00 |
| ❖ பெயர் சொல்ல மாட்டேன் | | |
| ❖ பெண்மணம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | ::::: | 80.00 |
| | ::::: | 50.00 |
| ❖ மரகதம் | ::::: | 45.00 |
| ❖ மனம் ஒரு சங்கராட்டினம் | ::::: | 60.00 |
| ❖ மருமகள் | ::::: | 100.00 |
| ❖ மீண்டும் வசந்தம் | ::::: | 80.00 |
| ❖ மீண்டும் ஒரு சீதை | ::::: | 70.00 |
| ❖ மீண்டும் பெண்மணம் | ::::: | 45.00 |
| ❖ முருகன் சிரித்தான் | ::::: | 75.00 |
| ❖ மோகத்திரை | ::::: | 75.00 |
| ❖ ராதாவின் திருமணம் | ::::: | 75.00 |
| ❖ வனிதா | ::::: | 75.00 |
| ❖ வசந்திக்கு வந்த ஆசை | ::::: | 45.00 |
| ❖ வாழ்வு நிலைத்தால் | ::::: | 35.00 |
| ❖ வீரத்தேவன் கோட்டை | ::::: | 75.00 |
| ❖ வெள்ளிரம் வருகை | ::::: | 140.00 |
| ❖ ஸ்ரீமதி வைதேகி | | |



# காஷ்மீர் கத்தி

உறைமீது அழகான வேலைப்பாடு, காஷ்மீரத் தொழிலாளியின் கைவண்ணம். வால்நட் மரத்தாலான வெளியுறை. வளைவுகள் நெளிவுகளின் நடுவே வண்ண மயிலின் உருவம். பலமுறை பார்த்து ரசித்த வேலைப் பாடுதான். பெரிய மனிதர்கள் வீட்டுச் சாப்பாடு அறையின் ஓரத்தில் கிடக்கும் மேஜைமீது பழக்கூடையின் பக்கத்திலே பார்வையாக வைக்கப்பட வேண்டிய அலங்காரப் பொருள். உறையைக் கழற்றி உள்ளிருந்த கத்தியை உருவி எடுத்தான் ராஜாபாதர். வெள்ளிக்கைப் பிடி கொண்ட அந்தக் கத்தியை அவன் பலமுறை தீட்டி வைத்திருந்தான். பழங்களை நறுக்க உபயோகிக்க வேண்டிய அந்தக் கத்தி இப்போது பளபளவென்று கூர்மையாகப் பிரகாசித்தது.

ராஜாபாதரின் வலுமிக்க கரத்தினால் அதைப் பிடித்துக் கொண்டு ஓங்கி ஒருமுறை சரக்கென்று பாய்ச்சினால் போதும். வாட்ட சாட்டமான மனிதன்கூட ஒரே குத்தில் கீழே சாய்ந்து விடுவான். அத்தனை கூர்மை அந்தக் கத்திக்கு. இப்போது மெல்ல விரல்களால் கத்தியின் நுனியைத் தடவி ஆழம் பார்த்தபடி அவன் எதிரே கண்களை ஓடவிட்டான். அவன் உட்கார்ந்திருந்த கயிற்றுக் கட்டில் அசையும் போதெல்லாம் தொய்ந்தது. கயிற்றைப் பிரித்து இழுத்துக் கட்டி, சீர்பார்க்க வேண்டியது முக்கிய வேலை. அதற்கு நேரமில்லாமல் ஊரைச் சிரக்கப்

புறப்பட்டு விட்டான் என்று அடிக்கடி தாய் முணு முணுப்பதை அவன் உணர்வான். அவன் வரைக்கும் அந்தக் கட்டில் விக்கிரமாதித்ய சிம்மாசனத்திற்கு ஒப்பானது. குடிசை வாசலில் அதைப் போட்டுக் கொண்டு அதன்மீது உட்கார்ந்த பின்னர்தான் அவன் செயலாக்க வேண்டிய காரியங்கள் பற்றிய திட்டங்கள் ஜெட் வேகத்தில் சிந்தனையில் உருவாகுவது வழக்கம். சமீபத்தில் அவன் கொஞ்சம் பருத்து விட்டிருந்தான். எல்லாம் பதவி செய்த வேலைதான். ஒரு சமயம் கயிறு, கூடிவிட்ட எடை தாங்காது தொய்கிறதோ? முண்டா பனியனுக்குள் முடங்கிக் கிடந்த தனது பருத்த தோள்களைப் பெருமையுடன் ஒரு முறை பார்த்துக் கொண்டான். வலது முன்னங்கைமேல் ராத்திரி ஏற்பட்ட அந்தக் கீறல் காயம் பச்சைப் புண்ணாக எரிந்து கொண்டிருந்தது. தூக்கமின்றிப் பொழுதைக் கழித்ததின் பயனாகச் சிவந்துவிட்ட கண்களிலும் ஒரே எரிச்சல். அழகாக காதோரத்துக் கிருதாக்களுடன் கலந்துகொண்டு தாடையின் கீழ் தாழ்ந்து நின்ற தன் தொங்கு மீசையை லேசாகத் தடவிக் கொண்டான்.

சும்மா சொல்லக்கூடாது. சௌந்தரிய குப்பத்திலே அவன்தான் அழகான ஆண்பிள்ளை. அஞ்சாத சிங்கமும் கூட. பெரியவர், குப்பத்தின் வாத்தியார் துலுக்காணம் கள்ளச்சாராய வழக்கிலே சம்பந்தப்பட்டு, கம்பிகளை எண்ண மூன்று வருஷங்களுக்கு உள்ளே போய் விட்டிருந்தார். கைகளில் விலங்குகளுடன் போலீஸ் வானில் ஏறுமுன் அவரது கண்கள் கூட்டமாகப் பின்னால் ஓடிவந்த தமது சீடர்களில் அவன் மேல்தான் பாய்ந்தன.

''தம்பி! ராஜா பாதர், இனி குப்பத்துக்கு நீதாண்டா தலைவர். ஆமாம் சொல்லிட்டேன்! பசங்களா கேட்டுக் கோங்கடா.'' இரைந்து கத்திவிட்டுப் புறப்பட்டிருந்தார். அண்ணன் துலுக்காணம் இட்ட ஆணையை அசட்டை



செய்ய இயலுமோ? அவர் வெளிவரும் வரை அவன்தான் தலைவன் என ஏற்றுக் கொண்ட சீடர்கள் அந்த நாளை எப்படித்தான் கொண்டாடினார்கள்? கனத்த ரோஜா மாலையைக் கழுத்தில் போட்டு இரண்டு பேர்கள் அவனைத் தூக்கித் தங்கள் தோள் மீது அமர்த்திக் கொண்டு குப்பம் முழுவதும் ஊர்வலமாக வந்து கோஷமிட்டுக் கத்தி அமர்க்களப்படுத்தி விட்டனர். அன்று இரவு அவனைத் தவிர அத்தனைப் பேரும் ஆளுக்கு ஒரு கிளாஸ் சாராயத்தை ஊற்றிக்கொண்டு ஆடின ஆட்டம், பாடின பாட்டுகள் - அப்படி ஒரு அமர்க்களத்தின் நடுவே பதவி ஏற்றுக் கொண்டு விட்டிருந்தான். இன்னும் கொஞ்ச நாட்கள்தான் தலைவர் பதவி. பெரியவர் வெளியே வந்ததும் அவன் மரியாதையாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அதுவரை சீடர்கள் தண்டிய மாமூல் பணத்திலே அவனுக்குக் கணிசமானதொரு காணிக்கை கிடைத்துக் கொண்டிருந்தது. எப்பொழுதும் சட்டைப் பையில் சில்லறை குலுங்கியதினால் வேலை தேடிக் கொண்டு அலைய வேண்டிய நிர்பந்தம் தற்காலிகமாக அவனுக்கு இருக்கவில்லை.

சௌந்தரிய குப்பத்துக்கு வருமுன் அவனும் அவன் தாய் சம்பகமும் கிராமத்திலிருந்து வந்து மாரிமுத்துத் தோட்டத்தில்தான் முதலில் குடியேறினர். சண்பகம் நாலு வீடுகளைக் கூட்டி, பத்துப் பாத்திரங்கள் தேய்த்து மகனைப் பத்தாவதுவரை படிக்க வைத்து விட்டிருந்தாள். மகன் படிக்க வேண்டும் பட்டங்கள் பெற வேண்டும், கை நிறையச் சம்பாதிக்க வேண்டும். அவன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று அவளுக்கு எத்தனையோ கனவுகள். திடீரென்று ஒருநாள் தோட்டத்திலிருந்த வீடுகள், பட்டப்பகலில் திகுதிகுவென்று எரியத் தொடங்கின. 'ஐயோ! அப்பா' என்ற கூக்குரல், மூச்சை முட்டிய புகை மண்டலத்திற்குள் பெண்கள்,

குழந்தைகளின் ஓலம் இடையே நெருப்பணைக்கும் வண்டி அதிகாரிகளின் கூச்சல். போலீசார், வேடிக்கை பார்க்கும் கூட்டம், ஏகக் குழப்பம். தோட்டம் அலை மோதியது. விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பள்ளிக் கூடத்திலிருந்து ஓடிவந்தான் ராஜா பாதர்.

''உன் சட்டை, வேட்டி, புத்தகம் எல்லாம் போச்சே. எனக்கு மாத்துத் துணிகூட இனிக் கிடையாதே.'' வயிற்றில் அடித்துக் கொண்டு கதறினாள் அவன் தாய். கலங்கிப் போனான் அவன். ''போகட்டும் அம்மா, நீங்க உசிரோட இருக்கிறீர்களே அதுவே போதும்.'' மெல்ல கையைப் பிடித்து அவளை ஒதுக்குப்புறமாக அழைத்து வந்து நிறுத்தினான். அவள்மீது அவனுக்கு மட்டற்ற பாசம். நினைவு தெரிஞ்ச வயதிலிருந்து அவன் அவள் முகத்தைப் பார்த்துத் தானே வளர்ந்தவன். அப்பன் மூஞ்சியை எங்கே பார்த்தான்.

''அவசரத்திலே இந்த அரிசிப் பானையை மட்டும் தூக்கிக்கிட்டு வந்தேன். கையிலே கிடைச்சதை இதுலே வாரிப் போட்டுக்கிறதுக்குள்ளே பந்து பந்தா நெருப்பு கூரை மேலே பாஞ்சு...'' சொல்ல முடியாது அவள் திணறிக்கொண்டு அழுதாள்.

பானைக்குள் கையை விட்டுத் துழாவியபோதுதான் அவனுக்குக் கிடைத்தது அந்தக் கத்தி.

''என்னம்மா இது? ரொம்ப அழகான கத்தி!'' கையிலெடுத்துப் பார்த்த அவன் வியந்தான். உறைக் குள்ளே வெள்ளிப் பிடி போட்ட கத்தி. பிடியின் மேல் 'மோகன்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததையும் கவனித்தான்.

''வீடு பத்தி எரிகையிலே பிடிக்கு நெருப்புக் கேட்ட கதையா இங்கே தோட்டமே பத்தி வேகுது! எல்லாத்தை யும் விட்... இந்தக் கத்தியைப்பத்தி...'' அவள்



கோபத்துடன் முணுமுணுத்தாள். ராஜாபாதர் அதை உறையிலிட்டு, சட்டென்று தன் இடுப்பில் செருகிக் கொண்டான். ''எனக்கு இது ரொம்பப் பிடிச்சிருக்கு நானே வச்சுக்கப் போறேன். இதுமாதிரி அதிசயப் பொருள் வூட்லே இருக்கிறதை இதுவரை நீங்க எனக்குச் சொல்லவேயில்லை.''

''உங்க தாத்தா வேலை பார்த்த வூட்லே அவருக்கு முதலாளி பரிசாகக் கொடுத்தது. என்னடா பெரிய அதிசயத்தைக் கண்டுட்டே! சரி நகர்ந்து நில்லுடா - நெருப்பணைக்கிறவங்க எல்லாரையும் விரட்டிக்கிட்டு வராங்கடா. டேய் இந்தப் பானையைத் தூக்குடா, எனக்குக் காலும் வரலை கையும் வரலை'' ஓலமிட்டாள் சம்பகம்.

அத்துடன் படிப்பை உதறிவிட்டான் அவன். நெருப்பில் நாசமடைந்த குடிசைகளைப் புதுப்பிக்கு முன்னர் அங்கிருந்த குடும்பங்கள் கலைந்து நாலா பக்கமும் வேறு இடங்களைத் தேடிக்கொண்டு பிரிந்து விட்டன. கூவம் கரைமீது தொடர்ச்சியாக அமைக்கப் பட்டிருந்த குடிசைகள் நிறைந்த சௌந்திரிய குப்பத்திற்கு வந்து தாயும் மகனும் குடியேறினர். மறுபடியும் வாழ்க்கையில் எதிர்நீச்சல்போட வேண்டிய நிர்பந்தம்.

குப்பத்தருகேயிருந்த பெரிய மனிதர்களின் வீடுகளைக் கூட்டி, பாத்திரங்கள் துலக்கும் பணியை அவள் மறுபடியும் தேடிக் கொண்டாள். நாலு வீடுகளில் கிடைத்த சோற்றையும் குழம்பையும் பாத்திரங்களில் வாங்கிச் சேர்த்து எடுத்துக்கொண்டு வந்தாள். குழம்பை யும் சோற்றையும் ஒன்றாகக் கலந்து உருட்டித் தாயும் மகனும் சாப்பிட்டனர் ஒரு தாழ்வாரத்திலேதான் அவர்களின் குடியிருப்பு. அவள் சம்பாதித்த பணத்திலே வாடகை போக மீதி வீட்டுச் செலவுக்கே பற்றாத நிலை. மேலே படிக்க வேண்டுமென்றால் உடுத்த நல்ல

துணிமணி தேவையில்லையா? பணத்துக்கு எங்கே போவது?

எஸ்.எஸ்.எல்.சி.யைக் கூடத் தாண்டாதவனுக்கு எடுத்த எடுப்பிலே எந்த ஆபீஸில் பெரிய வேலை கிடைத்துவிடும். பியூன் வேலை, ஆபீஸ் பையன் வேலை எது கிடைத்தாலும் போதுமென அவன் அலையாத அலைச்சல் இல்லை. சொந்தமாக ஏதேனும் சிறு தொழில் துவங்கிக் கொள்ளலாம் என்றாலோ முதலுக்கு வழி இல்லை. எந்த ஒரு தொழிலுக்கும் ஒரு சங்கம், அதற்கு ஒரு தலைவர். அதற்குள் நுழைய பல தொல்லைகள், அலுத்துப் போய்விட்டான் ராஜாபாதர். முடிவில் ஒரு பலசரக்குக் கடையில் எடுபிடியாளாக நாற்பது ரூபாய் சம்பளத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கேயும் அவனால் நிரந்தரமாக நிற்க முடியவில்லை சம்பகத்திற்கு வரவர உடம்பில் தெம்பு குறைந்து கொண்டு வந்தது. விடியு முன்பே எழுந்து நாலு வீடுகளுக்கு ஓடி ஓடி உழைக்க முன்போல் வலு இருக்கவில்லை மகன் சம்பாதிக்கிறான். ஒரு கஞ்சியைக் காய்ச்சிக் குடித்து விட்டு வீட்டோட கிடக்கலாம் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும் போது வேலையைத் தொலைத்துக் கொண்டு வெட்டிப் பயலாக அவன் வீட்டில் வந்து குந்தி விட்டான்.

ராஜாபாதர் ரோஷக்காரன். பலசரக்குக் கடைக்காரர் கல்லாப் பெட்டிப் பணத்தைக் கணக்கிட்டபோது துண்டு விழுந்தது. புதிதாக வேலைக்கு வந்த பயல்தான் கை வைத்திருப்பான் என்று தாறுமாறாகக் கேட்டுவிட்டார். ராஜாபாதரின் ரத்தம் கொதித்தது. கோபத்தில் கோவைப் பழமாக முகம் சிவந்து போயிற்று. மீசை துடிதுடித்தது. மறுபடி கடைக்காரர் உணர்ந்துகொண்டு விட்டார். குமுறிக்கொண்டு அவர் பேச முன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வேலையை வீசி எறிந்து விட்டு வீட்டிற்கு நடையைக் கட்டி விட்டான் அவன்.



மறுபடியும் வேலை தேடும்படலம். மூட்டை தூக்கினான். தாற்காலிகமாகத் தோட்ட வேலை செய்தான். பெரிய கட்டடங்களுக்குச் சுண்ணாம்படிக்கச் சித்தாளாக சேர்ந்தான். கை வண்டி தள்ளினான். இன்னும் எத்தனையோ விதமான வேலைகள். பத்துகிளாஸ் படிச்ச தன் மகன் பாடாய் படுகிறானே? மண்வெட்டி எடுத்து மார்வலி எடுக்கும் வரை கொத்தி, மாடுபோல் உழைக்கிறானே? பெற்றவள் மனம் புழுங்கினாள். மாய்ந்து போனாள். மகன் கடினமாக உழைத்தபோதிலும் வேலையில்லாத நாட்களில் வீட்டிலே பற்றாக்குறை, தரித்திரம், பட்டினி... என்று வாழ்க்கை மேட்டிலும் பள்ளத்திலும் ஓடிக்கொண்டிருந்தது.

அந்தச் சமயந்தான் அவனுக்குக் குப்பத்து வாத்தியார் துலுக்காணத்திடம் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்த சாமர்த்தியமானதொரு சீடனை அவர் பல காரணம் கொண்டு தேடிக் கொண்டிருந்தார். பெயருக்கு துலுக்காணத்திற்குக் குப்பத்து ஓரத்தில் சாலையின் முனையிலே ஒரு பெட்டிக் கடையிருந்தது. அதன் மேற்பார்வையை மகன் வசம் ஒப்புவித்திருந்தார். ஆனால் அவருக்கு வந்த எக்கச்சக்கமான வரும்படி முழுவதும் வேறு வகையில் திரட்டியவை. கள்ளக் கடத்தல் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் திருட்டுச் சாமான்களை வாங்கி விற்றல் இத்யாதியில் அவருக்குப் பெரும் பங்கிருந்தது. ஓங்கி உயரமாக கரேலென்ற தோற்றம். கட்டுமீசை, சிவந்த விழிகள், அம்மைத் தழும்பு பரவிய முகம். பார்த்தாலே குப்பம் அலறும் தோற்றம். குரல் அதற்கு மேல் கேட்பவர்களின் குடலை நடுங்க வைக்கும் - கூட அவரைச் சுற்றி ஒரு கும்பல் சீடர்களின் படை. ஜெயிலுக்குப் போவதும் வருவதும் துலுக்காணத்திற்குத் தண்ணீர் பட்டபாடு.

அவரது சிஷ்யகோடிகளில் ராஜாபாதர் ஒரு தனிரகம். அவனை நம்பியதுபோல் வாத்தியார் மற்ற யாரையும் நம்பியதேயில்லை; பையன் தங்கக் கம்பி. பிறர் பொருள் எதுவாயினும் எடுத்துப் பார்க்காத பெருந் தன்மை யானவன்; பொய் பேசப் பிடிக்காதவன்; இருட்டைத் திரும்பிப் பார்க்க விரும்பாதவன்; கள்ளச் சாராயம், கடத்தல் விஷயம் இவைகளை அறவே வெறுத்தவன். இப்பையனின் தாடியை வளர்த்துக் கொண்டு தங்க வேண்டியவனைத் தன் சீடர் பட்டாளத்திலே சேர்த்துக் கொண்டதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை.

கோர்ட் விவகாரங்கள், போலீஸ் கேஸ்கள், மனுக்கள், விண்ணப்பங்கள் எழுதப் படிக்க ஆங்கிலம் அவசியம் ஏற்படும் போது துலுக்காணம் ராஜாபாதரைத் தான் உபயோகித்தார். சிறைக்குச் செல்ல நேர்ந்த போதெல்லாம் துணிவுடன் அவனைத்தான் தன் சொந்த வீட்டையும் சின்ன வீட்டையும் கவனித்துக் கொள்ளச் சொல்லிச் செல்வது வழக்கம். கைவசமிருந்த மீதிப் பணம், நகை நட்டு எதையுமே அவனிடம்தான் ஒப்படைத்து விட்டுப் போவார் தலைவர். உயிர் போனாலும் அவன் அவருடைய பொருள்களில் தூசியைக் கூடத் தொடமாட்டான். எல்லாவற்றையும்விட அவன்மேல் தனிப்பட்டதொரு பாசம் அவருக்கு ஏற்பட்டதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அவனிடம் காணப்பட்ட அபாரத்துணிச்சல் (வேறு எந்தப் பயலிடமும் இருக்கவேயில்லை). அவரது சீடர் படையிலிருந்த [illegible] பேர்கள் வெறும் வெத்து வேட்டுக்கள்.

[illegible] துலுக்காணத்திற்கும் [illegible] தலைவர் சித்திரைக்கும் நீண்ட நாள் [illegible] கொண்டிருந்தது. கண்ட இடங்களில் இரு [illegible] மோதிக் கொண்டிருந்தனர்.



ஒரு சமயம் கூடுவாஞ்சேரிப்பக்கம் தலைவர் தமது படையினர் சிலருடன் ஒரு கருமாதிக்குப் போக வேண்டியிருந்தது. திரும்பும் பொழுது இருட்டிவிட்டது. குறுக்கு வழியே நடந்து பஸ்ஸைப் பிடிக்கச் சாலையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். சித்திரையின் சீடர்களில் ஒருத்தன் பார்த்து விட்டான். சில நிமிஷங்களில் எங்கிருந்தோ ஆட்கள் கம்பும் கோலுமாக அடிக்க வந்து சூழ்ந்து விட்டனர். துலுக்காணத்துடன் கூட வந்த சீடப்பசங்கள் கோழைகள், புதர்களுக்குள் புகுந்தடித்து ஓட்டம் பிடித்து விட்டனர்.

காலேஜ் மாணவன் போலக் காணப்பட்ட ஒரே ஒரு பொடிப்பயல் என்ன பண்ணி விடுவான் என்கிற துணிவில் மோதத் தொடங்கினர் சித்திரையின் கூட்டத்தார்.

ராஜாபாதர் சிலம்பத்திலே கைதேர்ந்தவன். கராத்தே கூட ஓரளவு தெரிந்து வைத்துக் கொண்டிருந்தான். கூட்டத்திற்குள் சிங்கம் போலப் பாய்ந்து இடசாரியும், வடசாரியுமாக வெட்டு வெட்டென்று வெட்டியதில் சித்திரையின் முன் பற்கள் மூன்று தெறித்து மண்ணில் விழுந்தன. அவ்வளவுதான், கூட்டத்தோடு சித்திரை ஓட்டமெடுத்தான். அதற்குப் பின்னர் அவன் துலுக்காணம் பக்கமே தலை வைத்துப் படுத்தவன் இல்லை. தொடர்ந்து அவனிடமிருந்து வம்பு வழக்குகள் எதுவுமே எழுந்ததுமில்லை. தன் உயிரைக் காப்பாற்றிய தீரன் சூரன் மகாவீரன் என்று ராஜாபாதர் மீது தலைவருக்கு அபார மதிப்பு - அன்பு. அதனால் தான் நீண்ட காலத்திற்குப்பின் இம்முறை சிறைக்குச் செல்ல நேர்ந்தபோது அவனைத் தலைவராக அமர்த்தி விட்டுத் தமது குடும்பங்களையும் கவனிக்கும் காவல் தலைவனாகவும் வைத்துவிட்டுப் போயிருந்தார்.

கையில் பிடித்துக் கொண்டிருந்த சிறு வேப்பங் குச்சியை வேகமாகக் கத்தியினால் சீவிக் கொண்டே

குடிசைகளின் ஓரத்திலிருந்து கால்வாய்ப் பக்கம் திரும்பிப் பார்த்தான். லேசாக இருள் பிரிந்து வெளிச்சம் தலையை நீட்டிய விடியற்காலை வேளை. முதல் நாள் இரவு சித்திரைப் பௌர்ணமி நிலவு பொழிந்த வெள்ளத்தில் அந்தக் கூவம் நதி கூட உறங்குகின்ற யமுனை போன்று அழகாகத்தான் காணப்பட்டது. அதன் கரை மேல் வரிசையாக அமைந்திருந்த குடிசைகள் கூட தூரத்துப் பார்வைக்கு அமைதி நிறைந்த ஆசிரமங்களைப் போன்றுதான் காட்சியளித்தன. பளபளவென்று பளித்சிட்டுக் கொண்டு புறப்பட்ட உதய சூரியனின் வெளிச்சத்தில் கால்வாயின் பாசி படிந்த தூர்நீர்த் தேக்கம். அதன் கரைமீது ஆங்காங்கே அவசரத்தில் அவர்கள் பண்ணியிருந்த கூரை தொய்ந்த குப்பத்து வீடுகள். தெருவிலே நிம்மதியாக உறங்கிய நாய்கள். பால்காரனுக்காகக் காத்து நின்று அசை போட்டு நடந்து கொண்டிருந்த எருமை மாடுகள். எல்லாம் நிலவுப் பூச்சைக் கிழித்துக் கொண்டு நிர்வாணமாகக் கண்களை உயர்த்தின.

உள்ளே குடிசைக்குள்ளிலிருந்து அவன் தாய் பலமாக இருமும் சப்தம். இருமல் சப்தம் கேட்டதுமே சம்பகம் வருகிறாள் என்றவரை, குப்பத்து மக்கள் புரிந்து கொள்ளும் அளவில் அந்த நோய் அவளை இறுகப் பற்றிக்கொண்டு உயிரை மெல்லக் குடித்துக் கொண்டிருந்தது.

பக்கத்துக் குடிசை பாஞ்சாலி பிறந்த மேனியுடனிருந்த தன் மூன்று வயசு மகன் ரங்கனை இடையில் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெல்லத் தெருவின் ஒரு ஓரத்திலே இறங்கி அவனை உட்கார வைத்தாள். திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள். விசுக்கென்று கட்டிலிலிருந்து குதித்துக் கொண்டு எழுந்தான் ராஜாபாதர். கத்தியை



உறையிலிட்டு இடுப்பில் வினாடியில் செருகிக் கொண்டான்.

"இந்தாம்மா? இதுதான் வேணாங்கிறேன். தூக்கு பிள்ளையை. கோடியிலே கார்ப்பரேஷன் மகாராஜன் கட்டி வச்சிருக்கிற கக்கூஸ் எதுக்கு இருக்கு? உங்களுக்கெல்லாம் நான் எத்தனை வாட்டி எடுத்துச் சொல்றது? குடிசையிலே நாம் சுத்துப்புறத்தை சுத்தமா வச்சிக்கணும்னு தொண்டை கிழிய தினம் கத்திக்கிட்டிருக்கேன். பக்கத்து வீட்டுக்காரி நீயே இந்த அநியாயம் பண்ணினால்..." உரத்த குரலில் அதட்டினான். இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு தலையை நிமிர்த்தி கண்களை உருட்டி அவன் பார்த்ததைக் கண்ட பாஞ்சாலி சப்த நாடியும் ஒடுங்கிப்போனாள்.

"மன்னிச்சுக்கோ வாத்தியாரே, புள்ளே வயித்தை நோவுதுன்னு அழுதான்."

"பேச்சு வேண்டாம். சீக்கிரம் அங்கே எடுத்துக்கிட்டு ஓடு... உம்..." அதட்டினான் அவன்.

சலக் சலக்கென்று கால் கொலுசுகள் சப்திக்க தளுக்கு நடை போட்டுக்கொண்டு வந்தாள் பூமா.

"என்ன வாத்யாரே ரொம்பத்தான் அலட்டிக்கிறே" கொஞ்சலாகக் கேட்டபடி அருகிலே வந்து நின்றாள்.

அந்தக் குப்பத்திலே அவள் ஒரு பெரிய மினுக்கி. ஆப்பக்கார அலமேலுவின் அருமைப் பெண். பதினெட்டு வயது. தோட்டத்திலே தன்னிச்சையாக மதமதவென்று வளர்ந்து நிற்கும் கீரைத்தண்டு போன்ற செழுமையான உடற்கட்டு. சினிமாக்களைப் பார்த்துக் கத்துக்கொண்ட அலங்காரம். இடுப்பிலே நீல வண்ணச் சிட்டிப்பாவாடை. பாதி முதுகு தெரிய உடலை இறுக்கிப் பிடித்த கருப்பு ரவிக்கை - வெள்ளை வாயில் தாவணி - கழுத்தில் கருகமணி மாலை - காதுகளில் கவரிங் வளையங்கள். சூரிய

உதயமாகு முன்னே குளித்துவிட்டு - சீவி சிங்காரித்து - உடுத்திக் கொண்டு வந்துவிட்டிருந்தாள்.

''வாத்தியாருக்கு என்ன அப்படிக் கோவம்? குப்பத்துல இருக்கிறதே ஒரு கக்கூஸ். அதுவும் ஒழுங்கா வேலை செய்கிறதில்லை'' கண்களை அகல விரித்துக் கைகளை ஆட்டிக்கொண்டு சரளமாக அருகில் நெருங்கி வந்தாள். தலையில் அவள் சூட்டிக் கொண்டிருந்த மல்லிகைப் பூச்சரத்திலிருந்து மணம், கூவத்தின் நாற்றத்தைத் தாண்டிக் கொண்டு முகத்தில் மோதியது.

''யார் சொன்னது? நேத்திக்கு கார்ப்பரேஷன்கிட்டே கம்ப்ளெயிண்ட் பண்ணி, அவங்க உடனடியாக வந்து ரிப்பேர் செய்து, இப்போ குழாயிலே தண்ணி நல்லாக் கொட்டுது. கக்கூசிலும் தண்ணி ஓடுது. நீ ஊட்டிலேயே உட்கார்ந்துக் கிட்டு ஊர்க்கதை பேசிக்கிட்டு - பெரிய வம்புக்காரி - வாயை மூடு...''

''பாஞ்சாலி சின்னாயி உன்னைப் பார்த்துட்டு அரண்டுக்கிட்டு ஓடுதே. ஆனாலும் வாத்தியாரே நீ ஆம்பளை சிங்கந்தான் - '' சிங்காரமாக அவள் சிரித்தாள்.

''நம்ம கபாலி கோயில் குளத்தை நீ பார்த்திருக்கிறே இல்லையா? அந்த டூரிஸ்ட் பஸ்களைக் கொண்டாந்து மாடத் தெருபக்கம் போட்டுடறாங்க. பயணிகள் படிச்சவங்கதான். கசமாலம் - காலையில் விடியறதுக்கு முந்தி படிகள் மேலே அசிங்கம் பண்ணிட்டு போயிடறாங்க. அந்தக் குளத்திலேதான் நாம் சாமியைத் தெப்பத்திலே வச்சு விழாக் கொண்டாடுகிறோம். இதைக் கேட்கிறதுக்கு ஆள் இல்லை.''

''இங்கே அதட்டிக்கேட்க இந்த ராஜபாதர் இருக்கான் தெரிஞ்சுக்கோ - '' உறுமினான் கோபத்துடன்.

''நீ கோவிச்சுக்கறச்சே கூட ரொம்ப கம்பீரமாத்தான் இருக்கிறே. என் கண்ணே படும் போல - '' தன் இரு



கைகளையும் நீட்டி, அவன் முகத்தருகே சுழற்றித் தலையில் வைத்துச் சொடுக்கிக் கொண்டு திருஷ்டி கழிப்பது போன்று அபிநயம் செய்தாள் பூமா.

''குப்பத்துக்காரங்க படிச்சவங்க இல்லை. பணக்காரங்க இல்லை. தொழிலாளிகள், அன்றாடங் காய்ச்சிகள் - ஆனாலும் சுத்த பத்தமா வாழத் தெரிஞ்சவங்கங்கிறதை அவங்கள்ளாம் புரிஞ்சுக் கணுங்கிறதுதான் என் ஆசை... தெரியுதா?'' அதட்டலாகக் கேட்டான்.

''வயத்தைப் பசிக்குது உனக்கு - அதனாலேதான் அய்யாவுக்கு வார்த்தைங்க காரமா வராப்பல இருக்கு. அம்மா கேட்டுக்கிட்டு வரச் சொல்லிச்சு. ஆப்பத்தையும் காப்பியையும் இங்கேயே கொணாந்து கொடுக்கிறதா?'' தோள்களைக் குலுக்கி - கண்களைச் சுழற்றி ஜாலங்களை செய்தாள் அவள்.

ராஜாபாதருக்கு எரிச்சல். 'பலவாட்டி உனக்குச் சொல்லியிருக்கேன். வயசு வந்த பொண்ணு நீ - கோயில் மாடு மாதிரி வேளை பொழுது இல்லாம இப்படித் திரியக் கூடாதுன்னு கண்டிச்சிருக்கேன். போ வூட்டுக்கு பசிச்சா நானே அங்கே வந்து உங்க அம்மா கையிலே வாங்கித் தின்னுக்கிறேன்.''

''ஆசையா உங்கிட்டப் பேச வந்தா நாயாட்டமா எரிஞ்சு விழறே...'' சிணுங்கிக் கொண்டு அவள் திரும்பக் குலுக்கலும் மினுக்கலுமாக வீட்டை நோக்கி நடந்தாள்.

காலையிலேயே அவன் பல் துலக்கி முகம் கழுவி விட்டிருந்தான். அருகிலிருந்த குழாயிலிருந்து ஒரு இரும்பு வாளி நிறையத் தண்ணீரைப் பிடித்து எடுத்துக் கொண்டு குடிசைக்குள் சென்றான். பின்னால் ஒரு தடுப்புத்தான் குளியலறை. குப்பத்து வாத்தியாரின் வீடாக உயர்ந்த பின்னர் அவனுக்கு வசிக்க முழுதாகவே

ஒரு குடிசை துலுக்காணத்தின் தயவில் கிடைத்து விட்டிருந்தது. ராஜாபாதர் மற்றவர்கள்போல் குழாயடியிலேயே பலர் முன்னிலையில் குளிப்பதை வெறுப்பான். அவசரமாகத் தகரக் குவளையில் தண்ணியை மொண்டு ஊற்றிக்கொண்டு விரைவில் குளித்து முடித்தான். தகரப் பெட்டியைத் திறந்து முதல்நாள் அவன் தாய் தோய்த்து உலர்த்தி - நடமாடும் இஸ்திரி வண்டிக்காரரிடம் பெட்டி போட்டு வாங்கி வைத்திருந்த வெள்ளை வேட்டியையும் ஷர்ட்டையும் எடுத்து அணிந்து கொண்டான். சுவரில் தொங்கிய சிறு கண்ணாடியில் பார்த்தபடி சீப்பால் கிராப்பை மேலே எழும்பி நிற்கும் வகையில் வாரிச் சீர்ப்படுத்திக் கொண்டான். இடுப்பிலே மறவாமல் அந்தக் கத்தியை எடுத்துச் செருகிக் கொண்டான். சட்டைப் பையில் சில்லறையைப் போட்டுக் காலில் செருப்புக்களைத் திணித்துக் கொண்டு கிளம்பினான்.

''ராஜா!... காப்பித் தண்ணி வச்சுத் தரவா கண்ணு?'' இருமிக்கொண்டு உள்ளிருந்து எழுந்து வந்தாள் சம்பகம்.

''வெந்நீர் வச்சுக் காச்சி நீங்க குளிச்சிட்டு காசிலிங்கம் கொணாந்து கொடுக்கிற பாலைக் கொஞ்சம் காச்சிக் குடியுங்க. அரிசிப்பானை கிட்டே ரெண்டு ரூபா செலவுக்கு எடுத்து வச்சிருக்கிறேன். நான் ஆப்பக்கார அலமேலு அம்மாகிட்டே நாஸ்தாவே முடிச்சுக்கிறேன்.''

''ராஜா! அந்த அடி கையிலே பட்டது எப்படிடா இருக்கு? இந்த ஊர் வம்பெல்லாம் வுட்டுட்டு எங்கேயாவது ஒரு நல்ல வேலை தேடிகிட்டா...'' பேச முடியாது இருமல் அவளைத் துன்புறுத்தியது.

''லேசான சிராய்ப்புக் காயம். செத்தா பூடுவேன்? இன்னொரு வாட்டி அந்தப் பயல்களை இந்தப் பக்கம் பார்த்தால்...'' பற்களைக் கடித்துக் கொண்டு அவன் வேகமாக வெளியே நடந்தான்.



பொழுது நன்றாக விடிந்துவிட்டது. லேசாக வீசிய வெய்யிலில் வாயிலின் முன்பு, அடுப்பின் மீது ஆப்பச் சட்டியுடன் அலமேலு உட்கார்ந்திருந்தாள். அவளைச் சுற்றி வாடிக்கைக்காரர்களின் கூட்டம். குப்பத்திற்கே அவள் ஒரு ராணி. இரட்டை நாடி சரீரம். இலேசாக நரைக்கத் தொடங்கிய கூந்தலுடன் பெரிய சவுரியைச் சேர்த்து பிரிமனை போன்றதொரு கொண்டை தலையில். சதா வெற்றிலையை அரைத்துக் குதப்பி ஓரங்கள் புண்ணாகிவிட்ட சிவந்த உதடுகள். குங்குமம் சுட்ட கறை தெரிந்த நெற்றியில் ஐம்பது பைசா அளவிலே ஒரு பொட்டு.

''இந்தா பிடி! வ்க்கிற விலையிலே இன்னும் பால் ஊத்த முடியுமா?'' கத்திக் கொண்டே தனது வாடிக்கைக்காரர்களுக்கு ஆப்பங்களைச் சூடாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள். பக்கத்திலே முக்காலி மீது உட்கார்ந்திருந்த மகள் பூமா காசுகளைக் கணக்கிட்டு வசூலிப்பதில் கருத்தாக இருந்தாள்.

சரக் சரக்கென்ற செருப்புச் சப்தம். கூட்டத்திலே ஒரு சலசலப்பு. வாத்தியார் வந்துவிட்டார் என்ற கிசுகிசுப்பு.

கன்னங்கள் சிவக்க கடைக்கண்ணால் பூமா அவனைப் பார்த்துவிட்டுத் தாயிடம் குனிந்து ஏதோ சொன்னாள்.

வெற்றிலைக் காவி ஏறிய பற்களைக் காட்டிக் கொண்டு அலமேலு சிரித்தாள். ''வாய்யா வாத்தியாரே உன் கையாலே தான் நிதக்கும் போணி. ராத்திரி போட்ட ரவுண்டிலே அசந்து தூங்கிட்டியா? இந்தா அந்த முக்காலியை வாத்தியாருக்கு இழுத்துப் போடு...'' ஒரு இளவட்டத்தைப் பார்த்து அதட்டினாள்.

ராஜாபாதர் உட்கார்ந்து கொண்டான். புரச இலையில் இரண்டு சூடான ஆப்பங்களை வைத்து ஒரு

கரண்டி தேங்காய்ப் பாலை அவை மீது ஊற்றி, சர்க்கரையைத் தூவி அவனிடம் நீட்டினாள். அருகிலிருந்த பெரிய அலுமினியக் கெட்டிலிலிருந்து சுடச் சுடச் சுக்கு காப்பியை அலுமினிய டம்ளரில் வார்த்து அவன் பக்கத்திலே வைத்தாள்.

''இன்னும் இரண்டு சூடா ஆப்பம் வாத்துப் போடறேன். துண்ணு வாத்தியாரே! இன்னிக்கி ஆப்பம் மல்லிப்பூக் கணக்கா அமைஞ்சு போச்சு...'' உபசரித்தாள்.

ராஜாபாதர் சாப்பிட்டுக் கொண்டே மனதில் கணக்கிட்டுக் கொண்டான். சுக்குக் காப்பி பத்து பைசா ஆப்பம் பதினைஞ்சு பைசா. மொத்தம் நாற்பது பைசா... கையைப் பைக்குள் விட்டுக் காசை எடுத்து அவளிடம் வைத்துவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு எழுந்து நடந்தான்.

பின்னால் ஆட்டுக்குட்டி போல் குழைந்து கொண்டு ஓடி வந்தாள் பூமா.

''நீ காசு கொடுத்துத்தான் எங்ககிட்ட திங்கணுமா... சும்மா எடுத்துத் துண்ணா நாங்க கொறைஞ்சா பூடுவோம்...''

உறுத்து அவளை விழித்துப் பார்த்தான் அவன். ''யாருடைய உழைப்பையும் நான் சும்மா திங்கற பழக்கமில்லை... போய் உன் வேலையைப் பார். இப்படி ஆம்பிளை பின்னாடி ஓடிவர பழக்கத்தை நிறுத்தலை நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன்'' மிரட்டிவிட்டு மேலே நடந்தான்.

அப்பொழுது குடிசையிலிருந்து வெளிவந்தாள் திருநாகம். ''தம்பி!'' என்று அன்புடன் அழைத்தாள். திரும்பிப் பார்த்தான். நின்றான்.

''என் மானத்தைக் காப்பாத்தின மவராசன் நீ. நல்லாயிருக்கணும். உனக்கு மட்டும் ரோசனை



சமயத்துக்கு தோணாட்டா என் பொண்ணே அந்தப் பாவிகள்'' அவளால் அந்தக் கோரத்தை நினைக்கவும் முடியவில்லை. கண்களில் நீர் துளிர்க்கக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''இந்தக் குப்பத்திலே நாம் எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவங்க. ஒருத்தருக்கு வர கஷ்ட நஷ்டம் மத்தவங்களையும் சேர்ந்தது... ஆமாம். இப்போ தங்கச்சி எப்படி இருக்கு?''

''ரொம்ப நடுங்கிப் போயிடுச்சு. ஆனாலும் பொழைப்பு இருக்கே! கொழுமோர் காய்ச்சிக் கொடுத்தேன், பின்னைக்கு சுத்திப் போட்டேன். வேலைக்குப் போயிருக்கு...''

தலையை ஆட்டிவிட்டு மேலே அவன் நடந்தான். குளித்து முடித்துவிட்டு பசிக்குக் கொஞ்சம் பாலைக் காய்ச்சிக் குடித்துவிட்டு மெல்ல வாயிலில் வந்து நின்று கொண்டிருந்தாள் சம்பகம். இருமல் நோயால் அவள் இளைத்து எலும்பும் தோலுமாகி விட்டிருந்தாள்.

கட்டிலின் மீது மறுபடியும் ராஜாபாதர் உட்கார்ந்து கொண்டான். இனி வாத்தியார் துலுக்காணத்தின் சீடர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகச் சின்னத் தலைவரைக் காண வருவார்கள். சூரியன் உச்சியை அடையும் வரை - வெய்யில் மண்டையைப் பிளக்கும் வரை அங்கே ஒரே கூட்டம் - ஊர் அக்கப்போர் - சளசளவென்ற பேச்சு - சிரிப்பு இத்யாதி. தினசரி கேட்டுப் பார்த்து அலுத்துப் போய் விட்டிருந்தாள் சம்பகம்.

இருமும் சப்தம் கேட்டுத் தாயைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

''அந்த ஆப்பக்கார அலமேலு மகளைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?'' ஆவலுடன் கேட்டாள் தாய்.

"நினைக்க என்னம்மா இருக்கு?"

"பொண்ணு கிளியாட்டமா இருக்கிறா, அவளுக்கு உன்மேலே உசிரு. காலா காலத்திலே ஒரு கல்யாணத்தை நீ செஞ்சுக்கிட்டா குடியும் குடித்தனமுமா இருக்கறதைப் பார்த்துட்டு இந்த மஞ்சளும் பூவும் பொட்டுமா கண்ணை மூடிடுவேன்..." தொடர்ந்து பலமாக அவள் இருமினாள்.

"நீங்கதான் நேத்து முழுவதும் சித்திரா பௌர்ணமிக்கு உப்பில்லாம விரதம் இருந்தீங்களே, அந்த சித்திர குப்தன் தன் கணக்கிலே உங்க வயசை அதிகப்படியாக எழுதியிருப்பான். பயப்படாதீங்க" சிரித்தான் அவன்.

"போடா குறும்புக்காரா... கல்யாணம் கட்டிக்கப் பொழுது இல்லாம அப்படி உனக்கு என்னடா வேலை?"

"ரொம்ப வேலை இருக்கும்மா... சொன்னா உங்களுக்குப் புரியாது." அவனையுமறியாது அவன் கரம் இடுப்பில் செருகிக் கொண்டிருந்த கத்தியைக் கோபத்துடன் தடவியது.

## 2

சூரியன் உச்சி முகட்டிற்கு வந்ததும் சீடர் படை கலையத் தொடங்கியது. பேச்சு சுவாரஸ்யம் அடங்கியதும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த இரண்டொருவரும் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டனர்.

மகன் தற்காலிகத் தலைவர் பதவிக்கு வந்ததுமே சம்பகம் வீடு கூட்டும் வேலையிலிருந்து விலகிக் கொண்டு விட்டாள். மேலும் லேசாக ஆரம்பித்த இருமல் நோய் பலத்துவிடவே அவளுக்கு முன்போல் உடலில்



வலு இருக்கவில்லை. மகனுக்குச் சோறு பொங்கிப் போடுவதே பெரும் பாடாகி விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவை அவள் இரத்த வாந்தி எடுத்துக் குற்றுயிராகி விட்டாள். பயந்துபோன மகன் அவளை ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டிருந்தான். அந்தப் பூட்டுக்கு அவள் தப்பிப் பிழைத்து வீடு திரும்பியது பெரியதொரு அதிசயம். அதற்குப் பின்னர் அவள் அடுப்பருகில் கூட வேலை செய்ய முடியவில்லை. காலையில் கொஞ்சம் பாலைக் காய்ச்சிக் குடிப்பாள், மாலையில் மகன் வாங்கித் தந்த ஹார்லிக்சை வெந்நீரில் கலக்கி விழுங்குவாள். இடையே மெல்ல வீட்டைக் கூட்டி துணிகளைத் துவைத்து வைப்பதே அவளுக்குப் பெரும் பாடாகி விட்டிருந்தது. நாளடைவில் தாயார் நலிந்து வருவதை அவன் உணராமலில்லை உள்ளூர. அவனுக்குக் கவலை, வேதனை. ஆனால் வெளியே சிறிதும் காட்டிக் கொள்ளவேயில்லை.

பகல், இரவு இருவேளைச் சாப்பாட்டையும் அவன் சாப்பாட்டுக்காரம்மா வேலாத்தாளிடந்தான் வாங்கிக் கொண்டான். தற்சமயம் குப்பத்தின் தலைவர் அவன் என்று வேலாத்தாளுக்கு அவன் மீது மதிப்பு. கொஞ்சம் பக்தியும் கூட. அதனால் சம்பகம் அனுப்பி வைக்கும் அலுமினிய டிபன் பாக்ஸில் அவள் எடுப்புச் சாப்பாட்டைக் கொஞ்சம் கூடுதலாகவே போட்டு அனுப்பிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் வசித்த குடிசைக்கு நாலு வீடுகள் தள்ளிதான் வேலாத்தாளின் சாப்பாட்டுக் கடை. வாயிலில் அறிவிப்புப் பலகை ஏதும் கிடையாது. ஆனாலும் அங்கே அவள் சோற்றுக்கடை வைத்திருப்பதைச் சுற்று வட்டமே தெரிந்து கொண்டிருந்தது. வடித்த சோற்றை ஒரு பெரிய கடாயில் போட்டு, குழம்பை அதன்மீது ஊற்றிக் கலந்து ஒரு அலுமினியக் கிண்ணத்தில் அடைத்து புரச இலைமீது

கவிழ்த்துப் பட்டை போட்டாள். ரூபாய்க்கு ஒரு பட்டை என்ற கணக்கில் விற்றுக் கொண்டிருந்தாள். அந்தப் பகுதியிலிருந்த ரிக்ஷாத் தொழிலாளிகள் எல்லாருமே அவளிடத்தில்தான் பகலிலும் இரவிலும் சாப்பாடு வாங்கித் தின்றனர். சிலர் வாயிலிலேயே உட்கார்ந்து சாப்பிட்டனர். சிலர் தமது தகரக் குவளைக்குள் வாங்கிக்கொண்டு போய் விடுவதும் உண்டு. குப்பத்துத் தலைவரானதும் அவன் கண்டிப்பாக அவளிடம் சொல்லி விட்டான். வாடிக்கைக்காரர்கள் சோற்றைத் தின்றுவிட்டு எச்சில் இலைகளை வீட்டு முன் குவித்துவிட்டுப் போகக்கூடாது என்று. எல்லாவற்றையும் சேர்த்துத் தெருமூலையிலிருந்த குப்பைத் தொட்டியில் அவள் தினமும் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று உத்திரவு. வேலாத்தா வாயில்லாத பூச்சி சுபாவம். ஆப்பக்காரி அலமேலுவுக்கு நேர்மாறான குணம். அவளுக்குக் கார் விபத்தில் நொண்டியாகிவிட்ட கணவன் - நான்கு குழந்தைகள். அவர்களைப் பராமரிக்கத்தான் அவள் நாள் முழுவதும் அடுப்படியில் வெந்து கொண்டிருந்தாள்.

வேலாத்தாளின் மூத்த மகன் சோனிப்பயல் தூக்கிக் கொண்டு வந்த டிபன் பாக்சை வைத்துவிட்டு ஓடிப் போனான். மூலையில் தேய்த்து கவிழ்த்துவிட்டிருந்த அலுமினியத் தட்டுகளை எடுத்து வைத்தான் ராஜாபாதர். இருமி இருமி, சோர்ந்து துவண்டு பாயின்மீது சுருண்டு கிடந்த தாயை மெல்ல எழுப்பி உட்கார வைத்தான். டிபன் செட்டைத் திறக்கும் போதே வெங்காயப் புளிக் குழம்பின் மணம் மூக்கைத் தூக்கியது. வேலாத்தா சமையலில் மிகவும் கெட்டிக்காரி. வாத்தியாருக்கு என்று கூடக் கொஞ்சம் கத்தரிக்காய் பொரியலும் புதினாத் துவையலும் அடிப்பாத்திரத்தில் மோரும் வைத்திருந்தாள். சோற்றை எடுத்துத் தாயாரின் தட்டில் போட்டு விட்டுத் தன் தட்டிலும் நிறைத்துக் கொண்டான்.



இப்பொழுதெல்லாம் சம்பகத்துக்குப் பசியே இருப்பதில்லை. வெங்காயக் குழம்பின் வாசனை அவள் வயிற்றைக் குமட்டியது. ''வேண்டாம்பா! வெறும் மோரை மட்டும் கொஞ்சம் சோத்திலே ஊத்து போதும்...'' இருமலுடன் திணறினாள்.

எலும்புக்கூடாகி விட்ட அவள் உடல்மீது புடவை தொக்கிக் கொண்டிருந்தது. 'உகும், போகிற போக்கைப் பார்த்தா...' தனக்குள் கவலைப்பட்ட வண்ணம் மோரை அவள் தட்டிலே வார்த்துவிட்டு நிமிர்ந்தான். சலவை செய்த வேட்டி போல் வெளிறியிருந்த முகத்தில் பளிச்சிட்ட குங்குமப் பொட்டும் புடைத்துக் கொண்டு எழும்பி நின்ற கழுத்தெலும்புமீது ஊசலாடிய தாலிச்சரடும் அவன் கண்களை உறுத்தின.

குத்துயிராகி விட்டபோது, அவளை ஆஸ்பத்திரிக்கு நகர்த்த முயற்சித்துக் கொண்டிருக்கையில் மகனது கையைப் பிடித்துக்கொண்டு அவள் சொன்னாளே?

''பூவும் பொட்டுமாகப் போயிடுவேன். அதுவே போதும் - சந்தோசம். சிவப்பு சல்லாத் துணியைப் போத்தி மாலை போட்டு மஞ்சளும் குங்குமமா என்னை உன் கையாலேயே ஒப்பேத்தி விட்டுடுடா ராசா!'' அழுதாள் அவள்! அந்த நினைப்பில்... நெஞ்சிலே ஒரு குமுறல். ''சோத்துலே கல்லு கிடக்கா? பல்லைக் கடிக்கிறாயே...'' திகைப்புடன் கேட்டாள் அவள். ஆத்திரத்துடன் அவன் அது சமயம் பற்களைக் கடித்துக்கொண்டுதான் இருந்தான். இடுப்பிலே செருகிக் கொண்டிருந்த கத்தியின் உறை வயிற்றைக் குத்துவது போன்ற பிரமை. விரல்களால் அதை மெல்லத் தடவிக் கொண்டான். ஆமாம் அவள் இறந்து விட்டால்? அவனுக்கு என்று அதற்குப் பின் உறவு சொல்ல யார்?

அவனது நினைப்பின் எதிரொலியாக அவன் பேசினாள். "ராசா, நானும் படிச்சுப் படிச்சுச் சொல்றேன், கேட்க மாட்டேங்கிறே! வாத்யார் துலுக்காணம் வெளியே வர கொஞ்ச நாளுதான் இருக்கு. அதுக்கு முன்னாடியே ஒரு நல்ல வேலையா பார்த்துத் தேடிக்கொண்டு விடு. அவர் வந்தப்புறம் இந்தப் பதவி பவிஷு எல்லாம் போயிடும். பதவி போன பிறகு குப்பத்து நாய் கூட உன்னைச் சட்டை செய்யாது தெரிஞ்சுக்கோ... ஊருக்கெல்லாம் உபதேசம் பண்றே. உனக்குனு ஒரு வழி செஞ்சுக்கத் துப்பில்லை. நான் சொல்லாட்டா வேறு யாரு எடுத்து இப்படி சொல்வாங்க? அந்தப் பழைய கதையை வுட்டுடு. அந்தப் பொண்ணு பூமாவைக் கட்டிக்கோ. காலமுச்சூடும் வேலாத்தா கடை சோத்தை நம்பிக்கிட்டு வாழ முடியுமா? நம்ப வூட்டிலேயும் ஒருத்தி வந்து விளக்கேத்த வேணாமா?" இருமிவிட்டு மூச்சுமுட்ட அவதிப்பட்டபடி தூக்கிக்கொண்டு எழுந்தாள்.

ராஜாபாதர் பேசவில்லை. வேகமாகச் சாப்பிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு கட்டிலின் மேல் வந்து உட்கார்ந்தான். அதன்மேல் கிடந்த, வெற்றிலைப் பெட்டியை சீடர் பட்டாளம் காலி செய்து விட்டிருந்தனர். பீடி, சுருட்டு, சிகரெட் பழக்கமெல்லாம் அவனிடம் கிடையாது. வெற்றிலை கூட எப்போதாவதுதான் போடுவான். அப்போதைக்கப்போது கொஞ்சம் பாக்கை அள்ளிப்போட்டுக் கொள்வது வழக்கம்.

பகல் நேரத்தில் அவன் தூங்கிப் பொழுதைக் கழிக்க விரும்புவதில்லை. கொஞ்ச நாட்களாக அவனுக்கு மனதில் அமைதியே கிடையாது. அதற்குப் பல காரணங்கள். ஆஸ்பத்திரிக்குப் போகுமுன் அந்தக் கசப்பான உண்மையைத் தன் தாயிடமிருந்து தெரிந்து கொண்டபின் அவனது நிம்மதி மிகவும் குலைந்து



போயிற்று. வாத்யார் துலுக்காணம் திரும்பி வரப் போகிறார் பதவி பறிபோய் விடும். மறுபடியும் வாழ்க்கையில் பற்றாக் குறை... அடிவயிற்றைப் புரட்டிய சங்கடமான எண்ணங்களும் அவனது அமைதியின்மைக்கு ஓரளவு காரணம். கடைசியாக முக்கியமான காரணம் அவனால் என்றுமே மறக்க முடியாத அந்த துன்ப நினைவு. தங்கமணியின் ஞாபகம்.

"ரொம்ப அலுப்பா இருக்கு. எழுந்திருக்க முடியலை. போகச்சே கதவை வெறுமே சாத்திக்கிட்டுப் போடா ராசா! இல்லாட்டி தெரு நாய் பூந்து நடுவூட்டிலே வந்து படுத்துக்கும்..." உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள் சம்பகம்.

வெற்றிலைப் பெட்டியை உள்ளே தள்ளிவிட்டு கதவை மெல்ல மூடினான். கயிற்றுக் கட்டிலை எடுத்துச் சுவரோடு சாய்த்து நிறுத்தினான். செருப்புக்களைக் காலில் திணித்துக் கொண்டு தன் அன்றாட பவனிக்குக் கிளம்பி விட்டான்.

சில வீடுகளுக்கு அப்பால்தான் தையல்காரர் ரங்கனது குடிசை. ஒரு காலத்தில் கடைத் தெருவில் பெரியதாகத் தொழில் நடத்திக் கை நிறையச் சம்பாதித்தார். இப்போது இடத்திற்கு வாடகை கொடுக்க வசதியில்லாது வீட்டோடு கடையை வைத்துக்கொண்டு விட்டிருந்தார். ஒரு கண்ணில் பூ விழுந்து பார்வை வேறு குறையத் தொடங்கி விட்டது. குப்பத்திலிருந்த பெண்களுக்கு ரவிக்கை தைத்துக் கொடுப்பது, பழைய துணிகளைப் பழுது பார்த்து சீர்படுத்துவது போன்ற வேலைகளைத் தள்ளாது எடுத்துக்கொண்டு காலத்தை எப்படியோ ஓட்டிக் கொண்டிருந்தார். அவர் மனைவி மாரிமுத்து நோயாளி. சதா படுக்கையும் கையுமாகத் தானிருந்தாள். அவளுக்கு உடம்புக்கு ஒரு நோயுமில்லை;

மகள் செத்துவிட்டதுதான் மனதிலே வியாதியாகிப் படுத்துவிட்டாள் என்று குடும்பத்திலே பேச்சு. குனிந்த தலையுடன் வாசல் வழியே வந்து வெளிச்சத்திலே கண்ணை ஊன்றிப் பார்த்தபடி அவர் பழைய சட்டையின் கழுத்துப் பட்டையைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார். டொக டொகவென்று ஓடிய தையல் மெஷினின் பெடலை மிதிப்பதை விட்டுச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். செருப்புகளை கழற்றி வைத்துவிட்டு வெறுங்காலுடன் உள்ளே ராஜாபாதர் வந்து நுழைவதைக் கண்டார். தீரா வேதனையால் ஒளி மங்கிவிட்ட அவர் முகத்தில் கூட லேசாகப் புன்னகை அரும்பியது, "வா தம்பி! சொன்ன நேரத்துக்கு நீ வருவேன்னு தெரியும். இன்லண்டு லெட்டர் கூட வாங்கி வச்சிருக்கிறேன். அந்த முக்காலியிலே குந்து" உபசரித்தார் அவர்.

பாயின்மீது ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த மாரிமுத்து எழுந்து உட்கார்ந்தாள். தோள் மீது புரண்ட தனது அவிழ்ந்த கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டாள்.

"தம்பி! ஒரே ஒரு வாட்டி அந்தப் பச்சப்புள்ளைகளை எங்க கண்ணுலே கொணாந்து காட்டினாப் போதும்னு மருமகனுக்கு மனசைத் தொடராப்பல எழுதுப்பா. உனக்குப் புண்ணியம்... ஒவ்வொரு சமயம் நான் என்னையே நொந்துக்கறேன். பிள்ளைத்தாச்சிப் பெண்ணை சொம்பாலே மொத்து மொத்துன்னு மொத்தினேன், ஆத்திரத்திலே. இப்ப அவ ஒரே அடியா எங்களை வுட்டுப் போயிட்டா. பறிகொடுத்துட்டோமேன்னு மனசு துடிக்குது-" புலம்பினாள். அவள் கண்களில் கண்ணீர் பெருகிக் கன்னங்களை நனைத்தது. தையல் யந்திரத்தின் இழுப்பறையிலிருந்து, அந்த இன்லண்ட் கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார் ரங்கன். அவரது குரல் உணர்ச்சி வசத்தில் நடுங்கியது.



சொல்ல வேணுமென்று நினைத்த சங்கதியெல்லாம் நெஞ்சுக்குள்ளேயே தங்கிக் கொண்டது.

அவர் மருமகன் கல்கத்தாவைச் சேர்ந்தவன். நேத்தாஜி சாலையில் துணிக்கடையில் விற்பனையாளராக வேலை பார்த்து வந்தான். அவன் வட நாட்டுக்காரன். இவள் தமிழ் நாட்டுப் பெண். என்றாலும் இருவருக்கும் இள வயசு. பேச்சும் சிரிப்புமாக ஆரம்பித்த சிநேகிதம் நெருக்கமாகி விட்டது. ஒரு நாள் அவள் வேலைக்குப் போனவள் திரும்பவேயில்லை. அவனும் கடை வேலையை விட்டுத் திடீரென்று மாயமாக மறைந்து விட்டான்.

சௌந்தரிய குப்பமே திமிலோகப்பட்டது. தையற்காரர் மகள் ஓடிவிட்டாள். எங்கு திரும்பினாலும் இதே பேச்சு. பெற்றவர்களுக்குத் தலை நிமிர முடியாத அவமானம்.

குப்பத்துப் பெண் ஒருத்தியை வேறு ஊர்க்காரன் கடத்திக் கொண்டு போய்விட்டால் வாத்யார் துலுக்காணம் சும்மா இருந்து விடுவாரா? தமது சீடர் படையை நாலா பக்கமும் தேடி வர ஏவி விட்டார். பெண்ணைக் காணவில்லை என்று போலீசில் புகார் எழுதி வைத்தார். நான்கு மாதங்கள் விஷயம் கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது. திடீரென்று ஒரு நாள் மறுபடியும் குப்பத்திலே குபீரென்றதொரு வதந்தி. துலுக்காணத்தின் சீடர்களில் ஒருவன் பார்த்து விட்டான். சிந்தாதரிப்பேட்டையில் ஒரு சந்திலிருந்த வீட்டில் அவர்கள் வசித்துக் கொண்டு வந்தனர் என்றதொரு கதை பரவி விட்டது. நான்கு பேர்களுடன் வாத்யார் துலக்காணம் புறப்பட்டார். கையோடு அவர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டு வந்து பெற்றவர்களின் முன்னால் தள்ளினார்.

கல்யாணமாகாது கர்ப்பமாகிவிட்ட தன் பெண்ணைப் பார்த்த பெற்றவள் வயிறு பற்றி எரிந்தது.

எழுந்த ஆவேசத்தைக் கட்டுப்படுத்த முடியாது கையில் கண்டதைத் தூக்கிக் கொண்டு பெண்ணை நெருங்கினாள் அவள்.

"வுட்டுடு அம்மா வுட்டுடு" என்று மகளின் அலறல் குப்பத்தின் வெகு தொலைவுவரை எட்டியது. சில பெரிய தலைகள் அந்தக் காதலன் ஜீவன் தாசின் முதுகைப் பதம் பார்க்கத் தொடங்கின. முகத்திலே ரத்தம் வழிய எட்டு ஊர் கேட்க அவன் கதறினான். இடையே சமயத்தில் புகுந்து ராஜாபாதர் மட்டும் அடக்கியிருக்காவிடில் அன்று அங்கே இரு கொலை - குப்பமே போலீஸ் ஸ்டேஷனில் நிற்க வேண்டியதொரு பரிதாப நிலையும் ஏற்பட்டிருக்கும்.

பின்னர் வாத்யார் துலுக்காணம் - பெற்றவர்கள் - மற்றவர்கள் சிலர் எல்லோரும் கலந்து பேசினார்கள். உதை வாங்கிய காதலன் முடிவில் ஒப்புக் கொண்டான். ஜாதியாவது - வகுப்பாவது என்ற புரட்சிக் கொள்கைகளை நிலைநாட்ட, குப்பத்தின் முடிவிலிருந்த அங்காள பரமேஸ்வரியின் சந்நிதியில் அவர்களது கல்யாணம் சிறப்பாக நடந்தேறியது. சில நாட்களுக்குப் பின்னர் மனைவியுடன் அவன் தன் சொந்த ஊருக்குப் போய்விட்டான். முதலில், மகள் பெற்றவர்களுக்குக் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள். பின்னர் நீண்ட காலம் எந்தத் தகவலும் இல்லை. ஒரு நாள் திடீரென்று தமக்கு வந்த தந்தியை எடுத்துக் கொண்டு ராஜாபாதரிடம் ஓடி வந்தார் ரங்கன். அவன் படித்துச் சொன்ன சேதியைக் கேட்டுத் தந்தை அலறித் துடித்தார். தாய் வயிற்றிலடித்துக் கொண்டு கத்தினாள். இரண்டாவது பிள்ளைப் பேற்றில் அவர்கள் மகள் லீலா இறந்து விட்டாள் என்பதுதான் தந்தியின் செய்தி.

தையற்காரருக்கு ஆங்கிலம் - இந்தி - ஒன்றும் தெரியாது. அவரது மருமகனுக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. எனவே அவ்வப்போது ராஜாபாதர்தான் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவர்கள் சொன்னதைக் கடிதத்தில் எழுதிக் கொடுப்பது வழக்கம்.



அன்று அவன் எழுதியதை - தமிழில் மொழி பெயர்த்து அவர்களுக்கு வாசித்துக் காட்டினான். "மதிப்பிற்குரிய மருமகனுக்குப் பல ஆசிகள். பல கடிதங்கள் எழுதியும் உங்களிடமிருந்து பதில் வராதது மனதை வேதனை செய்கிறது. எனக்குத் தள்ளாமை அதிகமாகி விட்டது. உங்கள் மாமியார் உடம்புக்கு முடியாமப் படுத்து விட்டாங்க. எங்களால் இனி ஊர்ப்பயணம் செய்வது ஆகாத காரியம். தயவு செய்து பெரிய மனசு பண்ணி எங்கள் பேரப்பிள்ளைகளுடன் ஒரு பயணம் இந்தப் பக்கம் வர வேணும்னு கேட்டுக் கொள்கிறேன். அவர்களை ஒரு வாட்டி கண்ணாலே பார்த்தாலும் போதும் எங்க மகளை திரும்பப் பார்த்த சந்தோசத்திலே நாங்க அமைதியா கண்களை மூடிடுவோம்..."

மேல் துண்டால் ரங்கன் தமது கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் மனைவி விசித்து விசித்து அழுதாள்.

"தம்பி! நீ நல்லா இரு. இந்தக் கடிதாசியாவது அவன் கல்மனசை உருக்கட்டும். உன் கையாலேயே இதைத் தபாலில் போட்டுடுப்பா -" கும்பிட்டான் அவன்.

"கவலைப்படாதீங்க அம்மா. எல்லாத்துக்கும் வேளையும் காலமும் வரணுமில்லியா..." ஆறுதல் கூறி விட்டுக் கடிதத்தை சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

கொஞ்சத் தொலைவிலேயே மீன் வறுபடும் வாசனை. அவனுக்குப் பிடிக்காதது. மெல்ல நடந்து அப்பக்கார அலமேலு வீட்டின் அருகே நெருங்கினான்.

வெளித் திண்ணையிலேயே அவள் அந்திப்பொழுது அங்கே கூடப் போகிற வாடிக்கைக்காரர்களுக்குக் கறி வகைகள் சமைக்கத் தொடங்கிவிட்டிருந்தாள். பத்துத்தலை - ராவணன் தலை அடுப்பு பகபகவென்று எரிந்து கொண்டிருந்தது. காய்ந்து கமறிக் கொண்டிருந்த எண்ணெய்ச் சட்டியில் - மிளகாய்ச் சாந்து பூசிய மீன் துண்டங்களை அவள் பக்குவமாகப் பொரித்துக் கொண்டிருந்தாள். ஏற்கெனவே சுட்டு முடித்து எடுத்து வைத்திருந்த மிளகாய் பஜ்ஜி ஒரு கூடை நிறைய ஒரு பக்கம். செவேலென்று கண்ணைப் பறித்த முட்டைக் குழம்பு ஒரு சட்டி நிறைய இன்னொரு பக்கத்தில் - இன்னும் பக்கவடாம் - பூந்தி இத்யாதிகள் பல பாத்திரங்களில்.

"உட்காரய்யா. நீ மீனு திங்க மாட்டே - பெரிய சைவம் - பயப்படாதே - எண்ணெயிலே வேகிற மீன் உன்னைக் கடிச்சுடாது. சும்மா குந்து." படபடவென்று பேசிக் கொண்டு இடது கையால் முக்காலியை இழுத்துப் போட்டாள்.

மூக்கைப் பிடித்துக் கொள்ளாத குறை, உட்கார்ந்தான்.

"எங்கே இப்படி வோந்துக்குப் புறப்பட்டே? இன்னும் அந்தச் சிறுக்கி வீட்டுக்குப் போவலையா?..." விஷமமாகக் கேட்டாள் அவள்.

அலமேலு துலுக்காணத்தின் இளைய ராணி. தாலியில்லாமல் அவர் நிழலிலே தங்க வந்துவிட்டவள். அவள் கோபமாகக் குறிப்பிட்டது அவரது மனைவி என்ற உரிமைக்கு உரிய, தாலி கட்டிக் கைப் பிடித்த செங்கமலத்தைத்தான். எப்பொழுதும் அவர் மனைவி மீது அவளுக்குப் பொறாமை.

அலமேலு சண்டைக்காரி. அவளிடம் வாய் கொடுத்து மீள்வது ஆகாத காரியம். கோபம் வந்தால்



சேலைத் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு சோடா புட்டிகளுடன் கைகலப்பிற்கு நடுத்தெருவிற்கே வந்து நின்றுவிடும் ராக்ஷஷி அவள்.

"அதுக்கில்லை அண்ணி! பெரியவரும் இந்த தவா போலீசுக்குத் தப்ப முடியாம வசமா மாட்டிக்கிட்டு - மூணு வருசத்துக்கு உள்ள போயிட்டார். எத்தனையோ பெரிய கேஸ்களில் மிளகாத் தூளைக் கண்ணில் தூவித் தப்பிச்சுக் கிட்ட தலைவர், ஒரு சொத்தைக் கேசிலே நல்லா மாட்டிக்கிட்டார். ஆம்பிள்ளை அவர். ஜெயிலிலே விழுந்து பிரண்டு எப்படியோ வெளியே மனுசனா வந்துடுவார். ஆச்சு அவரு வர சமயம் நெருங்கிட்டு வருது. ஆனால் நீங்க..."

"பொம்பளை... தெரிஞ்ச விஷயம் - சுத்தி வளைக்காதே. நேரே விசயத்தைப் புட்டு வை..." அதட்டிக்கொண்டு வறுபட்ட மீன் துண்டங்களைச் சல்லிக்கரண்டியால் வாரிக் கூடைக்குள் போட்டாள்.

"ஃபாரின் சரக்கு புட்டி புட்டியா வீட்டுக்குள்ளே வச்சுக்கிட்டு இருக்கிங்க. போதாதத்துக்கு ரப்பர் பந்துலே வேற பட்டைச் சாராயம். கண்ட பசங்க இந்தப் பக்கம் இதுகளுக்காக வட்டமிடுகிறாங்க - கூட்டமாகக் கூடிவிடுகிறாங்க. நேத்து வந்த கூட்டத்திலே உதைபட்ட அந்த விஷமக்காரப் பயலுக போலீசுக்குத் தகவல் கொடுத்துட்டா உங்க சங்கதி?.."

"அடேயப்பா! போலீஸின்னா நான் பயந்துடு வேணா? எத்தனை போலீஸை நான் பார்த்திருப்பேன்..." சூள் கொட்டினாள் அவள்.

குட்டிச்சுவருடன் முட்டிக் கொள்வதற்குச் சமம்! எத்தனையோ தடவைகள் எச்சரித்துப் பார்த்துவிட்டான். பிடிவாதக்காரி. பிடிபிடியாகக் கழுத்திலே தங்கச் சங்கிலிகள், முழங்கை வரை கைகளில் தங்க வளைகள்...

எல்லாம் சாராயம் வித்த காசில் வந்தவை. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவள் பிடிபட்டுக் கம்பி எண்ணத்தான் போகிறாள்... கோயில் மாடாகச் சுத்தி வரும் மகளின் கதி!... யோசித்துக் கொண்டே எழுந்திருந்தான் அவன். "அந்த ராணி ஊட்டுக்குப் போறியா? அவரு மருமகள் ஊரிலிருந்து பச்சைப் புள்ளையைத் தூக்கிட்டு வந்திருக்கா - குப்பமே போய் கொளந்தையைப் பார்த்துட்டு வந்தாச்சு. ஒரு வார்த்தை நீ வா ஊட்டுக்குன்னு அவன் என்னைக் கூப்பிடலையே. திமிர் பிடிச்சவ, தலைவர் வெளியிலே வந்ததும் இந்தப் பண்ணாடையையா சட்டை செய்வார், அலமேலு காலைப் பிடிச்சுவிடு வலிக்குது. அலமேலு எண்ணெய் தேச்சு ஊத்து - அலமேலு மீன் குப்பு வச்சுக் கொடு அப்படின்னு இங்கதான் வந்து விழுந்து கிடப்பார். பேருக்குத்தானே இவ பொண்டாட்டி..." கோபத்துடன் கைகளை நெரித்துக் கொண்டு, அவனை உற்றுப் பார்த்தாள்.

"அண்ணனுக்கு உங்க மேலதான் ரொம்ப இது... தெரிஞ்ச கதைதானே - என்னத்துக்கு வீணே அவங்க மேலே காயறீங்க?" சிரித்துக் கொண்டே அவன் நகர்ந்தான்.

"இந்தாய்யா ஒரு துண்டு மீனைத்தான் தின்னு பாரேன். உங்கப்பா அந்தப் பாப்பார வீட்டுச் சோத்தைப் போட்டு உன்னைப் பருப்புத் தின்னிச் சாமியாராக்கி வச்சிருக்காங்க. வெளியூர் சரக்கு எப்படி இருக்கு தெரியுமா?" முட்டைக் கொழம்புலே ரொட்டியைத் தொட்டுக்கிட்டு அந்த விள்ளலைக் கொஞ்சம் [illegible] ஆகாசத்துலே பறக்கும்..."

"[illegible] இப்ப சத்தியா நடக்கட்டும்..." அந்த [illegible]..." [illegible] அவள் [illegible].



இன்னும் சில வீடுகளுக்கப்பால் துலுக்காணத்தின் பெரிய வீடு. தாலி கட்டிய செங்கமலம் : மகன் மன்னார் - மருமகள் எல்லோரும் வசித்த பெரிய வீடு - வெளியே பார்வைக்குத்தான் அது குடிசை. உள்ளே தரையில் இழைத்த மொசயிக் கற்களையெல்லாம் போட்டுத் தரையைப் பளபளவென்று இழைத்து விட்டிருந்தார். பட்டணவாசிகள் போன்று உள்ளே கட்டில் மெத்தை, கண்ணாடி பீரோ, நாற்காலி இவைகளுக்கு ஒன்றும் குறைச்சலிருக்க வில்லை. துலுக்காணத்தின் மகன் : படிப்பு வாசனையில்லாத மக்குப்பயல். மன்னார்தான் பெட்டிக் கடையைப் பார்த்துக் கொண்டிருந்தான். கிராமத்துக்குக் குழந்தைப் பேற்றுக்காகப் போயிருந்த மருமகள் சரோஜா ஆண் குழந்தையுடன் வீடு திரும்பியிருந்தாள்.

அருகேயிருந்த குலதெய்வம் அங்காள பரமேசுவரியைக் கும்பிட்டு விட்டு அப்பொழுதுதான் திரும்பிக் கொண்டிருந்தாள் செங்கமலம். பிரசாதத் தட்டைத் திண்ணை மீது வைத்துவிட்டுப் பெரு மூச்சுவிட்டாள். ஏற்கனவே பருமனான உடல். பேரன் பிறந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில் பூரித்து இப்பொழுது பீப்பாயாகி விட்டிருந்தாள். இடுப்புக்கும் பட்டையாக நரைத்து விட்ட முடியை அவள் அள்ளி முடிந்து கொண்டிருந்தாள். மஞ்சள் பூசிக் குங்குமமிட்ட நெற்றியில் - குங்குமம் நெற்றி வியர்வையில் கரைந்து விட்டிருந்தது. காது கம்மல்களும் - மூக்குத்திகளும் வெளிச்சத்தில் டால் அடிக்க, பற்கள் பளிச்சிட அவள், "வாங்கய்யா... என் பேரப் பிள்ளையைப் பார்க்க உனக்குப் பொழுதேயில்லையா...!" அன்புடன் உபசரித்தாள். திண்ணை மீது அவன் உட்கார்ந்து கொண்டான். உள்ளே தொட்டிலில் கிடந்த பேரனை அள்ளிக்கொண்டு வந்து அவனுக்குக் காட்டி மகிழ்ந்து போனாள். மருமகளிடம்

குழந்தையைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்று தகர டப்பா ஒன்றை எடுத்து வந்தாள்.

''மருமகள் பிறந்த வூட்டிலிருந்து கேவுரு கொண்டாந்தது. அரைச்சு வச்சேன். உங்கம்மாவுக்கு இதிலே கொஞ்சம் எடுத்து வைச்சிருக்கேன். காலையிலே கேவுருக் கூழு காச்சி பாலை ஊத்திச் சாப்பிட்டா இருமல் நின்னுடும்'' அவன் அருகே டப்பாவை வைத்தாள். ராஜாபாதர் விரக்தியுடன் புன்னகைத்தான். சில நாட்களுக்கு முன்னர்தான் கடைசி முறையாகத் தன் தாயை அவன் வைத்தியரிடம் அழைத்துச் சென்றிருந்தான்.

''நோய் ரொம்ப முற்றிவிட்டது. ஊசி போட்டாலும் இனி பயன் இல்லை.'' வைத்தியர் கையை விரித்து விட்டார்.

எந்த மருந்துக்கும் கேட்காத அந்தப் பாழும் இருமல், கேவுரு கூழுக்கா கேட்கப் போவுது? துயரத்துடன் பெரு மூச்செறிந்தான். ''ரொம்ப நன்றி அண்ணி!''

''நீ எங்களுக்கு எத்தனை உபகாரம் பண்றே. அடிக்கடி வந்து கவினிச்சுக்கிறே. இது என்ன பெறும்? அரைப்படி மாவு அவ்வளவுதான். இரு சித்தே. அம்மனுக்கு மாவிளக்குப் போட்டேன். நோய் நொடியில்லாம அவர் ஜெயிலிருந்து வரணும் தாயேன்னு பிரார்த்தனை செஞ்சுக்கிட்டேன். இந்த வம்புவழக்கு இதுகளை வுட்டுவுட்டு அவர் ஊட்டோடே சும்மா இருந்தாலே போதும். இருக்கறதை வச்சுக்கிட்டு எப்படியெல்லாமோ இருக்கலாம். எப்பப் பார்த்தாலும் வயித்துலே நெருப்பைக் கட்டிக்கினு இப்படி வாழுகிறது எனக்குப் புடிக்கவேயில்லை. தம்பி நீதான் அவருக்குப் புத்தி சொல்லணும். இப்ப இந்த மூணு வருசமா நீ வாத்யாரா இந்தக் குப்பத்திலே இருக்கே. தப்புத்தண்டா எதுக்கும் போறியா? ராத்திரிதான் அந்தப் பாவிப்



பசங்களால் கொஞ்சம் கலாட்டா நடந்துடுச்சு. அது வேறே விசயம் தம்பி! நீ சொன்னாத்தான் அவர் கேட்பார். நான் சொன்னா கையிலே அருவாளை எடுத்துக்குவார். நான் என்ன பண்ணுவேன்? தாலி கட்டின புருசன் திருடனோ குடிகாரனோ கொலைகாரனோ எனக்கு அவர்தானே தெய்வம்.'' படபட வென்று பொரிந்து கொட்டினாள். கலங்கிவிட்ட தன் கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். தட்டிலிருந்து இரண்டு வாழைப்பழங்களையும் ஒரு பிடி மாவிளக்கு மாவையும் அவனுக்கு எடுத்துக் கொடுத்தாள். உள்ளே சென்று ஒரு வெண்கலச் செம்பில் குடிநீர் முகந்து கொண்டு வந்து அவன் அருகில் வைத்தாள்.

வெகுநேரம் அவன் அங்கே உட்கார்ந்து அவளுடன் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தான். பின்னர் எழுந்து மெல்லக் கிளம்பினான்.

வீட்டிற்கு வந்து கதவை லேசாகத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அவன் தாய் உறங்கிக் கொண்டிருந்தாள். மாவு டப்பாவை மெல்லத் தரையில் ஒரு மூலையில் வைத்து விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு கிளம்பினான். குப்பத்தைத் தாண்டிச் சாலையை நோக்கி நடந்தான். சற்றுத் தொலைவில்தான் நாயரின் டீக்கடை இருந்தது. அந்த வட்டாரத்திலே அவர் கடை டீ பிரசித்தி பெற்றது. சிங்கிள் டீ பதினைந்து பைசா ஒரு பன் நாற்பது பைசா. கணக்கிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்து பெஞ்சின்மீது உட்கார்ந்து கொண்டான்.

இன்னும் கொஞ்சம் நாட்களுக்குத்தான் இந்த போக பாக்யமெல்லாம்; அதற்குப்பின் பதவி போய்விடும். பையில் குலுங்கும் பணமும் போய்விடும்; நினைத்த போது நாயர் கடையில் சிங்கள் டீ வாங்கிக் குடிக்கக் கையில் காசிருக்காது. அவன் தாய் சொல்வது போல்

இப்பவே பிடித்து அவன் வேலை தேட முயற்சிக்க வேண்டும். பன்னைக் கடித்துக் கொண்டு கண்ணாடி டம்ளரிலிருந்த டீயை உறிஞ்சிக் குடித்தான்.

''ஏ தங்கமணி! இப்படி வா, பஸ் இந்தப் பக்கம் வரது. பார்த்து நட கழுதை...'' யாரோ ஒரு ஆணின் அதட்டல் குரல்...

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. அந்தப் பெயருக்குத்தான் எத்தனை சக்தி? மின்விசையில் தாக்குண்டவன் போல் அயர்ந்து போய் குரல் வந்த திசையில் பார்த்தான். வெளியே சாலையில் ஐந்து வயதுப் பெண் ஒருத்தி, இடது கரத்தில் பாவாடை நுனியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு - மிரட்சியுடன் குறுக்கும் நெடுக்கும் சென்ற வாகனங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

''தங்கமணி இப்ப நட...'' அதட்டினான் தந்தை - அவள் ஒரே ஓட்டமாகத் தெருவைக் கடக்க முயன்று கொண்டிருதாள். அந்தக் கபடமற்ற முகம் - கண்களில் திரண்டு நின்ற கலக்கம்... சின்னஞ்சிறு கரங்களில் குலுங்கிய கண்ணாடி வளைகள் எல்லாம் சங்கிலித் தொடர்போல் அவன் உள்ளத்திலே துன்பச் சிந்தனைகளை புரட்டி எழுப்பின. நெஞ்சை என்னவோ இருக்கியது போன்ற வேதனை. கடைசி வாய் பன்னைக்கடித்து விழுங்கிவிட்டு டீயை ஒரே மூச்சில் பருகி விட்டு எழுந்திருந்தான். பணத்தை எண்ணி நாயர் மேசை மீது வைத்து விட்டுச் சாலையைக் கடந்து குப்பத்திற்குத் திரும்பினான்.

''மல்லீப்பூ... மல்லீப்பூ!...'' கூடையொன்றில் கட்டவிழ்ந்த மல்லிகை மலர்ப் பந்துகளைத் தூக்கிக் கொண்டு பூக்காரன் குப்பத்திற்குள்ளே ஓடிக் கொண்டிருந்தான். கம்மென்று மல்லிகை மலரின் மணம்



தெரு முழுவதும் காற்றோடு கலந்து பரவியது... அத்துடன் அவன் உடம்பைச் சிலிர்க்க வைத்தது ஒரு நினைவு.

தங்கமணிக்கு மல்லிகை மலர் என்றால் எத்தனை ஆசை?

இன்னமும் பூரா இருட்டத் தொடங்கலை. கட்டிலை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். ஏதோ நினைவுடன் எதிர்சாரியில் கண்களை ஓட்டினான்.

மூலை வீட்டுப் பெண் வாயிலில் கிடந்த அம்மியில் குழம்புக்கு மசாலா அரைத்துக் கொண்டிருந்தாள் - அடிக்கடி குப்பத்து வீடுகளில் அந்தி வேளையிலே அவன் காணும் காட்சிதான் அது. ஆனால் இன்று அவன் உள்ளத்தில் அன்று நடந்த ஒரு நிகழ்ச்சியின் நினைவு ஏனோ நிழலாடியது.

தங்கமணியும் அவள் தாயும் அவர்கள் வீட்டுக்கு எதிரேயிருந்த குடிசையின் தாழ்வாரத்தில்தான் வந்து குடியேறினார்கள். பல இடங்களில் வசிக்கத் தக்க இடமின்றி அவதிப்பட்டு முடிவில்தான் அவர்கள் சௌந்தரிய குப்பத்திற்கு வந்து சேர்ந்துவிட்டிருந்தனர். குப்பத்துக்குப் புதிதாக யார் வந்தாலும் - வாத்தியாரின் சீடர்களுக்கு விவரம் தெரிந்தாக வேண்டும்.

தாயார் விதவை. மகள் கீழ்ப்பாக்கத்திலிருந்த ஒரு தனியார் மருத்துவமனையில் ஆயா வேலை செய்து கொண்டிருந்தாள். அவர்களுக்கு வேறு யாரும் கிடையாது. அவ்வளவுதான் அவர்களைப் பற்றிய கதை.

காலையில் விடியுமுன்பே புறப்பட்டு அவள் வேலைக்குப் போய்விடுவாள். இரவு வெகுநேரம் கழித்துத் திரும்புவது வழக்கம். அவள் புறப்படும் போதும் சரி - திரும்பும் போதும் சரி - எல்லா வேலைகளையும் விட்டு - கட்டிலின் மீது உட்கார்ந்தபடி கண் கொட்டாது

அவன் பார்த்துக் கொண்டேயிருப்பாள். ஞாயிற்றுக் கிழமைகளில் அவன் வேலைக்குப் போகமாட்டான். மாலை வெய்யில் மங்கும் வேளையில் தாயாருக்கு உதவியாகக் குழம்புக்கு மசாலா அரைக்க வாயிலுக்கு வந்துவிடுவாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை. தலைப்பின்னல் தரையைத் தொட கைவளைகள் கலுக்சலுக்கென்று சப்திக்க அவள் மண்டியிட்டு உட்கார்ந்தபடி மசாலா அரைத்துக் கொண்டிருந்தாள். அந்த அழகைக் கட்டிலின் மீது புத்தகமொன்றைப் புரட்டிக்கொண்டு கடைக் கண்ணால் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் ராஜாபாதர்.

"ஐயோ தேளு தேளு" அலறிக்கொண்டு அவள் எழுந்து அப்பால் குதித்தாள். புடவைத் தலைப்பை உதறிக் கொண்டு பீதியுடன் நின்றாள். அவ்வளவுதான் - ஆண்சிங்கம் அவன் - ஒரே பாய்ச்சலாக ஓடிவந்து அருகில் நின்றான். அம்மியின் அருகே கொடுக்கைத் தூக்கிக் கொண்டு தெருவை நோக்கி ஊர்ந்த தேளைக் கண்டுவிட்டான். கால் செருப்பைக் கழற்றி அதன் தலையில் ஒரு போடு போட்டான். அடுத்தகணம் தேள் தூளாகிவிட்டது.

"ரொம்பப் பயந்துட்டியா...?" முதன் முதலில் அவன் அவளிடம் பேசினான். லேசாக அவள் சிரித்தாள். கண்களில் மகிழ்ச்சியின் பளபளப்பு. "நான் முதல்லே பார்க்கலை..." அவளது கன்னங்களில் மெல்லிய சிவப்பு.

முதன் முதலாக அவளுடன் பேசிவிட்ட ஆனந்தத்திலே நெஞ்சு படபடத்தது அவனுக்கு.

"பராக்குப் பார்த்துக் கிட்டிருந்தியா?" வேடிக்கையாகப் புன்னகைத்தான்.

"நான் ரொம்ப நேரம் நீங்க என்ன புத்தகம் படிக்கிறீங்கன்னு அட்டையை பார்க்க முயற்சித்துக்



கிட்டிருந்தேன். சும்மா நீங்க அதைப் புரட்டியதினாலே என்ன புத்தகம்னு தெரியலை... அதுக்குள்ளே தேளைப் பார்த்துட்டேன்..." மேலே அவள் பேசுமுன் அவளது தாய் உள்ளிருந்து ஓடி வந்து விட்டாள்.

பார்வைகள் - புன்சிரிப்புகள் - தமக்குள்ளே கற்பனைகள் என்ற விதத்தில் அவர்களிடையே நாட்கள் பல நழுவின - எதிர் வீட்டுக்காரியுடன் அவன் தாய் தானே வலிய வந்து நட்புரிமை பாராட்டினாள். ஒரு சமயம் சம்பகம் காய்ச்சலாகப் படுத்துவிட்டபோது தங்கமணியின் தாய் தான் வீட்டைக் கூட்டி - பாத்திரங்களைத் துலக்கி ஒழுங்குபடுத்தினாள். ஒரு நாள் எதிர்பாராத விதமாக அவர்கள் இருவரும் பேசிக்கொண்டது அவன் காதுகளில் விழுந்து விட்டது. "பெருக்கேத்தபடி உன் மகன் ராசாவாட்டந்தான் இருக்கிறான். முயற்சி பண்ணினா நல்ல இடத்திலே வேலை கிடைக்கும். படிச்ச பையன் - இவனைக் கட்டிக்க என் மகளுக்குக் கசக்கவா போகுது-"

அன்று இரவு அவன் வேலையிலிருந்து திரும்புமுன் - சாலையில் பாதி வழியில் அவளைச் சந்தித்தான்.

"இந்தா நில்லு. இருட்டிலே எத்தனை வேகமாக நடக்கிறே..." அதட்டினான் ஆசையுடன்.

"நீங்களா! பயந்து பூட்டேன். அப்பப்பா" போலியாக கோபித்துக் கொண்டு அவள் விளக்குக் கம்பத்தடியில் நின்றாள்.

"பராபரியாய் பெரியவங்க நம்பளைப் பத்தி என்ன பேசிக்கிறாங்கன்னு உனக்குத் தெரியுமா?..." கேட்டு விட்டு அருகில் நெருங்கி அவள் கரத்தைப் பற்றினான்.

"நடு ரோட்டிலே நடந்துக்கிற முறையா இது - கையை வுடு." உதறி விடுவித்துக் கொண்டாள்.

"வெற்றிலை பாக்கு பழம் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு

முறைப்படி எங்க ஊட்டுக்கு வந்து அம்மாகிட்ட கேட்டா பதில் கிடைக்கும்.'' சிரித்து மழுப்பிக்கொண்டு அவள் வேகமாக நடந்தாள்.

இன்னொரு நாள் அவன் தாய் கோவிலுக்குப் போயிருந்தாள். அவளைத் தேடிக் கொண்டு தங்கமணி உள்ளே வந்து விட்டாள். சட்டென்று கதவைச் சாத்திக் கொண்டு அவன் அவளைப் போகவிடாது வேடிக்கையாக வம்பு செய்தான்.

''இன்னிக்கு உண்மை தெரிஞ்சாகணும். பாக்கு வெத்திலையோட எங்கம்மா முறைப்படி வந்து கேட்டாச்சு... இப்போ உன் பதில் என்ன? இந்த ஐயாவுக்குச் சொல்லிட்டு அப்பால் போ - அது வரை போக முடியாது...'' எட்டி, கைநீட்டி அவள் தாவணியைப் பிடித்து அவளைத் தன் அருகே அழைத்துக் கொண்டான். ''வாத்தியார் துலுக்காணம் - அவர் பெண்ஜாதி - அம்மா எல்லோரும் முறைப்படி வந்து கேட்டாங்க. நானும் தலையை ஆட்டிட்டேன். தை பிறந்ததும் அங்காள பரமேஸ்வரி சந்நிதியிலே இந்த ஐயா இந்த தங்கமணிக்கு தாலி கட்டப் போகிறார். அதுக்குள்ளே அப்பப்பா... பொல்லாத ஆளு...''சிணுங்கிக் கொண்டு சேலைத் தலைப்பை இழுத்து உருவிக் கொண்டு சிட்டாகப் பறந்தோடி விட்டாள். மகிழ்ச்சிக் கடலுக்குள்ளே அவன் மூழ்கிவிட்டான்.

அந்த நன்னாளை எண்ணி அவன் கண்ட கனவுகள் - உறக்கமில்லாது கட்டிலில் புரண்டபடியே கட்டிய கோட்டைகள் எத்தனையோ? விஷயம் விரைவில் குப்பம் முழுவதும் பரவிவிட்டது. புதிதாகக் குடியேறிய தங்கமணியை - ராஜாபாதர் விரும்புகிறான். திருமணத்தை விரைவில் நடத்தி வைக்க வாத்தியார் பணம் திரட்டப் புறப்பட்டுவிட்டார்... என்ற செய்தி நெருப்பாகப் பரவிவிட்டது.



அதற்குப் பின்னர் அவர்களிருவரும் நெருக்கமாகப் பழகத் தொடங்கினர். விடுமுறை நாட்களில் அவன் அவளை சினிமாவுக்குக் கூட்டிச் சென்றான். கடற்கரைக்கு ஜோடியாக நடந்து சென்று காத்து வாங்கிவிட்டு வந்தனர்... சில நாட்களில் இரவில் அவர்கள் வீட்டிலேயே அவனுக்குச் சாப்பாடு.

கல்யாணத்திற்குச் சில தினங்கள் தானிருந்தன. அந்த மாதம் அவன் சம்பாதித்த பணம் முழுவதையும் போட்டு அவள் ஆசைப்பட்ட ஆரஞ்சு வண்ண பனாரஸ் பட்டுச் சேலையைக் கூரைக்கு எடுத்திருந்தான். செங்கமலம் தன் செலவில் தாலி செய்து கொடுத்திருந்தாள். கல்யாணத் திற்குச் சில நாட்களுக்கு முன்னதாக வேலையினின்று அவள் லீவு எடுத்துக் கொண்டாள். அன்று மாலை வீடு திரும்பியவள் தாங்க முடியாத தலை நோவுடன் படுத்துவிட்டாள். மறு நாள் உக்கிரமான காய்ச்சல். அடுத்த நாள் - அதற்கடுத்த நாளும் காய்ச்சலின் உக்கிரம் தணியவேயில்லை. பயந்து விட்டனர் அவர்கள். துலுக்காணத்தின் உத்தரவுப்படியே அவள் வேலை செய்த தனியார் மருத்துவமனையிலே அவளை டாக்சியில் எடுத்துச் சென்று உள்ளே அனுமதித்தார்கள். கல்யாணச் செலவிற்காகத் தலைவரிடம் முன்னூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான் ராஜாபாதர். அத்தனையும் செலவழித்துச் சிகிச்சை செய்தும் பயன் இருக்கவில்லை. மணப் பெண்ணாக அவன் அருகே உட்கார வேண்டிய அந்த நாள் அன்று தங்கமணியைப் பிணமாக அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து வந்தார்கள். அதற்குப் பின் நடந்தது எல்லாம் அவனால் மறக்க முடியாத துன்ப நினைவாக நெஞ்சோடு ஒட்டிக் கொண்டு விட்டன.

அவளுக்காக வாங்கிய கூரைப் புடவையை அவளது உடல் மீது போர்த்தியிருந்தனர். மணமகளாக எதிரே வந்து நிற்கப்போகும் அவள் கழுத்திலே போடத் தயாராக

வைத்திருந்த அந்தப் பெரிய மல்லிகை மலர் மாலையை ராஜாபாதர் அவளது பிணத்திற்குப் போட்டான். துலுக்காணத்தின் ஏற்பாடுபடியே - அவனே நெருப்புச் சட்டியைச் சுமந்து கொண்டு துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு பாடையின் முன்னால் நடந்தான்.

மஞ்சளும் குங்குமமுமாக - கழுத்து நிறைய மாலையுடன் பட்டுப்புடவை அணிந்து அவள் - சாவிலும் அழகாகவேதான் இருந்தாள்.

மூலை வீட்டுப் பெண் மசாலா அரைத்து அம்மியை உருட்டும் சப்தம் கேட்டது. தொடர்ந்து வளையல்கள் சலக்சலக்கென்று சப்தித்தன. எத்தனையோ துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் கலங்காதவன் ராஜாபாதர். அஞ்சாத சிங்கம் என்று பெயர் எடுத்தான். அந்த சிங்கத்தின் கண்கள் - காதலியின் நினைவால் இப்போது கலங்கின. சூடான இரு துளிக் கண்ணீர் பொட்டென்று கரத்தின் மீது விழுந்தது. நெஞ்சே விரிந்துவிடும் போன்றதொரு வேதனை.

துலுக்காணமோ - அவன் தாயோ - மற்றும் குப்பத்தில் உள்ள எவருமோ அவனைப் புரிந்து கொள்ளவே முடியாது. இரண்டு வீடுகள் வைத்துக் கொண்டு வாழும் துலுக்காணத்திற்குக் காதலைப் பற்றி என்ன தெரியும்? தங்கமணியும் அவனும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த அந்த ஆழமான அன்பை யாருமே புரிந்து கொள்ளவே முடியாது.

கல்யாணத்திற்கு முன்பே, அவளுக்கு நெருப்பைத் தன் கையால் போட்டுவிட்ட அன்றே, அவன் முடிவு செய்து விட்டிருந்தான். தங்கமணியை விரும்பி நேசித்த அந்த மனசால் இன்னொருத்தியை அவன் நினைக்கத்தான் இனி முடியுமா? அவனுக்குக் கல்யாணமா? அது நடவாத காரியம்.



## 3

விடிந்து வெகு நேரமாகியும் வழக்கத்துக்கு மீறித் தன் மகன் கட்டிலின் மீது புரண்டு கொண்டிருப்பதைக் கண்டாள் சம்பகம். இருமிக் கொண்டு மெல்ல எழுந்து வந்தாள். இடுப்பிலே லுங்கி மட்டும் தரித்துக்கொண்டு, காலோடு தலை துப்பட்டியால் போர்த்திக் கொண்டிருந்த ராஜாபாதர் முனகுவது கேட்டது. தாய் பதைத்துப் போனாள்.

''ஏலே! டேய்! என்னடா ராஜா'' மெல்ல அருகில் வந்து துப்பட்டியை இழுத்து அப்பால் போட்டாள். நெற்றி மீது கையை வைத்துப் பார்த்தாள். லேசான காய்ச்சல்.

''தொடாதீங்க வலிக்குது!'' மகன் அரற்றியபோது தான் அவள் பார்வை அந்தக் காயத்தின் மீது பட்டது. முதல் நாள் காலை மெல்லிய வெறும் கீறல்கள் போல் வலது முழங்கைக்கு மேலே காணப்பட்ட அந்தக் காயம் இப்போது சீறிச் சிவந்து கொண்டுவிட்டிருந்தது. சீழ்க் கட்டிக் கொண்டும் விட்டிருந்தது. அத்துடன் கையிலும் வீக்கம்.

''சொன்னதைக் கேட்டியாடா? அந்தப் பாவிகள் நகத்திலே கீரிவிட்டுப் போனது எப்படியாயிடிச்சு? நகம்பட்டால் விஷமாச்சே?'' விடிந்ததும் விடியாததுமாக அவள் உரத்து கூவிப் புலம்பத் தொடங்கி விட்டாள்.

இரவு முழுவதும் காயத்தின் வேதனையினால் புரண்டு தூக்கமின்றித் தவித்த அவனுக்குத் தலைவலி பிளந்து கொண்டிருந்தது.

''ஸ்! அம்மா! கத்தாதீங்க. இப்போ வொண்ணும் குடி முழுகிப் போகலை... நம்ப டாக்டர் ஐயாகிட்ட

காட்டினா ஏதாச்சும் கொடுப்பார்...'' எரிச்சலுடன் சீறினான்.

''டேய்! ஊசி கீசி போடம்னுனா பணத்தைப் பாக்கதேடா. போட்டுக்கோ...'' தொடர்ந்து புலம்பித் தவித்தாள் அவள்.

படுக்கையினின்று எழுந்து உள்ளே சென்று பல் துலக்கி முகத்தைக் கழுவிக் கொண்டான். விரைவாக உடையை மாற்றிக் கொண்டான்.

''காப்பி கொஞ்சம் வச்சுத் தரவா?''

''வேண்டாம் நாயர் கடையிலே முடிச்சிக்கிறேன். நீங்க உங்களைக் கவனிச்சுக்கிட்டா போதும். உட்கார்ந்து மட்டும் புலம்ப வேணாம். இப்ப எனக்கு ஒண்ணும் உசிரு போயிடலை - '' சற்றுக் கோபமாகப் பேசி விட்டு அவன் குடிசையை விட்டு வெளியே வந்தான்.

சற்றுத் தொலைவில் அவனைத் தேடிக்கொண்டு பூமா வருவதைப் பார்த்ததும் அவனுக்கு எரிச்சல் தாள முடியவில்லை. பாராதவன் போல் வேகமாக நடையைத் துரிதப்படுத்தினான்.

குப்பத்துக்கு அருகேயிருந்த சாலையின் எதிர்ப்புறத்தில் உள்ளே சென்ற ஒரு தெருவில் சில வீடுகள். அந்தக் காலத்தில் கட்டியவை. சிலவற்றைச் சொந்தக்காரர்கள் புதுப்பித்துக் கொண்டு விட்டிருந்தனர். டாக்டர் ஏகாம்பரத்தின் வீடு அதே பழைய நிலையில்தான் இருந்தது. இடிபாடுகளுடன் கூடிய காம்பௌண்ட் சுவரில் வாயிற்புறத்திலே டாக்டர் ஏகாம்பரம் எம்.பி.பி.எஸ். என்ற பெயர் பொறித்த சாயமிழந்த பலகையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. புல்லும் புதரும் மண்டிக் கிடந்த சிறு தோட்டத்திற்குள்ளே பாசிப் படல மச்சுடன் விளங்கிய சிறு மாடிக் கட்டிடந்தான்



அவர் வீடு. வராந்தாவில் கிடந்த பெஞ்சி மீது ராஜாபாதர் வந்து உட்கார்ந்து கொண்டான். அவர் குப்பத்து மனிதர்களை மிகவும் அன்புடன் கவனிக்கும் வைத்தியர் என்று அந்த வட்டாரத்திலே பிரசித்தம். அரசியலார் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்துவிட்டு ஓய்வுபெற்ற பின்னர் தொடர்ந்து சொந்தமாகத் தொழிலைத் தமது வீட்டின் முன்பக்கத்து அறையிலேயே வைத்துக் கொண்டிருந்தார். ஏழை எளியவர்களுக்கு இனாமாக வைத்தியம் பார்த்த பயனால் அவர் பெயர் குப்பத்திலே பரவி விரைவில் அவரது பரிசோதனை அறைக்கு முன் பெரியதொரு கியூ வரிசை தினசரி திரளத் தொடங்கி விட்டிருந்தது. சில வருஷங்கள் ஏற்பட்ட பழக்கத்திலே அவருக்கு சௌந்தரிய குப்பத்திலிருந்த அத்தனை பெயரையும் நன்கு தெரியும்.

அன்று காலை வராந்தாவில் அதிகக் கூட்டம் இருக்கவில்லை. வந்திருந்தவர்களைக் கவனித்து விட்டு - வெளியே வந்து அவர் எட்டிப் பார்த்தார். முக்கலும் முனகலுமாக ராஜாபாதர் வலது கையை இடது கையால் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காண அவருக்கு வியப்பு.

''என்ன வாத்தியாரே? காயம் ரொம்பப் பலமோ? விசாரித்துவிட்டு உள்ளே வரும்படி சைகை செய்தார்.

காயத்தைப் பரிசோதித்தபடியே அவர் பேசினார்.

''முந்தா நாள் குப்பத்திலே பெரிய சண்டையாமே... அதிலே நீ புகுந்து விளையாடினாயாமே?... ஏண்டா உனக்கு இந்த தலையெழுத்து?...'' பல வருஷங்களாகத் தெரியும் என்றதொரு உரிமை, அதட்டினார். அவன் தாய் உடல்நிலை நன்றாக இருந்த காலத்தில் வேலை பார்த்து வந்த வீடுகளில் ஏகாம்பரத்தின் வீடும் ஒன்று.

''அதெல்லாம் பெரிய கதை - சாவகாசமாகச் சொல்றேன்...''

''துலுக்காணம் கூடச் சிலநாளில் வெளிவரு போகிறதாகக் கேள்விப்பட்டேன்... அப்போ நீ என்ன செய்யப் போறே?'' கேட்டுக் கொண்டே டாக்டர் நறுக்கென்று ஊசி மருந்தைத் தோள்பட்டையில் செலுத்தினார். காயத்தின் மீது மருந்து பூசி, பஞ்சு வைத்து - பிளாஸ்திரித் துண்டுகளை ஒன்றோடு ஒன்று குறுக்காக ஒட்டினார்.

''இந்த மாத்திரைகளை - ஆறு மணிக்கு ஒன்னுன்னு சாப்பிடு - வாய்க்குப் புடிச்ச ஆகாரத்தை ஜமாய். நான் கேட்ட கேள்விக்குப் பதிலைக் காணோமே...? ...ம்!'' கேட்டுக்கொண்டே வாஷ் பேசினில் கையைக் கழுவிக் கொண்டார்.

சோதனை பெஞ்சிலிருந்து எழுந்து இறங்கி நின்றான் ராஜாபாதர். சட்டைப் பையைத் துழாவி - ஐந்து ஒத்தை ரூபாய் நோட்டுகளை எடுத்து மேஜை மீது வைத்து விட்டுக் கிளம்ப ஆயத்தமானான். மூன்று ரூபாய்களை எடுத்து மேஜை மீது இருந்த உண்டி போன்றதொரு தகர டின்னிற்குள் போட்டார் ஏகாம்பரம்.

''இந்தா இதைப் பிடி... இந்த மருந்துக்கெல்லாம் மூணு ரூபாய்தான் ஆச்சு. மீதி இரண்டு என்னத்துக்கு? நான் என் சேவைக்கு பீஸ் வாங்கிறதில்லைன்னு உனக்குத் தெரிஞ்ச சங்கதிதானே? நாளைக்கு மறுபடியும் இங்கே வந்து கொஞ்சம் கையைக் காட்டிட்டுப் போ... ஊர்வம்பு உனக்கு அல்வா சாப்பிடறது போல ஆச்சு. எஸ்.எஸ்.சி.யைத் தாண்டியிருந்தாலாவது எங்கேயாவது ஒரு நல்ல இடத்தில் இழுத்து விட்டிருப்பேன். ஒரு இடத்திலும் நிலைக்கிற புத்தியும் உங்கிட்ட கிடையாது. ஏன்தான் இப்படிப் பரபரன்னு அலைகிறாயோ தெரியலை...'' சூள் கொட்டினார் அவர்.



தயக்கத்துடன் அந்த ரூபாய் நோட்டுகளை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டான். டாக்டர் ஏகாம்பரம் அவனுக்குப் பலமுறை இனாமாகச் சிகிச்சை அளித்திருக்கிறார். அவன் தாயைக் கவனித்து வைத்திய உதவி தந்திருக்கிறார். அதற்குப் பதிலாக அவன் அவரது தோட்டத்தை அவ்வப்போது வந்து கொத்தி சீர்படுத்திவிட்டுப் போவது வழக்கம். துலுக்காணத்தின் தலைவர் பதவியை ஏற்ற பின்பு அவனுக்குச் சில்லரை வேலைகள் செய்யப் பொழுது இருக்கவில்லை. குற்ற உணர்வுடன் புதர் மண்டிக் கிடந்த தோட்டத்தைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு மிகவும் வெட்கமாகத் தானிருந்தது. ''சின்னப் பையன் ஆறுமுகத்தை அனுப்பினேனே! அவன் வரவில்லையா?'' வியப்புடன் கேட்டான். ஆறுமுகம் அவனது சீடர் படையின் கடைசித் தொண்டன். சமீபத்தில் தான் வந்து சேர்ந்தவன். டாக்டர் உரத்து ''ஹோ... ஹோ...'' என்று சிரித்தார். ''யாரு, புதன்கிழமை அனுப்பினியே ஒரு பதினைஞ்சு வயசுப் பயல்... அவன் வந்ததும் மண் வெட்டி எங்கே - கடப்பாரையைக் கொடுங்க - மோவர் இருக்கா அப்படின்னு குடைஞ்சு தள்ளிட்டான். கார் ஷெட்டைத் திறந்து அவன் கேட்ட சாமான்களை நான் எடுத்துக் கொடுத்தேன். சித்த நேரம் தோட்டத்திலே இங்கு மங்கும் போய்க் கொண்டிருந்தான். உள்ளே போய் நான் காப்பி சாப்பிட்டுவிட்டு வரத்துக்குள்ளே ஆள் கம்பியாகிட்டான்...'' சிரித்தார் அவர் மீண்டும்.

அது சமயம் உள்ளேயிருந்து வந்த அவர் மனைவி ஜானகி அம்மாள் கோபத்துடன் பேசினாள்.

''ராஜாபாதர் நமக்கு முன்னே தெரியாதவனா? ஏன் மறைக்கிறேள்? நடந்ததைச் சொல்லுங்கோ, அவர் சொல்லாட்டா போகட்டும் நான் சொல்றேன்... அந்த

ஆறுமுகம் பக்காத் திருடன். வந்த சித்த நாழிக்கெல்லாம் தோட்டத்துக் கிணத்துப் பம்பிலிருந்த வீல்வால்வைக் கழற்றிண்டு போயிட்டான் மகாராஜன். இப்போவெல்லாம் அது என்ன விலை தெரியுமோன்னோ?''

ராஜாபாதர் அவமானத்தில் குன்றிப் போனான். கோபத்திலே துடிதுடித்தான். அவன் நம்பி அனுப்பிய ஆறுமுகம் குப்பத்துக்காக உழைக்கும் வைத்தியர் வீட்டிலேயே திருடியிருக்கிறானே? அவனை என்ன செய்தால் என்ன? பற்களைக் கடித்துக் கொண்டான்.

''அவ கிடக்கா. நீ இதைப் பெரிசா எடுத்துக்க வேண்டாம். நாளைக்கு மறக்காம வந்து காயத்தைக் காட்டிட்டுப் போ...'' விடை கொடுத்தார் வைத்தியர்.

ஆத்திரம் உந்த ஒரே மூச்சாக அவன் குப்பத்தை நோக்கி நடந்தான். பொடிப்பயல் ஆறுமுகம் குடிசையின் வாயில் முன்னால் பாயின் மீது சுருண்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். நாய்க்குட்டியின் காதுகளைப் பிடித்துத் தூக்குவது போல், இடது கையை நீட்டிக் குனிந்து பையனின் கிராப்பு முடியைப் பற்றி ஒரு குலுக்குக் குலுக்கி எழுப்பி நிற்க வைத்தான்.

''ஐயோ! அப்பா!'' என்று சிறுவன் போட்ட கூச்சலைக் கேட்டுப் புடவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு தாயார் ஓடி வந்து விட்டாள்.

''என்னய்யா நீ ஒரு மனுசன்? தூங்கற புள்ளையைப் பிடிச்சு...'' கோபத்துடன் அவள் கத்தினாள்.

''அடி சே! வாயை மூடு... அதிகம் பேசினா உன் மானம் கப்பலேறிவிடும்...'' உறுத்து விழித்தபடி ஒரு அதட்டல் போட்டான் ராஜாபாதர்.

'எங்கேடா அந்த வீல்வால்வ்? உள்ளதைச் சொல் - யார்கிட்ட வித்தே? இல்லை இப்ப உதைக்கிற உதையிலே



எலும்பு அத்தனையையும் நொறுக்கி உங்காத்தா கையிலே எண்ணிக் கொடுத்திடுவேன்.''

ஆறுமுகம் நடுநடுங்கிப் போனான். ''வாத்யாரே - முடியை அப்படி இழுக்காதீங்கோ - வலிக்குது உண்மையைச் சொல்லிடறேன்... அம்மாவோட அரிசிப் பானையிலே அதை ஒளிச்சு வச்சிருக்கேன்... இதோ எடுத்தாறேன்...'' ஓலமிட்டான்.

''ஓடு படுவா, எடுத்து வந்து முதல்லே அந்த டாக்டர் ஐயா வூட்டுக்குப் போய் எடுத்த இடத்திலே மறுபடி அதை வச்சுத் திருகிட்டு அப்படியே அந்தத் தோட்டத்தைத் துப்புரவா சுத்தம் பண்ணிட்டு வா - காசு ஏதும் அவர் கிட்ட கேட்காதே. கொன்னுபுடுவேன். உங்காத்தாவுக்கு போன மாசம் உடம்புக்கு முடியாம இருந்தப்போ அவர் சும்மா வைத்தியம் செய்தாரே... அதுக்குப் பதிலுக்குச் செய்கிற உபகாரமாடா? கசமாலம்...?''

''தெரியாம செஞ்சுட்டேன். மன்னிச்சுக்கோங்கோ வாத்யாரே...'' கை கூப்பிக் கொண்டு ஆறுமுகம் அழுதான்.

''பாத்துக்கோ உன் புள்ளை லட்சணத்தை - பெரிசா வாயைக் கிளிச்சுக்கிட்டு வந்தியே... திருடிக்கிட்டு வந்திருக்கான். திருடறதும் பொய் பேசறதும் எனக்குப் பிடிக்காத விசயம்... ஏதோ இத்தோட விட்டேன். வாத்யார் துலுக்காணம் இருந்தாரின்னா - எலும்பை ஒடிச்சு உன் மகனைக் கூவத்திலே தூக்கிப் போட்டிருப்பார்... ஆமாம்...'' மீசையைத் தடவிக் கொண்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தான்.

அன்று முழுவதும் அவன் வேதனையுடன் படுத்துக் கிடந்தான். இரவு மருந்தின் மயக்கத்தால் உறங்கி விட்டான். மறுநாட் காலை கை வீக்கம் குறைந்து வலியும் மறைந்து விட்டிருந்தது. காய்ச்சல் நின்றுவிட்டிருந்தது.

ஈரத் துணியால் உடம்பைத் துடைத்துக் கொண்டு விரைவாக உடை மாற்றிக் கொண்டு வைத்தியரைக் காணப் புறப்பட்டு விட்டான்.

தோட்டத்திற்குள் நுழையுமுன்பே அவனுக்கு மிக்க ஆச்சர்யம். முதல் நாள் காடாக மண்டிக் கிடந்த புதர்கள் மறைந்து தோட்டம் சுத்தமாகக் காணப்பட்டது. நாலா புறமும் பரவிக் கொடியாகப் படர்ந்துகொண்டு நின்ற போகன் வில்லாவைச் சீராக வெட்டி அழகுபடுத்தி விட்டிருந்தான் ஆறுமுகம். "அடி உதவுகிறது போல் அண்ணந்தம்பி கூட உதவமாட்டான்கிறதை பயல் நிரூபிச்சுட்டானே?" உள்ளூர அவனுக்குச் சிரிப்பு.

பரிசோதனை முடிந்ததும் டாக்டர் அவனை உட்காரச் சொல்லிவிட்டுத் தமது நாற்காலியில் வந்து சாய்ந்து கொண்டார். "நேத்திக்குக் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலே புறப்பட்டு போயிட்டே!" ஈரக் கைகளைத் துண்டிலே துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்தார்.

தலையைக் குனிந்து கொண்டான் அவன். சௌந்தரிய குப்பத்திற்குக் குடிவந்த நாளிலிருந்து அவரை அவனுக்குத் தெரியும். சில இடங்களில் வேலைக்குச் சிபாரிசு செய்தவரும் அவர்தான்.

"ராஜாபாதர்! என்னவோ அப்பா. என் கண்ணுக்கு இந்தக் குப்பத்திலே நீ ஒரு தனிப்பட்ட மனுஷனாத் தெரியறே. வயது இப்போ உனக்கு இருபத்துநாலு ஆகப் போவுது. இன்னும் ஒரு வேலையிலும் ஸ்திரமா இல்லையேன்னு எனக்கு உன்னைப் பத்திக் கொஞ்சம் வருத்தந்தான். நான் ஏன் கவலைப்படணும்? உன்கிட்ட மட்டும் எனக்கு ஏன் ஒரு தனிப்பட்ட அன்பு? அப்படின்னு கேட்காதே. ஆறுமுகத்து வயசிருக்கும். நீ இங்கே வந்தபோது உங்கம்மா வீடு கூட்ட வரச்சே,



உன்னை முதல்லே இங்கே அழைச்சிண்டு வந்தபோது எனக்கு தூக்கி வாரிப் போட்டது. உன் முகத்தை எங்கேயோ பார்த்தது போல் ஒரு ஞாபகம். ரொம்பத் தெரிஞ்சவன் போலத் தோணித்து. இதெல்லாம் விட்ட குறை தொட்ட குறை... அதனால்தான் உன் மேலே இந்தப் பூனைக்குட்டி விஸ்வாசம். கெட்டிக்காரப் பையன் உருப்படாமல் போறானேன்னு வயிற்றெரிச்சல்... ஆதங்கம்... இப்பவாவது நான் சொல்வதைக் கேட்கிறியா?..."

புன்னகையுடன் அவர் முகத்தை ராஜாபாதர் நிமிர்ந்து பார்த்தான்.

"என் சிநேகிதன் மகன் ஒருத்தன் இப்போ பெரிய பிசினஸ் வைச்சு நடத்தறான். முதலில் தன் அண்ணனோட கூட வியாபாரம் பண்ணிண்டு இருந்தான். இப்போ பிரிஞ்சு அம்பத்தூரில் பெரிய பாக்டரி வைச்சிருக்கான். அண்ணாசாலையில் வேறே பெரிய ஆபீஸ். அவனை நாலு நாளைக்கு முன்தான் யதேச்சையாச் சந்தித்தேன். வீட்டுக்கு வரச்சொன்னான். போயிருந்தேன். நேத்திக்கு அந்தப் பக்கம் போனப்புறம் அவனுக்குப் போன் பண்ணிக் கேட்டேன். அம்பத்தூர் பாக்டரியிலாவது அண்ணாசாலை ஆபிசிலாவது உனக்கு ஒரு சின்ன வேலை தரும்படி கேட்டேன். ஆகட்டும் பார்க்கிறேன். எதுக்கும் அவனை ஞாயிற்றுக் கிழமை வீட்டில் காலையில் வந்து பார்க்கச் சொல்லுங்க. கடிதம் கொடுத்து அனுப்புங்கோன்னான். நீ அவனைப் போய்ப் பார்க்கறியா? கடிதாசி கூடத் தயாராக டைப் அடிக்க வைச்சிருக்கிறேன்."

நன்றிப் பெருக்கிலே நெஞ்சடைத்துப் போனான் ராஜாபாதர். அவனால் பேச முடியவில்லை. இந்தக் கிழவருக்குத்தான் எத்தனை அன்பு?... முடிவில் "நன்றி டாக்டர்" என்று குழறினான்.

"போய் ஒரு வேலையில் ஒட்டிக்கொண்டு பின்னால் இந்த நன்றி - கின்றியெல்லாம் சொல்லலாம். இந்த வாத்யார் தொழில் உனக்கு வேண்டாம். உன்னைப் போல் பசங்க ஒழுங்கா ஒரு உத்யோகம் பண்ணிப் பிழைக்கத் தெரியணும் - காப்பி சாப்பிட்டியா?"

அவன் மௌனமாகப் புன்னகைத்தான்.

"ஜானகி? ரெண்டு பேருக்கு இட்லி சாம்பாரும் காப்பியும் கொண்டா. நம்ப பையன் வந்திருக்கான்..." உத்திரவிட்டார்.

உள்ளேயிருந்து வந்தாள் அவர் மனைவி கையில் பாத்திரங்களுடன். அவர் குணம் அவளுக்கா தெரியாது?

மேஜை மீது கிடந்த சாமான்களை ஒதுக்கி அவர் ஒருபுறமாக வைத்தார்.

வாழை இலைத் துண்டங்களை மேஜைமீது பரப்பி - சூடான இட்டலிகளை வைத்து நெய் வார்த்து சாம்பாரை ஊற்றினாள். கையோடு கொண்டு வந்த கூஜாவிலிருந்து காப்பியை இரண்டு டம்பளர்களில் நிறைத்து இலைகள் அருகே வைத்துவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள்.

"சாப்பிடுடா ராஜா! உனக்குத்தான் தெரியுமே என்னைப் பொருத்தவரை எல்லோரும் எனக்குச் சமம். நான் பாரதி பக்தன். அதனால் ரொம்ப நாளைக்கு முன்னாடியே பூணுலைக் கழற்றிப் போட்டு விட்டேன். போறாததுக்கு டாக்ரானதும் சாதியாவது - மண்ணாங்கட்டியாவதுன்னு ஒரு நினைப்பு. அது சரி, உங்கள் குடும்பத்தார் மனப்போக்கு எப்படின்னு கேட்காதே? நான்தான் என் மனசைப் பக்குவப்படுத்திக் கொண்டுவிட்டேன். அவர்கள் எல்லாம் - என் மனைவி உள்பட - பழைய சம்பிரதாயங்களில் ஊறி - உழன்று கொண்டிருக்கிறார்கள். சம்பிரதாயத்தின் அடிப்படைக்



கொள்கைகள் மாற இன்னும் ஆயிரம் வருஷம் ஆகுண்டா... சாப்பிடுடா முளிக்காதே - " அதட்டினார் அவர்.

சரிக்குச் சமமாக அந்தப் பெரியவருடன் அவன் உட்கார்ந்து சாப்பிடுகையில் மனதிலே ஒரு புதிய தெம்பு. இனி புதியதொரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அவர் மெச்ச வாழ வேண்டுமென்றதொரு எண்ணம். இலைகளை எடுத்துச்சென்று தோட்டத்து மூலையிலிருந்த குழிக்குள் போட்டுவிட்டு, குழாயில் கையைக் கழுவிக் கொண்டு வந்தான்.

"இந்த மாத்திரைகளை இன்னும் ரெண்டு நாளைக்குச் சாப்பிடு. இதுக்குப் பணம் வேண்டாம். எனக்கு இது சாம்பிளாகக் கிடைச்சது. வேலைக்குப் போய் சேர்ந்தப்பறம் வந்து சொல்லு. தெரிஞ்சுதா?"

தலையை ஆட்டிவிட்டு காலி டம்பளர்களை எடுத்துச் சென்று குழாயில் கழுவிக் கொண்டுவந்து முன்னறைத் தரைமீது ஒதுக்குப்புறமாக வைத்துவிட்டு வந்தான். டாக்டர் ஏகாம்பரம் மேஜையின் இழுப்பறையிலிருந்து கடித உறையை எடுத்து அவனிடம் கொடுத்தார். கும்பிட்டு விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

திரு. விஸ்வரங்கம், நம்பர் ஒன்பது, கிருஷ்ண ராவ் தெரு, நுங்கம்பாக்கம். முகவரியைப் பன்முறை தனக்குள்ளே படித்துக் கொண்டான். ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு அவர் சொன்னபடி அந்தக் கடிதத்துடன் அவன் அந்த வீட்டிற்குப் போவது என்ற தீர்மானம்.

இரவு உணவிற்குப் பின் அவன் படுத்துவிட்டான். பட்டப்பகல் போன்று நிலவு காய்ந்த இரவு பத்த

மணிக்குள் குப்பத்து ஆரவாரம் அடங்கி எங்குமே ஒரு அமைதி... "வம்பு வழக்கெல்லாம் உனக்கு வேண்டாம்" - வற்புறுத்தி டாக்டர் பன்முறை சொன்னது அவன் சிந்தனையில் சுழன்று கொண்டிருந்தது.

சித்திரா பௌர்ணமி இரவு அன்று அவன் வேண்டுமென்றா வம்பு வழக்கில் கலந்து கொண்டான்?

ஒவ்வொரு ஆண்டும் சித்திராபௌர்ணமியன்று அங்காள பரமேஸ்வரி கோயில் அருகே அமைக்கப் பட்டிருக்கும் அந்தப் பெரிய சிமெண்ட் மேடைமீது குப்பத்து மக்களுக்கு ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தி வைத்து எல்லோரையும் மகிழவைப்பார் வாத்தியார் துலுக்காணம். அவர் இல்லாத குறையை மக்கள் உணரக் கூடாது என்ற எண்ணம் அவனுக்கு. முதல் ஆண்டு ஒரு சங்கீதக் குழுவினரைக் கூப்பிட்டுப் பாட்டுக் கச்சேரி வைத்தான். அடுத்த ஆண்டு கரக ஆட்டம். இந்தத் தடவை வில்லுப்பாட்டு என்று முடிவெடுத்திருந்தான். காஞ்சிபுரத்திலிருந்து பிரசித்தி பெற்ற நீலமேகம் குழுவினரை இதற்காக நேரிடையாகச் சென்று சந்தித்துப் பேசி, முன் பணமும் கொடுத்து ஏற்பாடு பண்ணி விட்டிருந்தான். பாஞ்சாலி சபதம் என்ற கட்டத்தை நடத்த ஒப்புக் கொண்ட அந்தக் குழுவினருக்கு நகரத்தில் வேறு ஒரு இடத்திலும் முதல் நாள் கிராக்கி இருந்தது. அதனால் இவர்கள் இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்து விட்டிருந்தனர். கோவில் அருகேயிருந்த காலிக் குடிசையில் அவர்கள் தங்க ஏற்பாடு. குப்பத்துச் செலவில் அவர்களுக்குச் சாப்பாடும் சௌகர்யங்களும் அளிக்கப் பட்டிருந்தன. அந்தக் குழுவிலே சாமான்களைத் தூக்கப் பிடிக்க வந்தவர்களில் அநாவசியமாக இரண்டு அரட்டைப் வேர்வழிகள் இருந்ததை ராஜாபாதர் கவனித்தான். மீசையும் - கிருதாக்களும் - முண்டா



பனியனும் லுங்கியுமாக அந்த இருவரும் குப்பத்தைச் சுற்றிப் பலமுறை வளைய வந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குச் சோறு எடுத்துக் கொண்டு போகும் குப்பாயியின் குடிசை கோவிலுக்குக் கொஞ்சம் தொலைவில்தான் இருந்தது. அவள் மகள் லோசனா நகரத்துக் கடை ஒன்றில் வேலைபார்த்துக் கொண்டிருந்தாள். மகனுக்குத் திருவெற்றியூரில் ஒரு தொழிற்சாலையில் வேலை. இருவரும் வீடு திரும்ப இரவு வெகு நேரமாவது வழக்கம். அன்று இரவு நாயர் கடையில் டீ சாப்பிட்டுவிட்டு ராஜாபாதர் வந்து கொண்டிருந்தான். அப்பொழுதே அவன் கவனித்தான் - பஸ்ஸிலிருந்து இறங்கி லோசனா சாலையில் மெல்ல நடந்து வந்தாள். அவள் வரவிற்காகக் காத்துக் கொண்டு நின்றார்கள் அந்த இரண்டு அரட்டைப் பேர்வழிகள்.

''அத்தான் தொட்டால் கெட்டா போகும் அழகம்மா, சும்மா பழகம்மா...'' என்ற பாட்டை சீட்டியடித்துக் கொண்டு பின் தொடர்ந்தான் அதில் ஒருத்தன்.

''ஏய் குட்டி! சுத்திட்டு ஜாலியா இப்பத்தான் வரியா? இந்த மச்சானையும் கொஞ்சம் பாரேன்.'' சிரித்தான் மற்றவன்.

ராஜாபாதரின் ரத்தம் கொதித்தது. அப்பவே அவர்கள் இருவரையும் பிடித்து அலக்காகத் தூக்கி ஒரு குலுக்குக் குலுக்கிக் குடலைப் புரட்டியிருந்திருக்க வேண்டும். பிசகு அவனுடையது. 'வில்லுப்பாட்டுக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாச்சே... நாளை ஒரு நாள்... கச்சேரி முடிந்ததும் கம்பி நீட்டப் போகிறார்கள்... என்னத் திற்கு கலாட்டா' என்று கோபத்தை அடக்கிக்கொண்டு இருந்துவிட்டான்.

கொண்டிருந்தது.
பூரண நிலவு பொழிந்து கடையில்
ஆப்பக்கார அலமேலுவின் அந்திவேளைக் அங்கே
அன்று எக்கச்சக்கக் கூட்டம். இந்த இருவரும் ஒண்ணையும்
இருந்ததை அவன் கவனித்தான். "பயல்கள் வெறுப்
விட்டுக்கிறதில்லை போலிருக்கு" தனக்குள் கவனிப்பதில்
போடு சொல்லிக்கொண்டு வேலையைக்
கருத்தாக இருந்தான்.

பத்து மணிக்கு மேல்தான் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி
துவங்க இருந்தது. நாலு பக்கங்களிலும் மூங்கில்
கம்பங்களை நட்டு - பூமாலையைத் தொங்கவிட்டு
அலங்கரித்திருந்தனர். இரண்டு காஸ் லைட்டுகளுக்கு
வேறு ஏற்பாடாகி விட்டிருந்தது. மேடை மீது
ஜமுக்காளத்தை விரித்து வைத்து - கூஜாவிலே தண்ணீரும்
டம்பளரும் - குடிக்க கோஷ்டியினருக்கு கலர் - சோடா
வகைகள் வேறு தயாராக இருந்தன.

பத்துமணிக்கு முன்பே இடத்தைப் பிடித்துக்
கொள்ளக் குப்பமே கோவிலருகே திரண்டு விட்டது. ஒரு
பக்கம் ஆண்கள் - இன்னொரு பக்கம் பெண்கள். எள்
போட இடமின்றிக் கூட்டம். அங்காளபரமேசுவரிக்கு
முதலில் பூசையை முடித்தனர். குப்பத்துத் தலைவர் என்ற
நிலையில் ராஜாபாதர் அவர்கள் எல்லோருக்கும்
மாலைகள் அணிவித்து மரியாதை செய்தான். பின்னர்
வேட்டி - துண்டு வெற்றிலைப் பாக்கு பழங்கள் கொண்ட
தட்டில் மீதப்பணத்தை நோட்டுகளாக வைத்து...
குழுவின் தலைவரிடம் கொடுத்து வணங்கினான். - ஏக
கைதட்டல் - விசில்கள் கூச்சல் கொம்மாளம்.

"ஸ்...!" என்று கூட்டத்தினரை அடக்கிவிட்டு
மேடையில் ஒருபுறம் பின்னால் அமர்ந்து கொண்டான்.

கணபதியை ஸ்தோத்திரம் செய்துகொண்டு வில்லுப்
பாட்டுத் தொடங்கியது. பாடியவருக்கு இனியகுரல்.



கதையைச் சொல்வதில் அதிகத் திறமை. பின்னால்
கோஷமிட்டவர்களும் கதையின் சுவைக்கு மெருகேற்றும்
வண்ணம் "ஆமாம், ஆமாம் - அப்படியா - அப்புறம்,
அந்தப்பாவி என்ன செய்தான்?" என்றெல்லாம் தூண்டி
கேட்கும் பாவனையில் கதை ஒட்டத்திற்கு உற்சாகம்
ஊட்டிக் கொண்டிருந்தனர். குப்பத்து ஜனங்கள் மெய்
மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

பாஞ்சாலியை பணயம் வைத்துக் தோற்றுவிட்டனர்
பாண்டவர்கள். தருமர் உள்பட ஐவரும் தலைகுனிந்து
உட்கார்ந்திருந்தனர். அது சமயம் துச்சாதனன்
பஞ்சாலியைப் பிடித்து இழுத்து வந்த கட்டத்தை
வில்லுப்பாட்டுக்காரர் மனம் உருகிப் பேசி - பாடியபோது
பெண்கள் பலர் கண்ணீர் சிந்தினர்.

"ஆவி குலைந்து நின்றாள். ஆவென்று அலறி
நின்றாள். பாவி துச்சாதனன் பாவைதன் கூந்தலைப் பற்றி
இழுத்தான்... அப்பொழுது அவள் என்ன சொன்னாள்? -
என்ன சொல்லுவாள்? ஒரு பெண் அதுவும் வீர தீர
புருஷர்களான அஞ்சு பேருக்கு மாலையிட்டவள் -
அவர்களையெல்லாம் பார்த்து அலறி அழுதாள். 'அஞ்சு
பேருக்கு அழகாக மாலையிட்டும் தஞ்சமென்று புக
இந்தத் தரணியில் யாருமில்லை' - அழுதாள். துச்சாதனன்
சிரித்தான். அவளது துகிலை எல்லோர் முன்னிலையிலும்
உரித்தான். அவள் என்ன செய்வாள்! 'ஐயோ அண்ணா -
கண்ணா என்னைக் காப்பாற்று' என்று கதறினாள். அவள்
புலம்பினது வான்முகட்டைத் தாண்டிக்கிட்டு அந்த
கிருஷ்ண பரமாத்மா அரண்மனைத் தோட்டத்திற்குள்ளே
பூந்து..." வில்லுப் பாட்டுக்காரர் விவரித்துக்
கொண்டிருந்த போது திடீரென்று ராஜாபாதர் மேடையைச்
சுற்றிலும் பார்த்தான். வேப்பமரத்தருகே நின்று
கொண்டிருந்த அந்த இரு லுங்கிக்காரன்களைக்

காணவில்லை. பெண்கள் பகுதியில் சட்டென்று கண்களை ஓட்டினான் - இருமிக் கொண்டிருந்த அவன் தாய் அருகே குப்பாயி உட்கார்ந்திருந்தாள். திரௌபதியின் மானத்தைக் குலைக்கப் புகுந்த மதிகெட்ட துச்சாதனன் கொடும் செயலை எண்ணி அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். ஆமாம், அந்தப் பெண் லோசனா எங்கே?' கவலையுடன் எழுந்திருந்தான் ராஜாபாதர். அவள் அண்ணனுக்கு அன்று நைட் ஷிப்ட். வெகு நேரம் கழித்துத்தான் வீடு திரும்புவான். அவனுக்குச் சோறு எடுத்துப் போடத் தங்கை வீட்டிலேயே தங்கி விட்டாளா? - அது சரி இந்தப் பயல்கள்...?

வில்லுப்பாட்டுக்காரர் கதையின் உச்சக் கட்டத்தை துவக்குமுன் ஒரு கணம் மௌனமாகி கூட்டத்தினரைத் திகைப்பில் ஆழ்த்திவிட்டுப் புன்முறுவலுடன் பார்த்தார். ஒரே ஒரு கணந்தான். மறுபடி வாத்தியங்கள் முழங்க அவர் உரத்த குரலில் உற்சாகமாகப் பாடத் தொடங்கினார்.

எல்லோரும் கதையின் போக்கிலே கட்டுண்டு கவனிக்கவேயில்லை - அமைதியான அந்த ஒரு கண நேரத்தில் பரபரப்புடன் எழுந்து நின்ற ராஜாபாதர் காதுகளில் காற்றோடு மிதந்து வந்த அந்த அலறல் கேட்டுவிட்டது... ''வுட்டுடுய்யா... என்னை விட்டுடு - ஐயோ... காப்பாத்த யாருமில்லையா?...'' ஒரு பெண்ணின் அலறல்.

ரத்தம் தலைக்கேறி உடல் முழுதும் கொதிப்படைந்து போய் நின்றான் அவன். கூட்டத்தின் பின் வழியே குறுக்காகப் புகுந்து வேகமாக நடந்தான். நெஞ்சு வெடித்துவிடும் போன்றதொரு படபடப்பு.



கட்டுக்கொள்ளாத ஒரு ஆவேசம். அவன் சந்தேகப்பட்டது சரியாக இருந்தது. அந்த அலறலும் அபயக்குரலும் குப்பாயியின் குடிசையிலிருந்து வந்தன. ஒரே எட்டாகப் பாய்ந்து குடிசையின் வாயிலுக்கு ஓடினான். கதவு அடைக்கப்பட்டிருந்தது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். உள்ளே ஒரே இருட்டு. அவர்கள் விளக்கை அணைத்து விட்டிருந்தனர்.

''பெரிய பத்தினி... அலட்டிக்கிறா... அண்ணே நான் கதவைப் பார்த்துக்கிறேன்... நீ... உம்...'' குழறியது ஒரு ஆண் குரல். பொங்கி எழுந்து விட்டான் ராஜாபாதர். வலது தோள்பட்டையைக் கதவின் மீது முண்டுக் கொடுத்து ஓங்கி ஒரு தடவை பலங்கொண்ட மட்டும் முட்டினான். கதவு திறந்துகொள்ள அதைத் தாங்கிக் கொண்டு காவலாக நின்ற லுங்கிக்காரன் தலைகுப்புறத் தரையில் விழுந்தான். திறந்த கதவு வழியே நிலவு ஒளி உள்ளே பாய்ந்தபோதுதான் அவனால் நிலைமையை ஊகிக்க முடிந்தது. கிழிந்த புடவையும் தலைவிரி கோலமுமாகப் பயத்தால் நடுங்கிக் கொண்டு குடிசையின் மூலையில் நின்று கொண்டிருந்தாள் லோசனா. அவளை நெருங்கி அலங்கோலம் செய்ய முயன்றவன் கையில் அவளது சேலையின் ஒரு துண்டு கிழிந்து வந்து விட்டிருந்தது. அறைக்குள்ளே வந்து நின்ற அவனைத் திகைப்புடன் திரும்பிப் பார்த்த லுங்கிக்காரன் யோசிக்குமுன் ராஜாபாதர் புலிபோல் பாய்ந்துவிட்டான். வாங்கின பலத்த அடியின் நோவு பொறுக்க முடியாது இருவரும் அலறினார்கள் - கூட அந்தப் பெண் லோசனாவும் கூக்குரலிட்டாள்.

வில்லுப்பாட்டுக்காரர் அவர் பேச்சை நிறுத்திக் கொண்டார். சந்தேகமில்லை சற்றுத் தொலைவில் ஏதோ கலாட்டா, என்றவரைக்கும் புரிந்துவிட்டது. கூடியிருந்த

ஆண்கள் ''அடி - பிடி - உதை'' என்று நாலாபக்கமும் கத்திக் கொண்டு ஓடத் தொடங்கினர்.

''ஐயோ அம்மா'' என்று பெண்களின் ஓலம்... ஒரு வினாடியில் குப்பாயியின் குடிசையின் முன்னால் பெரும் திரளாக மக்கள் கூட்டம். தன் சீடர் படையினர் கையில் லுங்கிக்காரனை ஒப்புவித்துவிட்டுத் தன் கைமேல் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு நின்றான் ராஜாபாதர்.

''அண்ணே?...'' என்று அரற்றிய சப்தம் கேட்டுத் திரும்பினான். சிறகொடிந்த பறவை போல் மூலையில் ஒண்டிக் கொண்டிருந்த லோசனா கந்தலாகிவிட்ட புடவையை இழுத்து மேனியை மூடிக்கொண்டு அவன் கால்களில் சட்டென்று விழுந்து விட்டாள்.

''என் மானத்தைக் காப்பாத்தின மகராசன்... நீங்க நல்லாயிருக்கணும். சமயத்துக்கு நீங்க மட்டும் வந்திருக்காட்டி... அண்ணா...'' என்று அவள் விம்மி விம்மி அழுதாள். அவள் வடித்த கண்ணீர் அவன் காலைச் சுட்டது. பதறிப் போனான் அவன். சட்டென்று குனிந்து அவளைத் தூக்கி நிறுத்தினான்.

சாதாரணமாகப் பெண்களைத் தொட்டுப் பேசும் பழக்கம் அவனிடம் கிடையாது. ஆபத்திலே சிக்குண்டு மனம் அரண்டுபோன அவள் மேலே ஏற்பட்ட இரக்கத்தில் ஒரு கணம் அவன் தன்னை மறந்து உணர்ச்சிவசத்தில் அவளது சகோதரன் போன்ற நினைப்பை எய்திவிட்டான். அந்த நிலையில்தான் அவளைத் தொட்டு தூக்கி நிறுத்தி விட்டான்.

''தங்கச்சி, முகத்தைக் கழுவிக்கோ - இதோ உங்க அம்மா வந்தாச்சு...'' என்று தாயிடம் அவளை ஒப்புவித்து விட்டு வெளியே வந்தான். பாஞ்சாலி சபதம் கண்ணன் துகில் கொடுத்து உதவிய கட்டத்துடன் முடிந்துவிட்டது. வில்லுப்பாட்டுக்காரர் மூட்டையைக் கட்டிக்கொண்டு



கிளம்பினார். அந்த இரு போக்கிரிகளும் தங்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் இல்லை - உதவி செய்வதாகத் தாமே வந்து ஒட்டிக் கொண்டவர்கள் என்று கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர்கள் கிளம்பிச் சென்று விட்டனர். துலுக்காணம் இருந்திருந்தால் அந்த லுங்கிக்காரர்கள் கொலையுண்டு போயிருப்பார்கள். ராஜாபாதர் மேலும் அவர்களைப் புடைத்து நொறுக்க விரும்பவில்லை.

''பொடிப்பயலுகளா! இனி இந்தப் பக்கம் வந்தீங்களோ சேதி தெரியும்...'' கர்ஜித்தான் அவன்.

அவ்வளவுதான் திரும்பிப் பார்க்கத் துணிவின்றி ஒரே ஓட்டமாக இருவரும் குப்பத்தை விட்டுத் தலை தெறிக்க ஓடினார்கள். பின்னால் துரத்திப் பிடித்து அடிக்கப் புறப்பட்ட சீடர் படையைக் கையமர்த்தித் தடுத்து நிறுத்தினான். கும்பல் கும்பலாக மக்கள் நின்று கொண்டு வெகுநேரம் அதையே பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு வம்பு கேட்க வந்து நின்ற ஆப்பக்கார அலமேலுவைப் பார்த்த ராஜாபாதருக்கு எரிச்சல். பொசுக்கி விடுகிறவனைப் போல் அவளைப் பார்த்தான்.

''சாராயத்தை கிளாசிலே ஊத்திக் கொடுத்து - அந்தப் பயல்களுடைய புத்தியை நாசப்படுத்திட்டியே... மகராசி...'' சொல்லாமல் சொல்லின அவன் கண்கள்.

''என்ன வாத்தியாரே - உருட்டி முழிக்கறே - '' கழுத்தை நெளித்தாள் அவள்.

''உங்க மனச்சாட்சியைக் கேட்டுக்கோங்க. அது சொல்லும்! ரெண்டு பயலுகளும் நல்லாப் போட்டிருந்தார்கள்-'' கசப்பாகப் பேசிவிட்டு அவன் கூட்டத்தைத் தாண்டிக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்விட்டான்.

அலமேலுவுக்கு உண்மையில் எருமைத்தோல், கொஞ்சமும் ரோஷமில்லாமல் மறுநாள் காலை அவனை க்குக் காப்பி சாப்பிட நினைவுபடுத்தத் தன் மகளைத் தூது அனுப்பியிருந்தாளே?

திடீரென்று மறுபடியும் அந்த லோசனாவின் நினைப்பு. அவளை அவன் தூக்கி நிறுத்தியபோது அந்தச் சின்னப் பெண்ணின் உடல் எப்படி நடுங்கியது? பாவம்! 'ஒரு பெண்ணின் மானத்தைப் பறிக்கக் கூசாமல் புறப்படும் பழிகாரர்களை என்னதான் செய்யக்கூடாது? நடுத்தெருவில் கட்டிவச்சு புளிய மிளாரால் விளாசு விளாசுன்னு விளாசி ரத்தம் சொட்டச் சொட்ட - கோபத்திலே அவன் மனம் கொதித்தது - அவனது கரம் இடுப்பிலே செருகிக் கொண்டிருந்த அந்தக் கத்தியைத் தடவியது.

## 4

ஒரு பொங்கல் திருநாளின்போது துலுக்காணம் பரிசுகளாக அவனுக்கு ஒரு சட்டையும் பாண்டும் வழங்கியிருந்தார். அவை இரண்டும் பத்திரமாகப் பெட்டியில் இருந்தன. வெளியூர் சரக்குகள் அவை. சட்டையிலிருந்து சாராயம் வரை தலைவரிடம் வெளியூர் விஷயங்கள் ஏராளமானவை இருந்தன என்பது தெரிந்த சங்கதிதான். பாடி ஃபிட் ஸ்டைல் ஷர்ட் அது. ரோஜா வண்ண நிறம். பரவலாக இங்குமங்கும் சின்னஞ்சிறு பூக்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன. அவனது நிறத்திற்கு அது மிகவும் பொருத்தமாக இருந்தது. அதற்கு ஜோடியாகத் தலைவர் அவனுக்கு அளித்த அந்த ஆழ்ந்த நீலநிற



வண்ணப் பாண்ட், லேடஸ்ட் கட்டில் அவனை நிறுத்தி வைத்து அளவெடுத்தது போல் கச்சிதமாக அமைந்து விட்டிருந்தது.

முதல் முதலாக அவைகளை அணிந்து கொண்டு பாட்டா கடையில் வாங்கிய உயரப் பாதம் வைத்த செருப்புகளைக் காலில் மாட்டிக்கொண்டு துலுக் காணத்தைக் காண அவன் வந்தபோது தலைவர் சிடனைக் கண்டு சொக்கிப் போனார்.

''டேய்! ராஜாபாதர், சத்தியமாச் சொல்றேன். உனக்கு இருக்கும் முகவெட்டுக்கும் - அழகுக்கும் உடம்புக் கட்டுக்கும் நீ சினிமாவிலே பூந்துட்டா எல்லாருக்கும் தண்ணி காட்டிடுவேடா? கதாநாயகன் வேசத்திலே நீ வந்து வில்லனை கும்கும்னு குத்தினா கொட்டகையே அதிர்ந்து போயிடும்டா - அப்படி சனங்கள் கைதட்டுவாங்க. ஏன் தெரியுமா? உனக்கு சிலம்பம் - கராத்தே - இதெல்லாம் உண்மையிலே அத்துப்படியாச்சே, டாக்டர் ஐயாகிட்டே ஒரு சிபாரிசுக் கடிதாசி வாங்கிக்கிட்டு யாராவது ஒரு டைரக்டரைப் போய்ப் பாரேண்டா. நீ பெரிய நடிகனா சினிமாவிலே முன்னுக்கு வந்துட்டா இந்தக் குப்பத்துக்கு எத்தனை பெருமை தெரியுமா?'' மீசையை முறுக்கிய வண்ணம் அவன் மனதிலே ஆசையைத் தூண்டி விட்டிருந்தார் ஆரம்ப காலத்தில்.

அவனுக்கு அப்படி ஒரு ஆசையும் இருந்தது. யார் யாரையோ பிடித்து சிபாரிசுக் கடிதங்கள் வாங்கிக் கொண்டு எத்தனையோ பெரிய படக் கம்பெனிகளுக்குள் புகுந்து புறப்பட்டான். ரிஸப்ஷன் வரைதான் அந்த கடிதங்கள் உதவின - அதற்கு மேல் மானேஜரையோ - அதற்கு அப்பாலிருந்த டைரக்டரையோ - படாதி பதியையோ அவனால் காணவே முடியவில்லை. சினிமா

அலமேலுவுக்கு உண்மையில் எருமைத்தோல், கொஞ்சமும் ரோஷமில்லாமல் மறுநாள் காலை அவனை சுக்குக் காப்பி சாப்பிட நினைவுபடுத்தத் தன் மகளைத் தூது அனுப்பியிருந்தாளே?

திடீரென்று மறுபடியும் அந்த லோசனாவின் நினைப்பு. அவளை அவன் தூக்கி நிறுத்தியபோது அந்தச் சின்னப் பெண்ணின் உடல் எப்படி நடுங்கியது? பாவம்! 'ஒரு பெண்ணின் மானத்தைப் பறிக்கக் கூசாமல் புறப்படும் பழிகாரர்களை என்னதான் செய்யக்கூடாது? நடுத்தெருவில் கட்டிவச்சு புளிய மிளாரால் விளாசு விளாசுன்னு விளாசி ரத்தம் சொட்டச் சொட்ட - கோபத்திலே அவன் மனம் கொதித்தது - அவனது கரம் இடுப்பிலே செருகிக் கொண்டிருந்த அந்தக் கத்தியைத் தடவியது.

## 4

ஒரு பொங்கல் திருநாளின்போது துலுக்காணம் பரிசுகளாக அவனுக்கு ஒரு சட்டையும் பாண்டும் வழங்கியிருந்தார். அவை இரண்டும் பத்திரமாகப் பெட்டியில் இருந்தன. வெளியூர் சரக்குகள் அவை. சட்டையிலிருந்து சாராயம் வரை தலைவரிடம் வெளியூர் விஷயங்கள் ஏராளமானவை இருந்தன என்பது தெரிந்த சங்கதிதான். பாடி ஃபிட் ஸ்டைல் ஷர்ட் அது. ரோஜா வண்ண நிறம். பரவலாக இங்குமங்கும் சின்னஞ்சிறு பூக்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன. அவனது நிறத்திற்கு அது மிகவும் பொருத்தமாக இருந்தது. அதற்கு ஜோடியாகத் தலைவர் அவனுக்கு அளித்த அந்த ஆழ்ந்த நீலநிற



வண்ணப் பாண்ட், லேடஸ்ட் கட்டில் அவனை நிறுத்தி வைத்து அளவெடுத்தது போல் கச்சிதமாக அமைந்து விட்டிருந்தது.

முதல் முதலாக அவைகளை அணிந்து கொண்டு பாட்டா கடையில் வாங்கிய உயரப் பாதம் வைத்த செருப்புகளைக் காலில் மாட்டிக்கொண்டு துலுக்காணத்தைக் காண அவன் வந்தபோது தலைவர் சிடனைக் கண்டு சொக்கிப் போனார்.

"டேய்! ராஜாபாதர், சத்தியமாச் சொல்றேன். உனக்கு இருக்கும் முகவெட்டுக்கும் - அழகுக்கும் உடம்புக் கட்டுக்கும் நீ சினிமாவிலே பூந்துட்டா எல்லாருக்கும் தண்ணி காட்டிடுவேடா? கதாநாயகன் வேசத்திலே நீ வந்து வில்லனை கும்கும்னு குத்தினா கொட்டகையே அதிர்ந்து போயிடும்டா - அப்படி சனங்கள் கைதட்டுவாங்க. ஏன் தெரியுமா? உனக்கு சிலம்பம் - கராத்தே - இதெல்லாம் உண்மையிலே அத்துப்படியாச்சே, டாக்டர் ஐயாகிட்டே ஒரு சிபாரிசுக் கடிதாசி வாங்கிக்கிட்டு யாராவது ஒரு டைரக்டரைப் போய்ப் பாரேண்டா. நீ பெரிய நடிகனா சினிமாவிலே முன்னுக்கு வந்துட்டா இந்தக் குப்பத்துக்கு எத்தனை பெருமை தெரியுமா?" மீசையை முறுக்கிய வண்ணம் அவன் மனதிலே ஆசையைத் தூண்டி விட்டிருந்தார் ஆரம்ப காலத்தில்.

அவனுக்கு அப்படி ஒரு ஆசையும் இருந்தது. யார் யாரையோ பிடித்து சிபாரிசுக் கடிதங்கள் வாங்கிக் கொண்டு எத்தனையோ பெரிய படக் கம்பெனிகளுக்குள் புகுந்து புறப்பட்டான். ரிஸப்ஷன் வரைதான் அந்த கடிதங்கள் உதவின - அதற்கு மேல் மானேஜரையோ - அதற்கு அப்பாலிருந்த டைரக்டரையோ - படாதிபதியையோ அவனால் காணவே முடியவில்லை. சினிமா

உலகில் புகுந்து புறப்படுவது என்பது அத்தனை லேசானதொரு காரியமா? நீடித்த முயற்சி அவனுக்கு இருக்கவில்லை. பொறுமையும் கிடையாது. ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்வி - மனம் சலித்துப் போய் அந்த நினைவை அடியோடு கைவிட்டிருந்தான்.

அதற்குப்பின் அவன் தாய் மிகவும் நோய்வாய்ப்பட்டு ரத்த வாந்தியெடுத்துக் குற்றுயிராகி விட்டபோது அவனைத் தன் அருகே அழைத்துச் சொன்னாளே? அந்தக் கசப்பான உண்மைகளைக் கேட்ட பின்னர் அவனது நினைப்பும் - எண்ணங்களும் திசை திரும்பிவிட்டிருந்தன. இரவும் பகலும் அவன் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த அந்த ஆத்திரம் பழி தீர்க்க வேணுமென்ற கொடுஞ்சினம் அடிமன நிலையில் நீறு பூத்த நெருப்பாகக் குடி கொண்டிருந்தன. உள்ளத்திலே சதா சுழன்று கொண்டிருந்த அந்த வேதனை நெருப்பிலே வெந்து கொண்டிருந்த அவனது உணர்வுகள் அமைதியின்றித் தத்தளித்தது. எந்த வேலையிலும் ஒட்ட முடியாது - அவன் தவித்தான். அடிக்கடி தனக்குள்ளே எண்ணிப் புழுங்கினான் - ஆவேசம் கொண்டு தன்னையே பலமுறை நொந்து கொள்ளவும் செய்தான். மொத்தத்தில் ஒருவகை சித்திரவதையில் அவன் மனம் சிதைந்து, சீர்குலைந்து கொண்டிருந்தது. அவனது உள்ளக் குமுறல் யாருக்குமே தெரியாத பரம ரகசியம்.

ஞாயிற்றுக்கிழமை காலை அவன் வழக்கம்போல் சீக்கிரமே எழுந்து விட்டான். காயத்தின் நிமித்தம் இந்தச் சில நாட்களாக அவன் குளிக்கவில்லை. அது ஒரு பெரும் தலைவேதனையாகத் தோன்றியது அவனுக்கு. சம்பகம் தள்ளாடிக் கொண்டு எழுந்து கொஞ்சம் தண்ணீரைக் காய்ச்சிக் கொடுத்தாள். சோப்புப் போட்டு அழுத்தி உடலைத் தேய்த்து விட்டுக் கொண்டு - வெந்நீரை ஊற்றிக் குளித்த போது அப்பாடா என்றதொரு சுகம்! துண்டால் நன்றாகத் துடைத்துக் கொண்டான். மார்பிலும் - தோள்கள் மீதும் முகத்திலும் பவுடர் டின்னைக் குலுக்கித் தெளித்துப் பவுடரைப் பூசிக்கொண்டான். கம்மென்று அவனைச் சுற்றிக் கொண்டு கமழ்ந்த அதன் வாசனையின் மெல்லிய இனிமை... சுத்தமான உள் ஆடைகளை அணிந்து கொண்டான். பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த அந்த ஷர்ட்டையும் பாண்ட்டையும் எடுத்துத் தரித்துக் கொண்டான். இஸ்த்திரி போட்டு மடித்து வைத்திருந்த கைக்குட்டையை சட்டைப் பையில் நுனி மட்டும் தெரியும்படி செருகிக் கொண்டான். கழுத்தைத் தழுவிப் புரண்ட கிராப்புச் சிகையை வாரி விட்டுக் கொண்டு - மீசையையும் கிருதாக்களையும் தடவி சீர்படுத்திக் கொண்டான். தேவையான சில்லறையைச் சிறு மணிபர்சில் எடுத்துப் போட்டு - பாண்டின் பின்பக்கத்துப் பையில் செருகி ஜிப்பை இழுத்துப் பத்திரப்படுத்தினான். காலிலே அந்தப் புதுச் செருப்புகளை மாட்டிக் கொண்டு, டாக்டர் கொடுத்த கடிதத்தை மறக்காது எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான்.



வேலையைத் தேடி வெளியே சென்று கொண்டிருக்கும் மகனிடம் பேச சம்பகத்திற்குப் பயம். ஆனாலும் தாய் மனம் கேட்வில்லை.

''காப்பி தயாராக வச்சிருக்கேன்...''

''தேவையில்லே. வெளியிலே சாப்பிட்டுக்கிறேன்.'' பரபரப்புடன் கிளம்பினான். பத்து மணிக்குத்தான் அந்த முதலாளி வரச் சொல்லியிருந்தார். விரைவில் சென்று சந்தித்து ஒரு வேலையைச் சம்பாதித்துக் கொண்டு விட வேண்டுமென்றதொரு துடிப்பு. இன்னும் சில தினங்களில் துலுக்காணம் வெளிவந்து விடுவார். தாற்காலிகத் தலைவர் பதவியை அவன் விட்டு -

படையில் கூட்டத்தோடு கூட்டமாக அவருக்கு தொண்டர் படையில் கூட்டத்தோடு திரிய வேண்டும். 'எத்தனை வால் பிடித்துக்கொண்டு திரிய வேண்டும். 'எத்தனை காலத்துக்கு இந்த நிலையில்லாப் பொழப்பு'' என்றதொரு கலக்கம் அவனுக்கு. ''வர நேரமாகலாம் - கவலைப்பட வாணாம்.'' பேசிக் கொண்டே அவன் வெளியே வந்தான்.

குடிசையின் வாயிலில் வந்து எட்டிப் பார்த்தாள் தாயார். பளிச்சென்று விசிய காலைச் சூரிய ஒளியில் - சுத்தமான உடை தரித்து கால் செருப்புகள் லேசாக சப்திக்க, தன் மகன் மிடுக்காக நடந்து சென்ற அழகைப் பார்த்துப் பூரித்துப் போனாள்.

''என் கண்ணே பட்டுடும் போல இருக்கு - அங்காள பரமேஸ்வரித் தாயே - இந்தப் புள்ளைக்கு நல்ல புத்தி கொடுத்து நிலையா ஒரு வேலையும் கொடுத்து ரட்சிக்கணும். அம்மா உனக்குப் பொங்கல் வச்சு - பாவாடை சாத்திப் பூசை செய்கிறேன். தாயே இந்த ஏழைகள் பக்கம் பாரம்மா... ஈஸ்வரி...'' மனதிற்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டாள். குப்பத்தைக் கடந்து மகன் சாலைக்குள் மறையும்வரை அவள் பார்த்துக் கொண்டே நின்றாள்.

மெல்ல நடந்து பஸ் நிலையத்திற்கு வந்தான். சட்டெனச் சிலர் பார்வை தன் பக்கம் திரும்புவதை உணர்ந்தான். உள்ளூர அவனுக்குப் பெருமை. அந்த பாடி ஃபிட் ஷர்ட்டை அவன் பணமுடை காரணமாக ஒரு தடவை விற்க நினைத்து எடுத்துக்கொண்டு போன போது... ஒரு கல்லூரி மாணவன் வசதியான குடும்பத்தவன் போல் காணப்பட்ட இளைஞன், தனக்கு அதை விற்றுவிடும்படி கெஞ்சிக் கேட்டது ஞாபகத்திற்கு வந்தது.

''ஒரு வாட்டி உபயோகப்படுத்தின ஷர்ட்'' என்று ராஜாபாதர் உண்மையைச் சொன்னான்.



''பரவாயில்லை நூறு ரூபாய் கொடுக்கிறேன்'' என்று பேரம் பேசினான் அந்த வாலிபன். அவனுக்கு ஃபாரின் பொருள்கள் மீது அத்தனை மோகம். பொருளாதார நெருக்கடியால் முதலில் விற்க இசைந்தான் ராஜாபாதர். குப்பத்திற்கு வந்து யோசித்தபோது மனம் மாறிவிட்டது. ஃபாரின் துணிகள் - செண்டுகள் - பவுடர்கள் - கார்கள் - புட்டிகள் இவைகளையெல்லாம் பணக்காரர்கள் மட்டுமேதான் அனுபவிக்க வேண்டுமா? குப்பத்தில் வசிக்கும் அவனுக்கு ஓசியாகக் கிடைத்ததை அவன் ஏன் அனுபவித்து மகிழாது விற்க வேண்டும்? 'உகும்'... அப்படி ஒரு நினைப்பு - மறுத்து விட்டான்.

பஸ்ஸில் ஏறி - டிரைவின் அருகே இறங்கினான். மெல்ல நடந்து உள்ளே சென்று ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். மசாலா தோசை, வடை சாம்பார் - காப்பி என்று ஆர்டர் கொடுத்து விட்டுத் திரும்பும் போது கவனித்தான். இரண்டு இளம் பெண்கள். உயர் மட்டத்தைச் சேர்ந்த சிட்டுகள் - பரிமாறிக் கொண்ட வார்த்தைகளிலிருந்து கல்லூரி மாணவிகள் என்று ஊகித்தான். விடிந்ததும் விடியாததுமாகக் காரை எடுத்துக் கொண்டு காப்பி டிபன் சாப்பிட டிரைவினுக்குப் புறப்படும் அளவு பெற்றோர்களிடம் சலுகை போலும். அவனை வைத்த கண் வாங்காது அவர்களிருவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அத்தனை ஒரு கவர்ச்சியான தோற்றம் தனக்கிருக்கிறது என்ற பெருமையிலே பூரித்துப் போனான்.

அடையாறு பங்களா ஒன்றிலிருந்து வந்தவன் போல் ஸ்பூனால் நாசூக்காக வடையை மெல்ல வெட்டித் துண்டங்களை சாம்பாரில் புரட்டி வாயில் போட்டுக் கொண்டு, அசட்டையாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அநதப் பெண்களின் வியப்பு நிறைந்த விழிகள் அவன் முதுகின் மீது பாய்ந்து சுடுவது போன்ற

தொரு திகைப்பு உணர்வு. காப்பியை முடித்துக்கொண்டு கணிசமானதொரு டிப்சைத் தட்டின்மீது வைத்துவிட்டு அவன் புறப்பட்டான். காலை டிபனுக்கு நான்கு ரூபாய்கள் செலவு. ஆனாலும் ஒரு திருப்தி. குப்பத்தி லிருந்து வந்தவனைக் குபேரன் மகன் என்று அந்தப் பெண்கள் திரும்பித் திரும்பிப் பார்த்தார்களோ? பார்க் கட்டும். உள்ளூரச் சிரித்துக் கொண்டான். எஸ்.எஸ்.எல். சியைக் கூடத் தாண்டாதவனை எம். டெக் படித்தவன் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள். அடுத்தபடியாக, யாரிவன் என்று புலன் விசாரிக்கத் தொடங்கினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. எல்லாம் அந்த ஃபாரின் உடையும் அவனது தோற்றமும் செய்யும் வேலை... வெளியே வந்தான். அந்தச் சிறு நிகழ்ச்சியில் மகிழ்ந்து போய் வாய்விட்டுச் சிரித்தான்.

மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. டிரைவ் இன்னில் வீண் டம்பத்திற்குச் செலவழித்த பணத்திற்கு இப்போது அவன் சரிக்கட்ட வேண்டியிருந்தது. அதனால் மெல்ல நடக்கத் தொடங்கினான். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு கிருஷ்ணாராவ் தெருவிற்குள் நுழைந்தபோது மணி பத்தடிக்கச் சில நிமிஷங்கள்தான் இருந்தன. தெருவின் பெயரைக் கேட்டதுமே அவன் என்னவோ ஏதோ என எண்ணி விட்டிருந்தான். நேரில் பார்த்தபோது அவனுக்கு மெத்த வியப்பு - ஒன்றோடு ஒன்று போட்டி போடும் அளவில் மிகவும் புதிய பாணியில் கட்டப்பட்ட பெரிய வீடுகள். சுற்றிலும் அழகான தோட்டங்கள். காம்பௌண்ட் சுவரின் வாயில் அருகே ஒவ்வொரு வீட்டிலும் கூர்க்காவின் காவல் - அவனுக்கு நொடியில் விளங்கி விட்டது - மிகப் பெரிய புள்ளிகள் வசிக்கும் பகுதி அது. அவன் தேடி வந்த ஒன்பது எண்' கொண்ட அந்த வீடு அதிகத் தொலைவில் இருக்கவில்லை. மனித அரவம் கேட்டதும் எங்கிருந்தோ



இரண்டு கொழுத்த அல்சேஷ்யன்கள் ஆக்ரோஷமாகக் குரைத்துக் கொண்டு ஓடிவந்தன. நடுங்கிக்கொண்டு வெளியே நின்று விட்டான்.

"எங்கே வந்தே? யாரைப் பார்க்கணும்..." கூர்க்கா அதட்டினான். கையிலிருந்த கடிதத்தை எடுத்துப் பவ்ய மாக நீட்டிவிட்டு, "மிஸ்டர் விஸ்வரங்கம் என்னைக் காலை பத்து மணிக்கு வரச் சொல்லியிருந்தார்..." வியர்க்க விருவிருக்க நின்றான். ஏனோ அவனுக்கு அந்தப் பங்களா - கூர்க்கா - நாய்கள் எல்லாம் திகைப்பையும் திகிலையும் கொடுத்தன. எதற்கும் அஞ்சாதவன் என்ற பெயர் பெற்ற அவன் சிறிது அச்சத்துடன் நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொள்ள வெளியே வாயிலில் கேட்டிற்கு அப்பால் நின்று கொண்டிருந்தான்.

கேட்டைப் பூட்டிவிட்டு கூர்க்கா உள்ளே சென்றான். நாய்களை இழுத்துப் பிடித்துக் கட்டும்படி வேலை யாளிடம் கூறிவிட்டு முன்னறைக்குள்ளே மறைந்து போனான். சிறிது பொழுதில் சிரித்த முகத்துடன் வெளியே வந்தான்.

"ஆவ்ஜி!... உள்ளே வரச் சொன்னாங்க..." கேட்டைத் திறந்து வழி விட்டான்.

இருமருங்கிலும் அழகாக வெட்டி விடப்பட்ட புல்தரை. ஓரங்களில் பல பூச்செடிகள் - நடுவே பல வண்ணக்கற்கள் பாவிய நடைபாதை. அதன் மீது அவன் மெல்ல நடந்து போர்ட்டிகோ அருகே வந்தான். புத்தம்புது பென்ஸ் - கருநீல வண்ணக் கார் போர்ட்டிகோவை அடைத்துக் கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. வியப்புடன் அதைச் சற்று வேடிக்கை பார்த்த வண்ணம் நின்று விட்டான். தன் சொத்து போன்ற உரிமையுடன் டிரைவர் விண்ட்ஸ் கிரீனைத் துடைத்துக் கொண் டிருந்தான். தலையை நிமிர்த்தி வந்தவனைப் பார்த்துப்

புன்முறுவலித்தான். ராஜாபாதர் துணிவுடன் கேட்டு விட்டான். "இந்த கார் எந்த வருஷத்து மாடல்?"

"போன வருஷத்து மாடல் - இது அம்மாவுடைய கார். அய்யாவுடைய இம்பாலா மூணு வருஷத்துக்கு முந்தின மாடல். காரேஜில் நிற்கிறது" இத்தனை விவரங்களையும் அவன் ராஜாபாதரின் உடையையும் நடையையும் பார்த்து விட்டு - யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை என்ற நினைப்பில் வலியச் சொன்னான்.

படிகளைத் தாண்டி வராந்தாவிலே செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு அவன் உள்ளே சென்றான்.

"உட்காரச் சொன்னாங்க. இதோ வரேன்னாங்க."

பொதுவாகச் சொல்லிவிட்டு வேலையாள் ஒருத்தன் முன்னறையின் பின் வழியே உள்ளே சென்று மறைந்து விட்டான்.

"உட்காருவதா? நிற்பதா?" அவனுக்குத் தயக்கம். முடிவில் நின்றபடியே சுற்றிலும் கண்களை ஓட்டினான். மிகப் பெரியதான ஒரு வரவேற்பு அறை அது. பொருத்தமாகப் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த சோபாக்கள் - சலவைக் கற்கள் பாவிய தரை - நடுவே அழகானதொரு ரத்னக் கம்பள விரிப்பு - தலைக்கு மேல் சர விளக்கு. சுவரில் ஆங்காங்கே அழகான படங்கள். முன்பிலே காபினெட்டின் மேல் தட்டில் கீதோபதேசக் காட்சி. தந்தத்தினால் ஆன பெரியதொரு சிற்பம். அடுத்தடுத்த தட்டுகளில் பல வெள்ளிக் கோப்பைகள். வீட்டு எஜமான் விளையாட்டு வீரர் போலிருக்கிறது. பெற்ற பரிசுகளையெல்லாம் பார்வைக்கு முன்னறையில் குவித்து விட்டிருந்தார். இன்னொரு பக்கத்தில் ஒரு பெரிய பியானோ வாத்தியம். வியப்புடன் இன்னமும் சுற்றி நன்றாகப் பார்க்குமுன் அருகிலே காலடிச் சப்தம். அந்தத் திக்கில் அவன் பார்வை சென்றது.



காஞ்சிபுரம் பட்டுச் சேலை சரசரக்க அருகில் வந்து நின்றவளை மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"டாக்டர் சொம்பரம் அனுப்புவதாகச் சொன்ன பையன்தானே நீ?" கேட்ட அவள் காதுகளிலும் மூக்கிலும் வைரங்கள் டால் அடித்தன.

"அப்படி உட்கார்..." என்று அவள் நீட்டிய கைகளில் தங்க வளையல்கள் குலுங்கின. தலையில் அவள் சூட்டிக் கொண்டிருந்த கதம்ப மலர்ச்சரத்தின் மணம் கம்மென்று அறை முழுவதையும் வியாபித்துக் கொண்டது.

வீட்டின் எஜமானி அவள் என்பதற்கு இதற்கு மேல் சான்றுகள் தேவையா?

"பரவாயில்லை நிக்கிறேன். வந்து அவரைப் பார்த்து நேரிடையாகப் பேசிவிட்டு வரச் சொன்னார் டாக்டர்..." இழுத்தான் அவன்!

செவேலென்ற மேனி - பூசினாற்போல் பருத்த உடல் - வயது நாற்பதிருக்கும். ஆனால் களை சொட்டிய முகம். நெற்றியிலே பெரியதொரு குங்குமப்பொட்டு... எஜமானியம்மாள் பார்க்க உண்மையில் மகாலட்சுமி போல் செல்வத்தின் நிறைவுகள் பொலிந்த அழகுடன் இருந்தாள்.

"நீ பத்து மணிக்கு வருவேன்னு என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருந்தார். அவசரமாக இன்னிக்குக் காலையிலே ப்ளேனில் பம்பாய் புறப்பட்டுப் போய் விட்டார். அதனால் உன்னை அண்ணாசாலை ஆபீஸுக்குப் புதன்கிழமை காலை பத்து மணிக்கு மே... வந்து பார்க்கச் சொன்னார்."

ராஜாபாதருக்கு ஒரே ஏமாற்றம். என்னவோ சொல்... வாயைத் திறந்தான். அதற்குள் உள்ளேயிருந்து "அம்... அம்மா!" என்று ஒரு இளம் பெண்ணின் குரல் கேட்...

புன்முறுவலித்தான். ராஜாபாதர் துணிவுடன் கேட்டு விட்டான். ''ஏன் ஸார் இது எந்த வருஷத்து மாடல்?'

''போன வருஷத்து மாடல் - இது அம்மாவுடைய கார்... அய்யாவுடைய இம்பாலா மூணு வருஷத்துக்கு முந்தின மாடல். கராஜில் நிற்கிறது'' இத்தனை விவரங்களையும் அவன் ராஜாபாதரின் உடையையும் நடையையும் பார்த்து விட்டு - யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை என்ற நினைப்பில் வலியச் சொன்னான்.

படிகளைத் தாண்டி வராந்தாவிலே செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு அவன் உள்ளே சென்றான்.

''உட்காரச் சொன்னாங்க, இதோ வரேன்னாங்க.'' பொதுவாகச் சொல்லிவிட்டு வேலையாள் ஒருத்தன் முன்னறையின் பின் வழியே உள்ளே சென்று மறைந்து விட்டான்.

'உட்காருவதா? நிற்பதா?' அவனுக்குத் தயக்கம். முடிவில் நின்றபடியே சுற்றிலும் கண்களை ஓட்டினான். மிகப் பெரியதான ஒரு வரவேற்பு அறை அது. பொருத்தமாகப் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த சோபாக்கள் - சலவைக் கற்கள் பாவிய தரை - நடுவே அழகானதொரு ரத்னக் கம்பள விரிப்பு - தலைக்கு மேல் சர விளக்கு. சுவரில் ஆங்காங்கே அழகான படங்கள். டிஸ்பிளே காபினெட்டில் மேல் தட்டில் கீதோபதேசக் காட்சி. தந்தத்தினால் ஆன பெரியதொரு சிற்பம். அடுத்தடுத்த தட்டுகளில் பல வெள்ளிக் கோப்பைகள். வீட்டு எஜமான் விளையாட்டு வீரர் போலிருக்கிறது. பெற்ற பரிசுகளையெல்லாம் பார்வைக்கு முன்னறையில் குவித்து விட்டிருந்தார். இன்னொரு பக்கத்தில் ஒரு பெரிய பியானோ வாத்தியம். வியப்புடன் இன்னமும் சுற்றி நன்றாகப் பார்க்குமுன் அருகிலே காலடிச் சப்தம். அந்தத் திக்கில் அவன் பார்வை சென்றது.



காஞ்சீபுரம் பட்டுச் சேலை சரசரக்க அருகில் வந்து நின்றவளை மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''டாக்டர் ஏகாம்பரம் அனுப்புவதாகச் சொன்ன பையன்தானே நீ?'' கேட்ட அவள் காதுகளிலும் மூக்கிலும் வைரங்கள் டால் அடித்தன.

''அப்படி உட்கார்...'' என்று அவள் நீட்டிய கைகளில் தங்க வளையல்கள் குலுங்கின. தலையில் அவள் சூட்டிக் கொண்டிருந்த கதம்ப மலர்ச்சரத்தின் மணம் கம்மென்று அறை முழுவதையும் வியாபித்துக் கொண்டது.

வீட்டின் எஜமானி அவள் என்பதற்கு இதற்கு மேல் சான்றுகள் தேவையா?

''பரவாயில்லை நிக்கிறேன். வந்து அவரைப் பார்த்து நேரிடையாகப் பேசிவிட்டு வரச் சொன்னார் டாக்டர்...'' இழுத்தான் அவன்!

செவேலென்ற மேனி - பூசினாற்போல் பருத்த உடல் - வயது நாற்பதிருக்கும். ஆனால் களை சொட்டிய முகம். நெற்றியிலே பெரியதொரு குங்குமப்பொட்டு... யஜமானியம்மாள் பார்க்க உண்மையில் மகாலட்சுமி போல் செல்வத்தின் நிறைவுகள் பொலிந்த அழகுடன் இருந்தாள்.

''நீ பத்து மணிக்கு வருவேன்னு என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருந்தார். அவசரமாக இன்னிக்குக் காலையிலே ப்ளேனில் பம்பாய் புறப்பட்டுப் போய் விட்டார். அதனால் உன்னை அண்ணாசாலை ஆபிஸுக்குப் புதன்கிழமை காலை பத்து மணிக்கு மேல் வந்து பார்க்கச் சொன்னார்.''

ராஜாபாதருக்கு ஒரே ஏமாற்றம். என்னவோ சொல்ல வாயைத் திறந்தான். அதற்குள் உள்ளேயிருந்து ''அம்மா! அம்மா!'' என்று ஒரு இளம் பெண்ணின் குரல் கேட்டது.

''இதோ வந்துட்டேன். கொஞ்சம் இருப்பா...'' கூறிக்கொண்டே அவள் குரல் வந்த திசையை நோக்கி உள்ளே திரும்பிச் சென்றாள்.

''நான் பென்ஸை எடுத்துக்கிட்டு சித்ரா வீடு வரை போயிட்டு வரேம்மா...'' கொஞ்சிக் குழைந்தது அந்தப் பெண்ணின் குரல்.

''உகும்... உங்கப்பா இருந்தா ஒப்புக்க மாட்டார். உனக்கு இன்னும் நல்லாவே ஓட்டத் தெரியலை - அடம்பிடிக்காதே!...''

''டிரைவர்கூட இருக்கும்போது பயமென்ன அம்மா?''

''மஞ்சு! இது என்ன பிடிவாதம். ஒரே பொண்ணுன்னு உன்னை உங்கப்பா ரொம்பக் கெடுத்து வச்சிருக்கார்.''

''நல்லாக் கத்திப் பேசுங்க... முன்னறையிலே யிருக்கிற மனுஷன் காதிலே படட்டும்...'' சிணுங்கினாள் மகள்... தொடர்ந்து, ''ப்ளீஸ் அம்மா! ஒரே ஒரு நாள் தனியா நான் எடுத்துப் போக உத்தரவு கொடுங்க. என் சாமர்த்தியத்தைக் காட்டுகிறேன்.''

ராஜாபாதர் கேட்டுக் கொண்டே நின்று கொண் டிருந்தான்.

''என்னவோ செய்... உன் இஷ்டம்.'' தாய் அதட்டினாள்.

''தாங்யூ மம்மி... குட்பை...'' உற்சாகத்துடன் கிரீச்சிட்ட பதினெட்டு வயது இளம்பெண் ஒருத்தி முன்னறைக்குள் வேகமாக ஓடி வந்தாள். ஸ்லாக் ஸூட்டும் சட்டையும் விரிந்த கூந்தலும் என்ற ஒப்பனையுடன் இருந்த அந்த இளம் பெண்ணை மிக்க வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான் ராஜாபாதர். ஒருகணம் திடுக்கிட்டுப் போனான். எங்கேயோ பார்த்த முகம் இது! எங்கே பார்த்தான்?

வேகமாக ஓடிவந்த அவளும் அவனைப் பார்த்துவிட்டுச் சற்று அயர்ந்து போய் நின்று விட்டாள். யாரிவன் டீக்காக உடுத்திக் கொண்டு காலை வேளையில் இங்கே வந்து நிற்பவன்? லேசானதொரு புன்னகை அவள் முகத்திலே அரும்பி வெளிப்பட்டது. ஒடிய ஒடிய உயரமாக இருந்த அவளும் தாயைப் போன்ற நல்ல நிறம் . பார்க்க அழகி. பணமும் பருவமும் பூசி விட்டிருந்த செழுமை வேறு... மீண்டும் அவளைக் கண் கொட்டாது அவன் திகைப்புடன் பார்த்துக் கொண்டே நின்றான்.

''உட்காருங்க... அம்மா இதோ வந்து விடுவாங்க.'' வரிசையான பற்கள் தெரிய முறுவலித்தபோது லேசாகக் குழியிட்ட தங்கக் கன்னங்கள்...

''பன்னிரண்டு மணிக்குள் வந்து விடுவேன்.. கவலைப்பட வேண்டாம்...'' கூறிக்கொண்டே அவள் வாசலுக்கு ஓடினாள். சில நிமிஷங்களில் பென் உறுமிக்கொண்டு போர்டிகோவை விட்டு நகரும் சப்த கேட்டது.

வீட்டின் யஜமானி மறுபடியும் முன்னறைக் வந்தாள்.

''தம்பி! தாகத்திற்கு ஏதாச்சும் சாப்பிடுறியா...'' கனிவுடன் விசாரித்தாள்.

''இப்பத்தாங்க சாப்பிட்டேன் - தாங்ஸ் அப் நான் வர்றேன்'' வணங்கி விடைபெற்றுக் கொ திரும்பினான். அப்போதுதான் கவனித்தான். அ பியானோ மீது சாய்ந்த வாக்கிலிருந்த புகைப்பட விருந்த மனிதனின் முகம்?...

''என்ன அப்படிப் பாக்கிறே?'' எஜ கேட்டதும் விழிப்புற்றுத் திரும்பினான்.

[illegible]



[illegible]ட்டுப் போனான். எங்கேயோ பார்த்த முகம் இது! எங்கே பார்த்தான்?

வேகமாக ஓடிவந்த அவளும் அவனைப் பார்த்துவிட்டுச் சற்று அயர்ந்து போய் நின்று விட்டாள். வேட்டி மடக்காக உடுத்திக் கொண்டு காலை வேளையில் இங்கே வந்து நிற்பவன்? லேசானதொரு புன்னகை அவ[illegible] முகத்திலே அரும்பி வெளிப்பட்டது. ஓடிய ஓடிய உயரமாக இருந்த அவளும் தாயைப் போன்ற நல்ல நிறம். பார்க்க அழகி. பணமும் பருவமும் பூசி விட்டிருந்த செழுமை வேறு... மீண்டும் அவளைக் கண் கொட்டாது அவன் திகைப்புடன் பார்த்துக் கொண்டே நின்றான்.

"உட்காருங்க... அம்மா இதோ வந்து விடுவாங்க." வரிசையான பற்கள் தெரிய முறுவலித்தபோது லேசாகக் குழிவிட்ட தங்கக் கன்னங்கள்...

"பன்னிரண்டு மணிக்குள் வந்து விடுவேன்... கவலைப்பட வேண்டாம்..." கூறிக்கொண்டே அவள் வாசலுக்கு ஓடினாள். சில நிமிஷங்களில் பெண் உறுமிக்கொண்டு போர்டிகோவை விட்டு நகரும் சப்தம் கேட்டது.

வீட்டின் எஜமானி மறுபடியும் முன்னறைக்கு வந்தாள்.

"தம்பி! தாகத்திற்கு கொஞ்சம் சாப்பிடுறியா...?" அன்புடன் விசாரித்தாள்.

"இப்பத்தாங்க சாப்பிட்டேன் - நாங்க அப்போ நான் வர்றேன்" வணங்கி விடைபெற்றுக் கொண்டு திரும்பினான். அப்போதுதான் கவனித்தான். அந்தப் பிரேமிட்டு சுவரின் மீது சாய்ந்த வாக்கிலிருந்த புகைப்படத்திலிருந்த மனிதனின் முகம்?...

"என்ன அப்படிப் பாக்கிறே?" எஜமானி கேட்டதும் விழிப்புற்றுத் திரும்பினான்.

''இவரை நான் முன்னமே எங்கேயோ பார்த்தது போல ஒரு நினைப்பு! அதனால்தான் கொஞ்சம் ஆச்சர்யமாயிருந்தது.''

''அண்ணாசாலையில் எங்கள் ஆபீஸில் ஒரு சமயம் பார்த்திருப்பே கடை - கண்ணி - கோயில் இங்கே எங்கேயாவது பார்த்திருக்கலாம். இவர்தான் இந்த வீட்டு எஜமான் - என் கணவர் - மஞ்சுவின் அப்பா... மிஸ்டர் மோகன் வில்வரங்கம்,'' அவள் குரலில் பெருமை தொனித்தது.

''வணக்கம்'' - கைகுவித்துவிட்டு வெளியே வந்தான் - கேட்டைத் தாண்டிச் சாலைக்குள் வந்து நின்று வெகுநேரம் சென்றும் அவன் உடல் கிடுகிடு என்று ஆடிக் கொண்டிருந்தது. உள்ளத்திலே எரிமலையாகப் பொங்கி எழுந்த சினத்தின் கொந்தளிப்பிலே நெஞ்சு விரிந்து வெடித்துவிடும் போன்றதொரு வேதனை. நெற்றியில் அரும்பி - கன்னங்களில் வழிந்து கழுத்தை நனைத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''அதோ பாரு! அந்தக் கார்லேந்து இறங்கறாரே அவர்தான். நல்லா பாத்துக்கோ,'' அவன் தாய் ஒருமுறை கோவில் அருகே அவரை அறிமுகம் செய்து வைத்திருந்தாள். நன்றாகப் பார்த்துக் கொண்டான். நெஞ்சினின்று நீங்காத உருவம். மறக்க முடியாத முகம். எப்படி அவன் மறப்பான்? அவனது உரிமைகளை நாசமாக்கி - ஏழ்மையிலே தவிக்க விட்டு, அவமானத்திலே துடிதுடிக்கச் செய்த அந்த மனிதனை அந்த வஞ்சகனது முகத்தை அவன் கனவில் கூட மறக்கவில்லை. அடக் கடவுளே! பல நாட்களாக கூராகத் தேய்த்துத் தயாராக்கிக் கொண்டிருந்த அந்தக் காஷ்மீரக் கத்திக்கு இரையாகப் போகிறவனிடம் அவன் வேலைக்கு இரைஞ்ச வேண்டுமா? வெட்கக்கேடு!... வேடிக்கை - அடத் தூ... அப்படி ஒரு வேலை அவசியமா? காரி உமிழ்ந்து விட்டு அவன் கால் வந்த போக்கில் வேகமாகச் சாலையில் நடந்தான். ஜெமினி ஃபிளை ஓவர் அருகே - பெரியார் சிலையைப் பார்த்துக் கொண்டு நின்றான். இப்போது அவனுக்கு நேரே சட்டென்று வீட்டிற்குப் போகும் யோசனையே இல்லை. பித்தம் பிடித்தவன் போல் எங்கேயோ பார்வை, என்னவோ நினைப்பு, நடைகூடத் தள்ளாடியது. மேலே நடக்க முடியாது போன்ற ஒரு பலவீனம். மெல்ல வந்து சிலையருகே கீழே உட்கார்ந்து கொண்டான். சூழ்நிலையை மறந்து வானத்தை வெறித்தபடி அவன் எங்கேயோ தன் எண்ணங்களுடன் உறைந்து போய் விட்டான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் குப்பத்தைச் சுற்றிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தபோது சம்பகம் தரையில் சுருண்டு கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். ''என்னம்மா...'' பதறினான் மகன்.

ஒரு மூலையில் அவள் வாந்தி எடுத்த அடையாளம் - அதில் ஒரே இரத்தம். கலங்கிப் போய்விட்டான் அவன். ஓடிச்சென்று தாயைப் பரிவோடு தூக்கிப் பாயின்மீது போட்டுத் தலையை சரி செய்து வைத்தான். அவள் உடல் ஐஸ் கட்டி போல் சில்லிட்டு விட்டிருந்தது.

''கிட்டே வா...'' ஜாடை செய்தாள் தாய்... அருகில் வந்து குனிந்தான்.

''இனிமேல் நான் பிழைக்கமாட்டேன். என் முடிவு காலம் வந்துடுச்சு, வீணா என்னை ஆசுபத்திரிக்கு இழுத்துக்கிட்டுப் போகாதே - சொல்வதைக் கேள் - பூவும் பொட்டுமா - பூமாலை போட்டு என் பொணத்தை மரியாதையா எடுத்துடு அது போதும்.''

"இவரை நான் முன்னமே எங்கேயோ பார்த்தது போல ஒரு நினைப்பு! அதனால்தான் கொஞ்சம் ஆச்சர்யமாயிருந்தது."

"அண்ணாசாலையில் எங்கள் ஆபீஸில் ஒரு சமயம் பார்த்திருப்பே கடை - கன்னி - கோயில் இங்கே எங்கேயாவது பார்த்திருக்கலாம். இவர்தான் இந்த வீட்டு எஜமான் - என் கணவர் - மஞ்சுவின் அப்பா... மிஸ்டர் மோகன் விஸ்வரங்கம்," அவள் குரலில் பெருமை தொனித்தது.

"வணக்கம்" - கைகுவித்துவிட்டு வெளியே வந்தான் - கேட்டைத் தாண்டிச் சாலைக்குள் வந்து நின்று வெகுநேரம் சென்றும் அவன் உடல் கிடுகிடு என்று ஆடிக் கொண்டிருந்தது. உள்ளத்திலே எரிமலையாகப் பொங்கி எழுந்த சினத்தின் கொந்தளிப்பிலே நெஞ்சு விரிந்து வெடித்துவிடும் போன்றதொரு வேதனை. நெற்றியில் அரும்பி - கன்னங்களில் வழிந்து கழுத்தை நனைத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

"அதோ பாரு! அந்தக் கார்லேந்து இறங்கறாரே அவர்தான். நல்லா பாத்துக்கோ," அவன் தாய் ஒருமுறை கோவில் அருகே அவரை அறிமுகம் செய்து வைத்திருந்தாள். நன்றாகப் பார்த்துக் கொண்டான். நெஞ்சினின்று நீங்காத உருவம். மறக்க முடியாத முகம். எப்படி அவன் மறப்பான்? அவனது உரிமைகளை நாசமாக்கி - ஏழ்மையிலே தவிக்க விட்டு, அவமானத்திலே துடிதுடிக்கச் செய்த அந்த மனிதனை அந்த வஞ்சகனது முகத்தை அவன் கனவில் கூட மறக்கவில்லை. அடக் கடவுளே! பல நாட்களாக கூராகத் தேய்த்துத் தயாராக்கிக் கொண்டிருந்த அந்தக் காஷ்மீரக் கத்திக்கு இரையாகப் போகிறவனிடம் அவன் வேலைக்கு இரைஞ்ச வேண்டுமா? வெட்கக்கேடு!... வேடிக்கை



அடத் தூ... அப்படி ஒரு வேலை அவசியமா? காரி உமிழ்ந்து விட்டு அவன் கால் வந்த போக்கில் வேகமாகச் சாலையில் நடந்தான். ஜெமினிஃபிளை ஓவர் அருகே - பெரியார் சிலையைப் பார்த்துக் கொண்டு நின்றான். இப்போது அவனுக்கு நேரே சட்டென்று வீட்டிற்குப் போகும் யோசனையே இல்லை. பித்தம் பிடித்தவன் போல் எங்கேயோ பார்வை, என்னவோ நினைப்பு. நடைகூடத் தள்ளாடியது. மேலே நடக்க முடியாது போன்ற ஒரு பலவீனம். மெல்ல வந்து சிலையருகே கீழே உட்கார்ந்து கொண்டான். சூழ்நிலையை மறந்து வானத்தை வெறித்தபடி அவன் எங்கேயோ தன் எண்ணங்களுடன் உறைந்து போய் விட்டான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் குப்பத்தைச் சுற்றிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தபோது சம்பகம் தரையில் சுருண்டு கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். "என்னம்மா..." பதறினான் மகன்.

ஒரு மூலையில் அவள் வாந்தி எடுத்த அடையாளம் - அதில் ஒரே இரத்தம். கலங்கிப் போய்விட்டான் அவன். ஓடிச்சென்று தாயைப் பரிவோடு தூக்கிப் பாயின்மீது போட்டுத் தலையை சரி செய்து வைத்தான். அவள் உடல் ஐஸ் கட்டி போல் சில்லிட்டு விட்டிருந்தது.

"கிட்டே வா..." ஜாடை செய்தாள் தாய்... அருகில் வந்து குனிந்தான்.

"இனிமேல் நான் பிழைக்கமாட்டேன். என் முடிவு காலம் வந்துடுச்சு, வீணா என்னை ஆசுபத்திரிக்கு இழுத்துக்கிட்டுப் போகாதே - சொல்வதைக் கேள் - பூவும் பொட்டுமா - பூமாலை போட்டு என் பொணத்தை மரியாதையா எடுத்துடு அது போதும்."

அந்த மரியாதைக்குரியவள் என்பதன் அடையாளமாக அவள் கழுத்திலே தாலி பல காலமாகத்தான் தொங்கிக் கொண்டிருக்கிறதே - இப்படி ஏன் ஒரு கேள்வி - அவனுக்கு எரிச்சலாகக் கூட இருந்தது.

''அப்படியே நான் செத்துட்டா நீ முதல்லே அவர்கிட்ட போய் விசயத்தைச் சொல்லிட்டு வந்துடு... உசிரோடு இருக்கச்சேதான் கவனிக்கலை - போவட்டும். செத்த பிறகாவது அவர் கையால் வாக்கரிசி போடட்டும்.''

தூக்கிவாரிப் போட்டது. ''எவர் அம்மா?''

''அட நீ ஒன்னு... உன் அப்பனைத்தான் சொல்றேன்.'' மூச்சுவிட முடியாது அவள் திணறினாள்.

அப்பன் என்று ஒருத்தன் இருக்கிறான் என்பதை அவள் சொல்லித்தான் அவன் இதுவரை தெரிந்து கொண்டிருந்தான். பிறந்ததிலிருந்து அவன் தன் தந்தையைப் பார்த்ததில்லை. பார்க்க மாட்டோமோ என்று பலமுறை ஏங்கித் துடித்திருக்கிறான். பச்சைப் பிள்ளையாக இருக்கையிலே தந்தையின் பாசத்துக்கு ஏங்கி - அழுது கண்ணீர் வடித்து தூங்காது புரண்ட நாட்கள் எத்தனையோ? 'தந்தை என்பவன் இல்லையே? - ' என்று தன் வாழ்க்கையின் ஒரு பகுதி சூன்யமாகி விட்டது போன்ற உணர்விலே அவன் தவித்த தவிப்பு - அவன் ஒருத்தனுக்குத்தான் தெரியும். புரியும். எங்கேயோ பம்பாய்க்குக் கோபித்துக் கொண்டு போனவன் என்றாவது ஒரு நாள் வரக்கூடும் என்றுதான் அவன் தன் தந்தையைப் பற்றிய விவரத்தை அறிந்து வைத்துக் கொண்டிருந்தான். இத்தனை காலமாக அவன் கேட்ட கதையிலே இப்போது என்ன இப்படி ஒரு திடீர் திருப்பம்?

''விலாசம் சொல்றேண்டா...'' பேசி முடிப்பதற்குள் அவள் மயக்கமாகி விட்டாள். நினைவிழந்து போய்விட்டாள். பயந்து கொண்டு அவன் டாக்டர்



ஏகாம்பரத்திடம் ஓடினான். அவர் பார்த்து உடனே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கச் செய்தார்.

குப்பமே அவள் இறந்துவிடப் போகிறாள் என்றுதான் நம்பியது. ஆனால் சில நாட்களில் நன்றாகத் தேறி - அந்த ஆபத்தினின்று மீண்டு அவள் சுகமாக வீடு திரும்பி விட்டாள்.

மனத்திலே ஒரு குழப்பத்தையும் பயங்கர உண்மையையும் அவள் விதைத்து விட்டாள் - அதற்குப்பின் அவனுக்கு அமைதி ஏது? அவன் அவளை அத்துடன் விடவில்லை. அன்று ஆரம்பித்த அந்தக் கதையை - அவன் பிறந்து தந்தையில்லாப் பிள்ளையாக நிற்கும் அவல நிலையைப் பற்றிய பூரா விவரமும் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தினான். அடிக்கடி முரண்டு பிடித்தான். வீட்டை விட்டு வெளியேறிவிடப் போவதாக பயமுறுத்தினான். அவள் பயந்து கொண்டு முடிவில் சொல்விட்டாள்.

சம்பகத்திற்கு அப்போது வயது பதினாறு. பருவத்தின் செழுமையான தோற்றம். தகப்பனைப்போல் அவள் புது நிறம். தாயைப்போல் எடுப்பான மூக்கு - நீண்ட கண்கள். களையான முகம் - பச்சரிசிப் பற்கள். மொத்தத்தில் பார்க்கக் கவர்ச்சியான பெண். சின்ன வயதிலேயே அவள் தாய் இறந்து விட்டாள். தகப்பனுடன் அவள் மாந்தோப்புப் பங்களாத் தோட்டத்திலே - தோட்டக்காரனுக்குக் கொடுத்திருந்த அந்தச் 'சிறிய' குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

மோகனின் தகப்பன் விஸ்வரங்கத்திற்குக் கிராமத்திலே நிறைய நஞ்சையிலும் புஞ்சையிலும் நிலங்கள் ஏராளமாக இருந்தன. பெரிய தொரு மாந்தோப்பு - அதன் நடுவேதான் அவர்களது பங்களா -

அந்தச் சமயம் மோகனும் - அவனது அண்ணனும் சென்னையில் படித்துக் கொண்டிருந்தார்கள். கோடை விடுமுறைக்கு மட்டும் ஊருக்கு வருவது வழக்கம். மோகனது அண்ணனுக்குத் திருமணம் நடந்தேறியது. அதற்குபின் அவர் சென்னையிலே வியாபாரத்தைத் துவக்கி மனைவியுடன் சென்னையிலேயே தங்கி விட்டார். மோகனுக்கும் காலேஜ் படிப்பு முடியும் தருவாயிலிருந்தது. அந்தக் கோடை விடுமுறையில் அவன் ஊருக்கு வந்தபோது முதல் முதலாக அவளை தோட்டத்திலே பார்த்தான். தோட்டக்காரனுக்கு இத்தனை அழகானதொரு பெண்ணா? அவனால் நம்பவே முடியவில்லை.

சின்ன யஜமானை அவளும் அதுவரை பார்த்ததில்லை.

''இத்தனை அழகானவரா?'' வியந்து போனாள்.

எதேச்சையாகப் பின்னர் பல சந்திப்புகள், மௌனமான புன்னகைகள் - பிறகு பேச்சுக்கள் - சிரிப்புகள் - தொடர்ந்து அதை ஒட்டிய பல இனிய கதைகள் - கற்பனைகள் இப்படிப் பலவிதமாக நாட்கள் நழுவின - எஜமான் ஏவுகிற வேலை நிமித்தம் அவள் தகப்பன் அடிக்கடி வெளியே போய்விடுவார். வீட்டில் அவர்களைக் கவனிக்க யாரும் இல்லை. தன் பெற்றோர்கள் கோவிலுக்கோ திருவிழாவிற்கோ புறப் பட்டுப் போய்விட்டால்... படிப்பதற்கு வீட்டிலேயே தங்கியிருப்பதாகப் போக்கு காட்டிவிட்டு மோகன் பங்களாவிலே தனியே இருந்து விடுவான். யாருமில்லாத சமயம் அவர்கள் துணிவுடன் கள்ளத்தனமாகப் பன்முறை சந்தித்தனர் - உறவு மிகவும் நெருக்கமாகியது. ''உயிருக்கு மேலாக உன்னைக் காதலிக்கிறேன். உன்னைத்தான் கட்டிக் கொள்வேன்.'' கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்தான் அவன். காதல் வேகத்தில் அவளும் நம்பி விட்டாள். தோட்டக்காரன் மகளை படிப்பும் அந்தஸ்துமில்லாத கிராமத்துப் பெண்ணை பணக்கார யஜமானனது மகன் - பட்டணத்திலே படித்துப் பட்டம் பெற்றவன் துணிந்து மணந்து கொள்வானா? துளியும் சிந்திக்கும் திறனே இருக்கவில்லை. காதல் மயக்கத்தில் கருத்தழிந்து போனாள். அத்துடன் தன்னையே அழித்துக் கொண்டு விட்டாள்.



சில மாதங்களுக்குப் பின்னர் அந்தப் பயங்கர உண்மை வெளி வந்துவிட்டது. தோட்டக்காரன் மகள் சம்பகம் கல்யாணமாகும் முன்னரே கர்ப்பவதியாகி விட்டாள். குழந்தையின் தந்தை யார்? கோபமுற்றுச் சிறிய தந்தை அவளை அடித்து நொறுக்கித் தள்ளிவிட்டான். பொறுக்க முடியாது முடிவில் அவள் உண்மையைச் சொல்லி விட்டாள்.

எஜமான் இந்தக் கதையை ஒப்புக் கொள்வாரா? எங்கேயோ யாருடனோ காதல் நாடகமாடிவிட்டுக் கள்ளங்கபடமற்ற தன் பிள்ளை மீது சுமத்துகிறாள் பாவி என்று ஏசினார். ஏளனமாகப் பேசினார். உடனே அங்கிருந்து இடத்தைக் காலி செய்து கொண்டு அவர்கள் வெளியேற வேண்டுமென்று உத்திரவிட்டுப் பயமுறுத்தினார். பணத்திற்குத்தான் எத்தனை வலிமை? தன் ஊருக்குச் சென்று தன் மூத்த சகோதரியுடன் தங்கினான் தோட்டக்காரன். அப்போதுதான் அந்த யோசனை அவன் மூளையில் பளிச்சிட்டது. கல்யாணமாகாது பிள்ளை பெற்றாள் என்ற அவமானத்தைவிட - கல்யாணமாகிவிட்டது. புருஷன் சம்பாதிக்க மேல் தேசம் போயிருக்கிறான் - பெண்

அந்தச் சமயம் மோகனும் - அவனது அண்ணனும் சென்னையில் படித்துக் கொண்டிருந்தார்கள். கோடை விடுமுறைக்கு மட்டும் ஊருக்கு வருவது வழக்கம். மோகனது அண்ணனுக்குத் திருமணம் நடந்தேறியது. அதற்குபின் அவர் சென்னையிலே வியாபாரத்தைத் துவக்கி மனைவியுடன் சென்னையிலேயே தங்கி விட்டார். மோகனுக்கும் காலேஜ் படிப்பு முடியும் தருவாயிலிருந்தது. அந்தக் கோடை விடுமுறையில் அவன் ஊருக்கு வந்தபோது முதல் முதலாக அவளை தோட்டத்திலே பார்த்தான். தோட்டக்காரனுக்கு இத்தனை அழகானதொரு பெண்ணா? அவனால் நம்பவே முடியவில்லை.

சின்ன யஜமானை அவளும் அதுவரை பார்த்ததில்லை.

"இத்தனை அழகானவரா?" வியந்து போனாள்.

எதேச்சையாகப் பின்னர் பல சந்திப்புகள், மௌனமான புன்னகைகள் - பிறகு பேச்சுக்கள் - சிரிப்புகள் - தொடர்ந்து அதை ஒட்டிய பல இனிய கதைகள் - கற்பனைகள் இப்படிப் பலவிதமாக நாட்கள் நழுவின - எஜமான் ஏவுகிற வேலை நிமித்தம் அவள் தகப்பன் அடிக்கடி வெளியே போய்விடுவார். வீட்டில் அவர்களைக் கவனிக்க யாரும் இல்லை. தன் பெற்றோர்கள் கோவிலுக்கோ திருவிழாவிற்கோ புறப் பட்டுப் போய்விட்டால்... படிப்பதற்கு வீட்டிலேயே தங்கியிருப்பதாகப் போக்கு காட்டிவிட்டு மோகன் பங்களாவிலே தனியே இருந்து விடுவான். யாருமில்லாத சமயம் அவர்கள் துணிவுடன் கள்ளத்தனமாகப் பன்முறை சந்தித்தனர் - உறவு மிகவும் நெருக்கமாகியது. "உயிருக்கு மேலாக உன்னைக் காதலிக்கிறேன். உன்னைத்தான் கட்டிக்



கொள்வேன்." கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்தான் அவன். காதல் வேகத்தில் அவளும் நம்பி விட்டாள். தோட்டக்காரன் மகளை படிப்பும் அந்தஸ்துமில்லாத கிராமத்துப் பெண்ணை பணக்கார யஜமானனது மகன் - பட்டணத்திலே படித்துப் பட்டம் பெற்றவன் துணிந்து மணந்து கொள்வானா? துளியும் சிந்திக்கும் திறனே இருக்கவில்லை. காதல் மயக்கத்தில் கருத்தழிந்து போனாள். அத்துடன் தன்னையே அழித்துக் கொண்டு விட்டாள்.

சில மாதங்களுக்குப் பின்னர் அந்தப் பயங்கர உண்மை வெளி வந்துவிட்டது. தோட்டக்காரன் மகள் சம்பகம் கல்யாணமாகும் முன்னரே கர்ப்பவதியாகி விட்டாள். குழந்தையின் தந்தை யார்? கோபமுற்றுச் சீறிய தந்தை அவளை அடித்து நொறுக்கித் தள்ளிவிட்டான். பொறுக்க முடியாது முடிவில் அவள் உண்மையைச் சொல்லி விட்டாள்.

எஜமான் இந்தக் கதையை ஒப்புக் கொள்வாரா? எங்கேயோ யாருடனோ காதல் நாடகமாடிவிட்டுக் கள்ளங்கபடமற்ற தன் பிள்ளை மீது சுமத்துகிறாள் பாவி என்று ஏசினார். ஏளனமாகப் பேசினார். உடனே அங்கிருந்து இடத்தைக் காலி செய்து கொண்டு அவர்கள் வெளியேற வேண்டுமென்று உத்திரவிட்டுப் பயமுறுத்தினார். பணத்திற்குத்தான் எத்தனை வலிமை? தன் ஊருக்குச் சென்று தன் மூத்த சகோதரியுடன் தங்கினான் தோட்டக்காரன். அப்போதுதான் அந்த யோசனை அவன் மூளையில் பளிச்சிட்டது. கல்யாணமாகாது பிள்ளை பெற்றாள் என்ற அவமானத்தைவிட - கல்யாணமாகிவிட்டது. புருஷன் சம்பாதிக்க மேல் தேசம் போயிருக்கிறான் - பெண்

பிள்ளைப் பேற்றுக்கு வந்திருக்கிறாள் என்ற கதையைப் பரப்பி விட்டால்... அவளது அத்தை ஒரு மஞ்சள் கயிற்றில் தாலியைக் கோத்துத் தன் கையாலே கழுத்தில் கட்டிவிட்டாள். அன்றிலிருந்து அவள் பூவும் பொட்டுடன் நித்ய சுமங்கலியாக இருந்து வருகிறாள்.

பிள்ளை பிறந்தான். சில மாதங்களில் தந்தை இறந்து போனார். கிராமத்திலே தொடர்ந்து வாழ்வது சிரமமாக இருந்தது. சென்னையில் அவளது காதலன் வியாபாரம் செய்து கொண்டு சுகமாக வாழ்வதாகக் கேள்விப்பட்டாள். ஒரு சமயம் மனம் இரங்கி உதவலாம் என்ற நம்பிக்கை குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன்னந்தனியே சென்னைக்கு வந்துவிட்டாள். அவனைத் தேடிக் கண்டு பிடிப்பது அத்தனை சுலபமாக இருக்கவில்லை. வேறு வழியின்றி, குழந்தையை வளர்க்க குப்பமொன்றில் ஒண்டுக் குடித்தனத்திலே ஒடுங்கிக் கொண்டு - வீடு கூட்டும் தொழிலை மேற்கொண்டாள்? பாடுபட்டாள். ஓரளவு மகனைப் படிக்கவும் வைத்தாள்.

ஐந்து வயதுச் சிறுவனாக அவன் இருக்கையில் ஒரு நாள் கோவிலுக்குத் தன் பிள்ளையுடன் போயிருந்தாள். கையிலே சிறு பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்த ஒரு அழகான பெண்ணுடன் மோகனும் கோவிலுக்கு வந்திருந்தான். அவள்தான் அவன் மனைவியாக இருக்க வேண்டும். குழந்தை அவனுடைய மகள்தான் என்று ஊகிக்க அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை. ஒரு கணம் உணர்ச்சிகளின் மோதலில் உள்ளம் பதைபதைத்தது... கட்டுப்படுத்திக்கொண்டு அவர்களை நெருங்கினாள்.

"இந்தாங்க... உங்களைத்தானே...,?" கூப்பிட்டாள் துணிவுடன். திரும்பிப் பார்த்த மோகன் முன்பின் தெரியாதவன் போல் வெறித்தான்.



"கோவிலுக்கு வந்தால் கூடப் பிச்சைக்காரர்களின் தொந்திரவு" - கடுகடுத்துக் கொண்டு மனைவியுடன் சட்டென்று காரில் ஏறிக்கொண்டு விட்டான். கார் நொடிப்பொழுதில் கிளம்பிச் சாலைக்குள் மறைந்து விட்டது.

இடி விழுந்தவள்போல் செயலற்றுவிட்டாள் சம்பகம்.

உயிருக்குச் சமமாக நேசிப்பதாகச் சொன்ன மோகனா அவளைப் பிச்சைக்காரி என்று கூசாமல் பேசி விட்டுப் போனான்? அவள் மனம் சுக்கல் சுக்கலாக உடைந்தது. மனித குலத்திலே அவள் கொண்டிருந்த நம்பிக்கை அந்த நொடியிலே நாசமாகியது.

இனி தானே சம்பாதித்துத் தன்னையும் தன் குழந்தையையும் காப்பாற்றிக் கொள்வதென்றதொரு பிடிவாதம். இதுதான் கதை - சொல்லி முடித்துவிட்டு அவள் குலுங்கி குலுங்கி அழுதாள். பதைபதைத்துப் போனான் ராஜாபாதர். அவன் ரத்தம் கொதித்தது. கள்ளங்கபடமற்ற அவன் தாயை பணத்திமிர் பிடித்த அயோக்கியன் மோகன் மோசம் செய்துவிட்டுப் போனதுமல்லாமல் - பிச்சைக்காரி என்று துச்சமாகப் பேசி அவமானப்படுத்தி விட்டிருக்கிறானே? ஏழைகள் என்றால் அவனுக்கு அத்தனை இளக்காரமா? ஏழைகளுக்கு இதயம் கிடையாது - உணர்வுகள் இல்லை - ஆசைகள் - கற்பனைகள் ஒன்றுமே கிடையாது. இவையெல்லாம் பணக்காரனுக்கு வழிவழியாய் வந்த ஏகபோக உரிமைகள்!

அவனுக்கு வந்த ஆத்திரத்தில்... அவனை அவமானத்தின் சின்னமாக உலகில் தவிக்க விட்டுப் போன அந்தத் துரோகியைக் கண்டுபிடித்து அவன் கழுத்தை நெருக்கிக் கொன்று பழிவாங்க வேண்டுமென்ற

பிள்ளைப் பேற்றுக்கு வந்திருக்கிறாள் என்ற கதையைப் பரப்பி விட்டால்... அவளது அத்தை ஒரு மஞ்சள் கயிற்றில் தாலியைக் கோத்துத் தன் கையாலே கழுத்தில் கட்டிவிட்டாள். அன்றிலிருந்து அவள் பூவும் பொட்டுடன் நித்ய சுமங்கலியாக இருந்து வருகிறாள்.

பிள்ளை பிறந்தான். சில மாதங்களில் தந்தை இறந்து போனார். கிராமத்திலே தொடர்ந்து வாழ்வது சிரமமாக இருந்தது. சென்னையில் அவளது காதலன் வியாபாரம் செய்து கொண்டு சுகமாக வாழ்வதாகக் கேள்விப்பட்டாள். ஒரு சமயம் மனம் இரங்கி உதவலாம் என்ற நம்பிக்கை குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன்னந்தனியே சென்னைக்கு வந்துவிட்டாள். அவனைத் தேடிக் கண்டு பிடிப்பது அத்தனை சுலபமாக இருக்கவில்லை. வேறு வழியின்றி, குழந்தையை வளர்க்க குப்பமொன்றில் ஒண்டுக் குடித்தனத்திலே ஒடுங்கிக் கொண்டு - வீடு கூட்டும் தொழிலை மேற்கொண்டாள்? பாடுபட்டாள். ஓரளவு மகனைப் படிக்கவும் வைத்தாள்.

ஐந்து வயதுச் சிறுவனாக அவன் இருக்கையில் ஒரு நாள் கோவிலுக்குத் தன் பிள்ளையுடன் போயிருந்தாள். கையிலே சிறு பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்த ஒரு அழகான பெண்ணுடன் மோகனும் கோவிலுக்கு வந்திருந்தான். அவள்தான் அவன் மனைவியாக இருக்க வேண்டும். குழந்தை அவனுடைய மகள்தான் என்று ஊகிக்க அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை. ஒரு கணம் உணர்ச்சிகளின் மோதலில் உள்ளம் பதைபதைத்தது... கட்டுப்படுத்திக்கொண்டு அவர்களை நெருங்கினாள்.

"இந்தாங்க... உங்களைத்தானே....?" கூப்பிட்டாள் துணிவுடன். திரும்பிப் பார்த்த மோகன் முன்பின் தெரியாதவன் போல் வெறித்தான்.



"கோவிலுக்கு வந்தால் கூடப் பிச்சைக்காரர்களின் தொந்திரவு" - கடுகடுத்துக் கொண்டு மனைவியுடன் சட்டென்று காரில் ஏறிக்கொண்டு விட்டான். கார் நொடிப்பொழுதில் கிளம்பிச் சாலைக்குள் மறைந்து விட்டது.

இடி விழுந்தவள்போல் செயலற்றுவிட்டாள் சம்பகம்.

உயிருக்குச் சமமாக நேசிப்பதாகச் சொன்ன மோகனா அவளைப் பிச்சைக்காரி என்று கூசாமல் பேசி விட்டுப் போனான்? அவள் மனம் சுக்கல் சுக்கலாக உடைந்தது. மனித குலத்திலே அவள் கொண்டிருந்த நம்பிக்கை அந்த நொடியிலே நாசமாகியது.

இனி தானே சம்பாதித்துத் தன்னையும் தன் குழந்தையையும் காப்பாற்றிக் கொள்வதென்றதொரு பிடிவாதம். இதுதான் கதை - சொல்லி முடித்துவிட்டு அவள் குலுங்கி குலுங்கி அழுதாள். பதைபதைத்துப் போனான் ராஜாபாதர். அவன் ரத்தம் கொதித்தது. கள்ளங்கபடமற்ற அவன் தாயை பணத்திமிர் பிடித்த அயோக்கியன் மோகன் மோசம் செய்துவிட்டுப் போனதுமல்லாமல் - பிச்சைக்காரி என்று துச்சமாகப் பேசி அவமானப்படுத்தி விட்டிருக்கிறானே? ஏழைகள் என்றால் அவனுக்கு அத்தனை இளக்காரமா? ஏழைகளுக்கு இதயம் கிடையாது - உணர்வுகள் இல்லை - ஆசைகள் - கற்பனைகள் ஒன்றுமே கிடையாது. இவையெல்லாம் பணக்காரனுக்கு வழிவழியாய் வந்த ஏகபோக உரிமைகள்!

அவனுக்கு வந்த ஆத்திரத்தில்... அவனை அவமானத்தின் சின்னமாக உலகில் தவிக்க விட்டுப் போன அந்தத் துரோகியைக் கண்டுபிடித்து அவன் கழுத்தை நெருக்கிக் கொன்று பழிவாங்க வேண்டுமென்ற

ஆவேசம்... உடம்பு நடுங்க நெஞ்சையடைத்த உணர்வுகளை விழுங்கிக் கொண்டு தாயின் கண்ணீரைப் பரிவுடன் துடைத்து விட்டான்.

"அது போகட்டும் விடு. அந்த ஆளு எங்கிருக்கிறான்னு மட்டும் சொல்லு போதும்..."

"முதல்லே அவரு இருந்த அந்த வூட்டிலே இப்போ அவரு இல்லேடா - வேறே எங்கேயோ பெரிய ஊடு வாங்கிட்டுப் போய்விட்டாராம். ஒருநாள் முழுவதும் இந்த உடம்போடு தேடி அலைஞ்சு சோர்ந்துபோய் உட்கார்ந்திட்டேன். இத்தனை பெரிய பட்டணத்திலே எங்கேடா நான் கண்டு பிடிச்சுச் சொல்லுவேன்? இனி நான் செத்தா அவருக்குச் சேதி சொல்லக்கூட எனக்கு விலாசம் தெரியாதே..." அவள் விக்கி விக்கி அழுதாள்.

"போவட்டும், அந்தப் பாவியைப் பத்தி நாம் தெரிஞ்சுக்காதிருக்கிறது நல்லதுதான் - சும்மா அழுவாதீங்க. நான் இருக்கிறேன் - மலைபோல ஒரு புள்ளே. அதை நினைச்சு ஆறுதலா இருங்கோ." சமாதானப்படுத்தினான். ஆனால் அவன் உள்ளம் எரிமலையாக எரிந்தது என்னவோ உண்மை.

"நீ வச்சிருக்கியே அந்தக் கத்தி, அது அவருடையது தான்டா - ஒரு நாளைக்கு எனக்கு அவர் கையாலே ஆப்பிள் அறுத்துக் கொடுக்க எடுத்துக்கிட்டு வந்தவர் மறந்து எங்க குடிசையிலேயே விட்டுட்டுப் போயிட்டார். மறுபடி வந்து எடுத்துப்போக அவருக்கு நேரம் கிடைக்கலை. நான் அதை அவர் ஞாபகமாக எடுத்துக் வச்சுக் கொண்டேன்...!"

'அதை என் ஞாபகமாக அவன் நெஞ்சிலே சொருகிடறேன். ஒரே குத்தில் அவன் கத்தியே அவன்



உயிரைக் குடிக்கட்டும்' அன்றே தன் உள்ளத்திலே சபதம் செய்து கொண்டுவிட்டான் ராஜாபாதர்.

தன் தாயை வஞ்சித்த அந்தத் துரோகியை அவன் சும்மா விட்டு வைக்கப் போவதில்லை. தரித்திரத்திலும் அவமானத்திலும் அவர்களைத் தவிக்க விட்டு விட்டுத் தான் மட்டும் சுகமாக வாழ்ந்த அந்த அக்கிரமக்காரனை அவன் பழி தீர்த்துக் கொள்ளும் வரை அமைதியடையப் போவதில்லை... சத்தியம் - சத்தியம் அவன் உள்ளம் ஓவென்று அலறிக் கூச்சலிட்டது.

கொலைக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியாதா... இப்படிப்பட்ட பாவியை ஒழித்துக் கட்டியதற்காக அவனைப் பத்து முறை தூக்கிலிட்டாலும் சரி... மகிழ்ச்சியுடனேயே அவன் கயிற்றில் ஊசலாடத் தயார். அத்தனை ஒரு வெறுப்பு பெற்றவன் மீது அவனுக்கு.

ஒருமுறை அவன் தாய் - தூரத்தில் தன் குடும்பத்துடன் காரிலிருந்து இறங்கிய அவனைச் சுட்டிக் காட்டியபோது... முகத்தை நினைவிலே நன்றாகப் பதித்துக் கொண்டான். காரின் நம்பரையும் மனதிற்குள்ளே பன்முறை சொல்லிக் கொண்டான்.

இப்படிப் பட்டதொரு அயோக்கியன் - உத்தமரான டாக்டர் ஏகாம்பரத்தின் குடும்பத்திற்கு நெருங்கிய நண்பன்! வேடிக்கை. அதைவிட வேடிக்கை, பெற்ற அப்பனிடமே பிள்ளை வேலைக்குக் கையேந்திக் கொண்டு போய் நிற்பது! எல்லாவற்றையும்விட வேடிக்கை அக்கினியைச் சுற்றி வந்து அவன் கைப்பிடித்து விட்ட காரணத்தால் பொன்னும் வைரமும் மின்ன அவள் அத்தனை பெரிய மாளிகைக்கு எஜமானியாக இருப்பது. மனச்சாட்சி முன்னர் மட்டுமே கணவனாக ஏற்றுக் கொண்டு விட்ட அறியாமையினால் அவன் தாய் -

குப்பத்துக் குடிசையில் இருமி இருமி இரத்தம் கக்கிச் செத்துக் கொண்டிருப்பது.

மஞ்சு! அவன் மகள் - பஞ்சு மெத்தையில் ஏ.சி. அறையில் உறங்குவது.

ராஜாபாதர் அவன் மகன் - காவாய்க்கரை ஓரத்திலே கயிற்றுக் கட்டிலின் மேல் - கொசு பிடுங்க - கூவம் நாற்றத்தில் தூங்குவது... இதை விதி என்பதா? வேறு என்ன என்று சொல்லுவது?

'போடா முட்டாள்!' யாரோ பலத்த குரலில் அதட்டியது போல் கேட்கவே திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''விதியாம் விதி!'' பெரியாரின் சிலை அவனை உறுத்து விழித்தது போன்ற பிரமை... அவன் நெடுநேரம் அவரையே பார்த்துக் கொண்டு சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான்.

## 5

**மா**த ஆரம்பத்தின் முதல் செவ்வாய்க்கிழமை, மாலை நேரம். நவசக்தி விநாயகர் கோயிலில் பக்தர்களின் கூட்டம் தொடர்ந்து கொண்டே சென்றது.

''பிள்ளையாருக்கு உன் கையால ஒரு சூரத் தேங்காய்வுடறேன்னு வேண்டிக்கிட்டேன். அடிபட்டு உன் கை அப்படி வீங்கிப் போச்சே, அதுக்குத்தாண்டா '' சம்பகம் ஞாபகப்படுத்தி அவனைக் கோவிலுக்கு அனுப்பி வைத்திருந்தாள்.

''ஒரு தேங்காய் ஒன்னரை ரூபாய்'' மனக்கசப் போடு கணக்குப் போட்டான் அவன்! நினைவு தெரிந்த



நாளிலிருந்து அவன் தாய் ஊரிலிருந்த ஒரு கோயிலையும் விட்டு வைக்கவில்லை. அவள் முன்பின் யோசிக்கவே மாட்டாள். தன் நிலைக்குச் சாத்யப்படாத காணிக்கைகளைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாக் அவசரத்தில் அடிக்கடி வேண்டிக் கொண்டு வருவதுண்டு. அதற்குப் பின் அவைகளை நிறைவேற்ற அவள் படும்பாடு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்.

அவன் உடல்நிலை நன்றாக இருந்த சமயம். ஒரு வெள்ளிக்கிழமை அந்திப்பொழுது குளித்து முழுகி, வேறு உடுத்திக் கொண்டு மஞ்சள் பூச்சில் மின்னிய முகத்திலே பெரியதொரு குங்குமப் பொட்டுடன் கோயிலுக்குக் கிளம்பினாள். இருட்டி வெகுநேரமான பின்னர்தான் மூச்சிறைக்கத் தள்ளாடிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தாள்.

''என்னம்மா உடம்புக்கு?'' மகன் பதறினான். அவன் அப்போது பள்ளிச் சிறுவன்.

''ஒண்ணுமில்லே ஆத்தாளுக்குப் பாவாடை வாங்கிச் சாத்தறேன்னு வேண்டிக்கிட்டேன். வருசத்துக்கு ஒரு வாட்டி எப்படியோ நிறைவேத்திடற வழக்கம். இப்போ ஒரு வீடு கூட்டறது குறைஞ்சு போச்சு. கையில் ஒட்டமில்லை. அதனாலே அபராதக் காணிக்கையா அம்மன் கோயிலை ஆயிரத்தொரு தபா சுத்தினேன்டா, கால் ஒஞ்சு போச்சு மூச்சுத் தடுமாறது...'' திணறினாள் அவள்.

''உங்களை இப்படி எல்லாம் யாரம்மா கஷ்டப்படச் சொன்னாங்க? நம்ப நிலைமை அந்த சாமிக்கு தெரியுமே...'' கொஞ்சம் காரமாகவே அவன் கேட்டான்.

''உன் அப்பன் சொகமாக நல்லாருக்கணும்; என் மஞ்சக் குங்குமத்துக்குக் குறை வரக் கூடாதுங்கிறதுக்குத்

குப்பத்துக் குடிசையில் இருமி இருமி இரத்தம் கக்கிச் செத்துக் கொண்டிருப்பது.

மஞ்சு! அவன் மகள் - பஞ்சு மெத்தையில் ஏ.சி. அறையில் உறங்குவது.

ராஜாபாதர் அவன் மகன் - காவாய்க்கரை ஓரத்திலே கயிற்றுக் கட்டிலின் மேல் - கொசு பிடுங்க - கூவம் நாற்றத்தில் தூங்குவது... இதை விதி என்பதா? வேறு என்ன என்று சொல்லுவது?

'போடா முட்டாள்!' யாரோ பலத்த குரலில் அதட்டியது போல் கேட்கவே திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''விதியாம் விதி!'' பெரியாரின் சிலை அவனை உறுத்து விழித்தது போன்ற பிரமை... அவன் நெடுநேரம் அவரையே பார்த்துக் கொண்டு சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான்.

## 5

**மா**த ஆரம்பத்தின் முதல் செவ்வாய்க்கிழமை, மாலை நேரம். நவசக்தி விநாயகர் கோயிலில் பக்தர்களின் கூட்டம் தொடர்ந்து கொண்டே சென்றது.

''பிள்ளையாருக்கு உன் கையால ஒரு சூரத் தேங்காய்வுடறேன்னு வேண்டிக்கிட்டேன். அடிபட்டு உன் கை அப்படி வீங்கிப் போச்சே, அதுக்குத்தாண்டா - '' சம்பகம் ஞாபகப்படுத்தி அவனைக் கோவிலுக்கு அனுப்பி வைத்திருந்தாள்.

''ஒரு தேங்காய் ஒன்னரை ரூபாய்'' மனக்கசப் போடு கணக்குப் போட்டான் அவன்! நினைவு தெரிந்த



நாளிலிருந்து அவன் தாய் ஊரிலிருந்த ஒரு கோயிலையும் விட்டு வைக்கவில்லை. அவள் முன்பின் யோசிக்கவே மாட்டாள். தன் நிலைக்குச் சாத்யப்படாத காணிக்கை களைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாக அவசரத்தில் அடிக்கடி வேண்டிக் கொண்டு வருவதுண்டு. அதற்குப் பின் அவைகளை நிறைவேற்ற அவள் படும்பாடு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்.

அவன் உடல்நிலை நன்றாக இருந்த சமயம். ஒரு வெள்ளிக்கிழமை அந்திப்பொழுது குளித்து முழுகி, வேறு உடுத்திக் கொண்டு மஞ்சள் பூச்சில் மின்னிய முகத்திலே பெரியதொரு குங்குமப் பொட்டுடன் கோயிலுக்குக் கிளம்பினாள். இருட்டி வெகுநேரமான பின்னர்தான் மூச்சிறைக்கத் தள்ளாடிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தாள்.

''என்னம்மா உடம்புக்கு?'' மகன் பதறினான். அவன் அப்போது பள்ளிச் சிறுவன்.

''ஒண்ணுமில்லே ஆத்தாளுக்குப் பாவாடை வாங்கிச் சாத்தறேன்னு வேண்டிக்கிட்டேன். வருசத்துக்கு ஒரு வாட்டி எப்படியோ நிறைவேத்திடற வழக்கம். இப்போ ஒரு வீடு கூட்டறது குறைஞ்சு போச்சு. கையில் ஒட்டமில்லை. அதனாலே அபராதக் காணிக்கையா அம்மன் கோயிலை ஆயிரத்தொரு தபா சுத்தினேன்டா, கால் ஓஞ்சு போச்சு மூச்சுத் தடுமாறது...'' திணறினாள் அவள்.

''உங்களை இப்படி எல்லாம் யாரம்மா கஷ்டப்படச் சொன்னாங்க? நம்ப நிலைமை அந்த சாமிக்கு தெரியுமே...'' கொஞ்சம் காரமாகவே அவன் கேட்டான்.

''உன் அப்பன் சொகமாக நல்லாருக்கணும்; என் மஞ்சக் குங்குமத்துக்குக் குறை வரக் கூடாதுங்கிறதுக்குத் தான் ஒவ்வொரு ஆடி வெள்ளிக்கிழமையும்

ஆத்தாளுக்குப் பொங்க வச்சு - பாவாடை சாத்திக்கிட்டு வந்தேன்... இப்போ..."

காணாமற் போய்விட்ட கணவன்மீது அவளுக்கு இன்னமும் அன்பு - பக்தி... அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது. தீவிரமாக விடாது வேண்டும் தெய்வங்கள் அவளுக்குத் துணை செய்யாமலா போய்விடும்? ஒரு நாளைக்கு இல்லாவிட்டால் ஒரு நாள் அவன் தந்தை ஊர் திரும்பத்தான் போகிறான். அவர்கள் நன்றாகக் கூடி வாழத்தான் போகிறார்கள். சிறுவனாக இருக்கையில் அவனுக்கு அப்படித்தான் ஒரு நினைப்பு - எதிர்பார்ப்பு - ஒரு நம்பிக்கை. உண்மை தெரிந்த இப்போது?... தாயின் மீது இரக்கத்திற்குப் பதில் தாங்கமாட்டாத சினம்.

இந்தக் காலத்தில் - அதுவும் பட்டணத்திலே வசித்துக் கொண்டிருக்கும் அவன் தாய் இப்படி ஒரு பத்தாம்பசலியாக இருப்பாளா? அந்த அநியாயக்காரன் நீடுழி வாழக் கோயிலைச் சுற்றுகிறாளாம், கோயிலை?

அந்தப் பாவிக்கு என்ன கொள்ளை? மணலிலிருந்து பிடுங்கி எடுத்த வள்ளிக்கிழங்கு போல் வாட்ட சாட்டமாகப் பணத்திலே புரண்டு கொண்டு நிம்மதியாக இருக்கிறான். இவன் தாய் கோயிலைச் சுத்தினாலும் சுத்தாவிட்டாலும் அவன் பணத்தின் வளமையால் நூறாண்டு காலம் வாழத்தான் போகிறான் - இவள்? இருமி இருமி இல்லாக் கொடுமைக்கு இரையாகி - விரைவில் சாகப் போகிறாள்...

கோபத்திலே பலவும் சிந்தித்தபடி பிரகாரத்தின் பின்னாலிருந்த பம்புக் குழாயில் தேங்காயைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டான். கூட்டத்தோடு கூட்டமாகத் தேங்காயுடன் மும்முறை கோயிலை வலம் வந்தான். ஏன்? அவனுக்கே தெரியாது. எல்லாம் அவன் தாய் கற்றுக்



கொடுத்த பழக்கம். அவனையுமறியாது சில தொத்திக் கொண்டிருந்தன.

அன்று விநாயகருக்கு விசேஷ அலங்காரம். வெள்ளிக் கவசமணிந்து - ஆபரணங்கள் பூண்டு சரம் சரமாக முல்லை - மல்லிகை ரோஜாமாலைகள் அணிந்து கொண்டு கம்பீரமான அழகுடன் விளங்கினார். பாதங்கள் அருகே தாமரை, அருகம்புல் கட்டுகள் - ஷண்பக மலர்கள் - மருக்கொழுந்துக் கத்தைகள் குவிந்து கிடந்தன. கத்தையாக புகைந்த ஊதுவத்தியின் நறுமணம் கட்டவிழ்ந்து கொண்டு முல்லை, மல்லிகை மலரின் வாசனை, சந்தனம் பன்னீர் எல்லாம் சேர்ந்த கலவை மணத்தில் கோயிலுக்கே உரித்தான அந்தத் தெய்வீக மணம் அவனையும் ஒரு கணம் அயர வைத்தது.

கற்பூரம் எரிந்து கொண்டிருந்த தட்டை உயர்த்தி பக்தர்களுக்கு கணேசப் பெருமானின் கனவு முகத்தரிசனம் காண உதவிக் கொண்டிருந்தார் அர்ச்சகர். கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு கம்பத்தின் மீது சாய்ந்தபடி கற்பூர ஜோதியை வணங்க அவன் காத்துக் கொண்டிருந்தான்.

அருகில், மிக அருகில் இரண்டு சிறு பெண்கள். காலேஜ் மாணவிகள் போன்ற தோற்றம். பரீக்ஷைக்காக மேற்கொண்ட வேண்டுதலை போலும். ஆளுக்குக் கையில் ஒரு தேங்காயுடன் அவன் மேல் இடித்துக் கொண்டு நின்றனர். பெல்பாட்டம், போட்நெக்டாப்... போட்டுக் கொண்டிருந்தவள் - அவன் அருகே நின்று கொண்டிருந்தாள். நழுவி விழுந்த முந்தானையை சரி செய்து கொண்டு தவித்த மற்றவளிடம் அவள் கிசுகிசுத்தாள். "ஈஸ் இண்ட் ஹி வெர்ரி க்யூட்...?"

காதுகளும் கன்னங்களும் ஜிவ்வென்று எரிந்தது அவனுக்கு. அவர்கள் சொன்னாலும் சொல்லா

விட்டாலும் அவன் ஆண் அழகன் என்பது அவனுக்குத் தெரிந்த சங்கதி. வாட்டசாட்டமாக செவேலென்று பெயருக்குத் தக்கபடி தலைவர் சொன்னதுபோல் சினிமா ஹீரோ போல் அவன் அழகானதொரு ஆண்பிள்ளை. கோயிக்குப் புறப்படுமுன் குளித்து முழுகிவிட்டுச் சலவையிலிருந்து வேட்டியும் ஜிப்பாவும் அணிந்து கொண்டு வந்திருந்தான். ஒரு தடவை பார்த்தவர்கள் அவனை மறுபடி திரும்பிப் பாராது இதுவரை போனதே இல்லை. அப்படி அவனிடம் ஒரு கவர்ச்சி இருக்கத்தானிருந்தது. சட்டென்று குனிந்து தன் மார்ப்பை ஒருமுறை பெருமையுடன் பார்த்துக் கொண்டு அந்தப் பெண் பக்கம் திரும்பினான்.

"வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பிள்ளையாருக்கு எக்கச்சக்கமான அலங்காரம். பார்க்க ரொம்ப அழகாக இருக்கார். நீ சொல்வது சரி. ஹி இஸ் வெர்ரி க்யூட் க்யூட் டுடே."

சோடா புட்டியினின்று குபுகுபுவெனப் பொங்கி புறப்பட்டு உடனடியாக அடங்கிவிடும் நுரைபோல்... பிய்த்துக் கொண்டு கிளம்பிய அவனது உற்சாக உணர்வு தொய்ந்து விட்டது.

'அவர்கள் வர்ணித்தது அவனையில்லையா அடக்கடவுளே?

கற்பூர ஜோதியைக் கும்பிட்டுவிட்டுக் கையிலிருந்து பத்து பைசாவைத் தட்டில் போட்டு திருநீற்றை வாங்கி நெற்றியில் பூசிக் கொண்டான். மெல்லக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு வெளியே வந்தான். சிதர் தேங்காய் உடைக்க கோயிலுக்கு எதிரே நான்கு புறமும் தடுக்கப்பட்ட ஒரு இடம் அமைத்திருந்தார்கள். அவர்கள் வசித்த குப்பத்தருகே கூட ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அதன் அருகே ரிக்ஷாக்காரர்கள் குப்பத்துச்



சிறுவர்கள் பூ விற்கும் பையன்கள் இவர்கள் கூட்டம் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். சூரத் தேங்காய் கையை ஓங்குமுன் ஒருகூட்டம் விடுபவர்கள் கையை ஓங்குமுன் ஒருகூட்டம் தரையில் பட்டுச் சேர்ந்துவிடும். உடைத்த தேங்காய் தரையில் பட்டுச் சேர்ந்துவிடும். உடைத்த தேங்காய் தரையில் பட்டுதான் சிதறியதா அல்லது யார் மண்டையிலும் பட்டுதான் உடைந்ததா என்று யோசிக்குமுன் ஒரு சில்லுகூட இருக்காது. மாயமாக மறைந்துவிடும். அப்பழுக்கில்லாது இங்கே நிம்மதியாக தேங்காய் உடைக்க வசதி இருந்ததைக் கண்டு அவனுக்குத் திருப்தி. கையிலிருந்த தேங்காயைப் பார்த்துவிட்டு அவன் கையை ஓங்குமுன், "ஸார்!" என்று ஒரு பெண்ணின் இனிய குரல். பெல்பாட்டம் தயக்கத்துடன் அருகில் வந்து நின்றாள்.

"தயவு செய்து இந்த சிதர் தேங்காய்களை எங்களுக்காக நீங்கள் உடைக்க முடியுமா?" என்று கேட்டாள்.

மெல்லியதாகக் குச்சி போன்ற அவள் கைகளையும் ஒடிந்து விடுவது போன்ற உடம்பையும் ஓரக்கண்ணால் பார்த்து உள்ளூரச் சிரித்துக் கொண்டான். அவன் பக்கத்தில் நின்ற புடவைக்காரியும் அப்படியேதான். மூங்கில் கம்பு போல் ஒடிய உயரமாக இருந்தாள். கஞ்சி மொட மொடப்பில் புஸ்ஸென்று புடவை அவள் மேனியில் படர்ந்து கொண்டிருந்தது.

ஒரு தேங்காயைத் தூக்கி உடைக்கக் கூடத் தெம்பில்லை. இதுகள் படிச்சு பட்டம் வாங்கிப் பாழாய்ப் போச்சி சனியன்கள். கை நீட்டித் தேங்காய்களை வாங்கி ஓங்கி ஒன்றன் பின் ஒன்றாக உடைத்துத் தீர்த்தான். ஒரேயடியில் சுக்கலாகச் சிதறிவிட்ட தேங்காயைக் கண்டு அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

"தாங்யூ சார்...!" இனிமையாக இழைந்துவிட்ட இருவரும் கூட்டத்தில் மறைந்து விட்டனர்.

இடது கையால் பத்திரமாகப் பிடித்துக் கொண்டிருந்த தன் தேங்காயை எடுத்துப் பிள்ளையாரைப் பார்த்தபடியே கையை ஓங்கப் போனவன் திடுக்கிட்டுப் போனான்.

மஞ்சு! கம்பத்தின்மீது சாய்ந்து கொண்டு கற்பூர ஆரத்தியை வணங்கிக் கொண்டிருந்தாள்.

அவனையும் மீறிப் பொங்கிய ஆத்திரத்தில் நெஞ்சு வேகமாகத் துடித்தது. கரத்தை ஓங்கிப் பற்களைக் கடித்துக் கொண்டு தேங்காயைப் பலம்கொண்ட மட்டும் தரையில் அடித்தான். நொறுங்கி அது தூளாகியது.

'பிள்ளையாரை, பரீட்சைக்காகக் காக்காய் பிடிக்க வந்திருக்கிறாளா?...' ஏளனமாக எண்ணியபடி சற்று நகர்ந்து நடைபாதை ஓரத்திலே வந்து நின்று கொண்டான். முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தான். அவள் கோயிலை விட்டு வெளியேறி அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தக் கரு நீலவண்ண பென்சில் ஏறி டிரைவர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். அந்தி மங்கி இருட்டத் தொடங்கி விட்டிருந்தது. அவன் சற்றுத் தொலைவிலிருந்துதான் பார்த்தான். அவள் அருகே உட்கார்ந்திருந்த ஆளின் சட்டையின் கைதான் தெரிந்தது. பின்னால் ஒரு பெண்மணி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான். உற்றுப் பார்க்குமுன் அவள் காரைப் பின் பக்கமாக நகர்த்தத் தொடங்கினாள்.

ஒரே ஒரு கணம்தான். அவன் யோசித்து முடிக்கு முன் 'டணார்' என்ற பெரிய சத்தம். ''ஐயோ அப்பா கொன்னுட்டாளே பாவி!'' வாலிபன் ஒருத்தனின் அலறல்.

எங்கிருந்தோ ஓடி வந்தனர் பலர். நீல வண்ண பென்சைச் சுற்றிலும் சில வினாடிகளில் ஒரு பெரும் கூட்டம்.



''யாரது பெண் டிரைவரா?'' சூள்கொட்டினார் ஒரு சில்க் ஜிப்பாக்காரர்.

''காரைக் கையிலே புடிச்சுட்டா ரோடு பாட்டன் ரோடுன்னு நெனப்பு - பாவிமக... கொன்னுட்டாளே - புள்ளையை!'' கத்தி ஓலமிட்டான் கிழிந்த சட்டையும் அழுக்கு வேட்டியுமாக நின்ற கிழவன். தூரத்தில் முக்கோணத் திடல் அருகே நின்ற போக்குவரத்துப் போலீஸ்காரரின் விஸில் சத்தம் காதைப் பிளந்தது.

அதற்குள்ளே ஒரு சிறு பேரம்... ''அப்பா! காலு ஒடிஞ்சு போச்சு.'' கதறிக் கொண்டு பின் சக்கரத்தின் கீழேயிருந்து புரண்டு எழுந்து தள்ளாடி நின்றான் அடி பட்டவன்.

பீடியைப் பற்ற வைத்து இழுத்து ஊதிக்கொண்டு பற்களால் அதைக் கடித்தபடி வேட்டியை மடக்கி முழங்கால் மேல் கட்டிக்கொண்டு பேரம் பேச வந்தான் பரட்டைக் கிராப்புத் தலைக்காரன்.

''இருநூறு ரூபாய் வச்சுடு அய்யா. அப்படி இந்தத் தொகை ஒண்ணும் அதிகமில்லே. போலீஸ் ஆஸ்பத்திரி - கோர்ட்னு அலையறதைவிட இது சொல்பம். பையனுக்குச் செம அடிபட்டிருக்கு. அதை நெனைச்சுப்பாரு. லட்சம் லட்சமாப் போட்டுக் காரை வாங்கியிருக்கே காலை ஒடிச்சுட்டுக் காசு கொடுக்க யோசிக்கிறே. நீங்க எல்லாம் ஏழைங்க வவுத்திலே அடிச்சுப் பணக்காரங்களா ஆனவங்க. மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுதே...'' மரியாதையாக ஆரம்பித்த பேரம் மட்டமான பாதைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

பார்ப்பவர்களுக்கு உற்சாகம்: வீல் வீல் என்று போலீசின் விசில் சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. போக்குவரத்து மிகவும் நெரிசலாகிக் கொண்டிருந்த நேரம். போக்குவரத்துப் போலீஸ்காரர் நிலைமையை

ஒருவாறு சமாளித்துவிட்டு தமது உதவி அதிகாரியிடம் பொறுப்பை ஒப்புவித்து விட்டுக் கூட்டத்தை நோக்கி வருவதை ராஜாபாதர் கவனித்தான். காரில் உட்கார்ந்திருந்த பெண்மணி சொன்னாள். "என்னாங்க என்னத்துக்கு வம்பு? உங்க கிட்ட சில்லறை என்ன இருக்குன்னு பாருங்க. என் கைப்பையில் நூற்றைம்பது ரூபாய் இருக்கு."

"சித்த இரும்மா!..." அத்தட்டிய குரலைக் கேட்டு அவன் உள்பட கூட்டத்தினரிடையே ஒரு திகைப்பு.

ஒரே எட்டாகப் பாய்ந்து வந்த ராஜபாதர் அடிபட்டு எழுந்து நின்ற வாலிபனின் ஷர்ட்டின் முன் பக்கத்தைக் கையில் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினான்.

"டேய்! நீ சாலாட்சி தோட்டத்து மருதமுத்து இல்லே! ஏலே டேய்! உனக்கு இதே தொழிலா? எங்கேடா அடிபட்டது? காட்டுடா. இல்லாட்டி சட்டையையும் வேட்டியையும் தார்தாராகக் கிளிச்சு நடுத்தெருவிலே அப்படியே நிக்க வைச்சிடுவேன். நான்தான் பாத்துக்கிட்டே இருந்தேன். நீ வேணுமினே பின்னால் வந்து ஓங்கி மட்கார்டு மேலே கையாலே தட்டினே - ஐயோ அப்பான்னு கத்திக்கிட்டுக் கீழே சாஞ்சே. உன் ஆட்கள் ரொம்ப ஷோக்கா நாடகத்தை நடிச்சானுங்க. ஏமாந்தவங்க தலையிலே மிளகாய் அரைக்கிற கூட்டமாச்சே நீங்க...?"

"வுடுய்யா, ஷர்ட்டைக் கிழிக்காதே... டெர்லின் ஷர்ட் புதுசா இப்பத்தான் பர்மா பஜாரிலே வாங்கினேன்... வுடுய்யா..." கத்தினான் அந்த வாலிபன்.

"அப்படி வா வழிக்கு. இதோ போலீஸ்... நீ செய்ததைச் சொல்லி அவர் கையிலே உன்னை ஒப்படைக்கிறேன்..." ஓங்கி ஒரு அறை முதுகில் வைத்தான் ராஜாபாதர்.



"வேணாம் அண்ணே! கும்பிடறேன் அண்ணே - மன்னிச்சுக்கோ. வுட்டுடு ஓடிடறோம்" கெஞ்சத் தொடங்கினான் அவன்.

"அன்னிக்கு திருவல்லிக்கேணியிலே இதே போல செஞ்சு ஒரு ஏமாந்த மனுசன்கிட்ட நூறு ரூபாய் புடுங்கினிங்க - இங்கே இதே கதையா? படுவா ராஸ்கல்களா, உங்களை நொறுக்கிக் கிழிச்சுக் கூறு போட்டுத் தொங்க வுட்டுடுவேன் - தெரியுமா சேதி..." கர்ஜித்தான்.

"என்னய்யா கூட்டம்? டிராபிக்க டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டு..." போலீஸ் அதிகாரி அருகில் வந்தார்.

அவ்வளவுதான். சற்று முன் அத்தனை வேகத்தில் குவிந்த கூட்டம் கணப்பொழுதிலே நாலாபுறமும் பரவிக் கரைந்து மாயமாய் மறைந்து விட்டது.

ராஜாபாதர் மட்டும் கையைக் கட்டிக்கொண்டு அமுத்தலாக நின்று கொண்டிருந்தான்.

"ஒண்ணுமில்லே - ரிவர்ஸ் செய்யும்போது ஒரு பொடிப்பயல் கையிலிருந்த கம்பால் பின்னால் தடால்னு தட்டிட்டு ஓடிட்டான். இந்தக் குழந்தை பயந்திடுச்சு... அவ்வளவுதான்..." விளக்கினான்.

"சரி சரி! எடுங்கம்மா காரை" போலீஸ் உத்தரவிட்டு விட்டு நகர்ந்தார்.

அதுவரை பயத்திலே அரண்டு போய் உட்கார்ந் திருந்த அந்தம்மாளுக்கு உயிர் வந்தது. முன் ஆசனத்தில் மகளருகிலிருந்த கணவனின் தோளைத் தட்டினாள்.

"நான் சொன்னேனே! அவன்தான் இவன். சமயத்துக்குத் தெய்வம் போல வந்து உதவினான்."

வண்டியினின்று தலையை நீட்டிய அந்தப் பெரிய மனிதர் பெரிதாகப் புன்னகைத்தார். "தாய் யூ, இந்தக்

குப்பத்துப் பசங்களே இப்படித்தான் - அடாவடிப் பேர் வழிகள், நல்ல வேளைக்கு உதவினே'' மெல்லச் சிரித்தார்.

''மன்னிச்சுக்குங்கோ சார்? நான்கூட ஒரு குப்பத்து ஆசாமிதான். குப்பத்திலே இருக்கிற எல்லாருமே போக்கிரிகள் இல்லே. பெரிய மனுஷங்களா காரும் பங்களாவுமா இருக்கிறவங்க எல்லாருமே நல்லவங் கன்னு சொல்லிவிட முடியாது. இல்லையா?'' அவரது முகம் சிறுத்தப் போயிற்று. எனினும் சமாளித்தார். ''வாஸ்தவம்தான்... அயாம் வெரி ஸாரி... அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது... நாளைக்குக் காலை பத்து மணிக்கு அண்ணாசாலை ஆபீசிற்கு நீ வா... கவனிக்கிறேன்...'' புன்னகைத்தார் அவர்...

''ஆமாம் அப்பா... கட்டாயமா மறக்காமல் போய்ப் பார். இவர் ஏதாச்சும் உபகாரம் பண்ணுவார்'' ஒத்துப் பாடினாள் அவர் மனைவி.

உணர்ச்சி வசத்தில் ராஜாபாதரின் உடல் கிடுகிடு வென்று ஆடியது. மீண்டும் ஒருமுறை அவர் முகத்தை உற்றுப் பார்த்தபோது அவன் நெஞ்சு நெருப்பாக எரிந்தது.

''தாங்யூ'' மஞ்சு மெல்லியதாக முறுவலித்துவிட்டு வண்டியை திருப்பிச் சாலையில் அநாயாசமாக ஓட்டிச் சென்றாள். பெரியதொரு படகைப் போன்று சாலையிலே பளபளவென்று ஓடிய அந்த வண்டி மறையும் வரை அவன் நின்று கொண்டிருந்தான்.

கோயிலிலிருந்து திரும்பியவன் வீட்டு வாயிலில் சீடர் படை திரண்டு நிற்பதைக் கண்டான். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. துலுக்காணம் இன்னும் இரண்டு நாட்களில் வெளிவர இருந்தார். உரிமைப் போராட்டத்தில் உள்ளே அடைக்கப்பட்ட அரசியல் தொண்டரை வரவேற்க நண்பர்கள் உற்சாகத்துடன் காத்திருப்பது போல் குப்பத்துத் தலைவரை வரவேற்க சீடர் படையினருக்கு



ஒரே பரபரப்பு. ''என்ன ஏற்பாடுகள் செஞ்சிருக்கீங்க? ஏதாச்சும் இன்னும் செய்யணுமா?'' சீடர்களில் மிகவும் அனுபவப்பட்டவன் துணிவுடன் கேட்டான்.

ஏற்பாடுகள் என்றால் என்ன என்பதை ராஜாபாதர் அறிவான். ஆப்பக்கார அலமேலுவிடம் சொல்லிக் காரசாரமான பதார்த்தங்களை நாலு கூடை நிறையத் தயாரிக்கச் செய்ய வேண்டும். கூட புட்டிகள், மாலைகள் - மற்ற மரியாதைகள் தலைவர் இல்லத்திலேயே ஒரு சிறு கூட்டம். நண்பர்களின் சந்திப்பு - இரவு நடுப்பாதியைத் தொடும்வரை எல்லோரும் சாராயத்தை ஊற்றிக் குடித்து விட்டு மிளகாய் பஜ்ஜியைக் கடித்துத் தின்று, ஆளுக்கு அரைமணி நேரமாவது பேசித் தீர்த்து, தலைவர் சொல்லப் போகும் அனுபவங்களைக் கேட்டு மகிழ்ந்து வெளியேறுவதற்குள் பொழுது விடிந்துவிடும். அதற்கு இப்போது அவசரமாக ஒரு நிதி திரட்டியாக வேண்டும்.

கயிற்றுக் கட்டிலைச் சுற்றி உட்கார்ந்து கொண்டனர். பேசினர். எல்லாம் ஒரு வழியாகத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் கலைந்தது. துலுக்காணம் திரும்பி வந்து குப்பத்துத் தலைவர் பதவியை ஏற்பதைப் பற்றி அவனுக்குப் பொறாமையில்லை. மீண்டும் கள்ளச் சாராயம் - கடத்தல் காரியங்கள் எல்லாம் மும்முரமாகிவிடும் என்றதொரு கவலைதான் அவனுக்கு.

ஆமாம், அவன் தலைவராக இருந்த இந்த மூன்று ஆண்டுகளில் அப்படி என்ன சாதித்து விட்டான்? தெருக்களையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளச் சொன்ன போதுதானே வெற்றி கண்டான்? திருட்டு - சிறு குற்றங்கள் இவைகளிலிருந்து வளரும் சிறுவர்களைக் காப்பாற்றி அவனால் முன்னுக்குக் கொண்டு வர முடிந்ததா? ஆப்பக்கார அலமேலுவையா வது சீர்திருத்த அவளது கள்ளச் சாராயக் கடையை

மூடத்தான் முடிந்ததா! பிறந்ததிலிருந்து அவன் என்ன
இழித்து விட்டான்? எதில்தான் வெற்றி கண்டிருக்கிறான்?
அவனது வாழ்க்கையே ஒரு தோல்வி. கசப்பான
எண்ணங்களில் குமுறிக் கொண்டு அவன் சாப்பிட
உட்கார்ந்தான். மண் எண்ணெயை மிச்சம் பிடிக்க வேண்டி
சம்பகம் அன்று ஹரிகன் விளக்கை ஏற்றவில்லை. காய்
விளக்கைப் பொருத்தி ஆணியில் மாட்டியிருந்தாள்.
அதனுடைய மெல்லிய ஒளியில் மூலையிலிருந்து
அடுக்குப் பானைகள் நீண்ட நிழலை எழுப்பிக்
கொண்டிருந்தன.

டிபன் செட்டிலிருந்து சோற்றை அள்ளிப் போட்டுக்
கொண்டு ரசத்தை ஊற்றிக் கொண்டான். சட்டென்று அந்த
பங்களாவின் வரவேற்பறை அவன் நினைவில் வந்து
நின்றது. ஒரு சமயம் துலுக்காணம் வெளி நாட்டுக்காரன்
ஒருத்தனைச் சந்திக்க ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்
ஒன்றுக்குப் போக வேண்டியிருந்தது. கூடத்துணைக்கு
அவனை அழைத்துச் சென்றிருந்தார். பேச வேண்டிய
விஷயங்களைத் தனியே பேச அவர்களிருவரும்
அறைக்குள் போய்விட்டனர். ராஜாபாதர் தனியே அந்த
ஹோட்டலின் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தான்.
இருட்டி விட்டதால் பளிச்சென்று விளக்குகள் எரியத்
தொடங்கின. தலைக்குமேல் தொங்கிய அந்தச் சர
விளக்கை நிமிர்ந்து பார்த்தவன் அப்படியே சொக்கிப்
போய்விட்டான். விளக்கு கக்கிய ஒளியில் அந்த
அறைக்கே ஒரு பிரமாதமான களை. நுங்கம்பாக்கத்து அந்த
பங்களாவின் முன்னறையில் வண்ண வண்ணமாக
ஒளியை உமிழும் கண்ணாடிச் சர விளக்கடியில் அப்பன்,
மகள், ஆத்தாள் மூவரும் உட்கார்ந்து கோவிலில் நடந்த
சம்பவத்தைப் பற்றிப் பேசிப் பேசிச் சிரித்துக்
கொண்டிருப்பார்கள். ஆள் வந்து சாப்பிட அழைப்பான்.
இங்கே அலுமினியத் தட்டில் சோற்றை அள்ளிப்



போட்டுக் கொண்டு ரசத்தை ஊற்றி தாயும் மகனும்
தின்றார்களே அப்படியா அங்கே? வழவழவென்று
இருக்கும் கருங்காலி மேஜை மீது வெள்ளித் தட்டுகளில்
வேலையாள் கொண்டு வந்து விதம் விதமான
பதார்த்தங்களைப் பரிமாற மூவரும் உட்கார்ந்து பேசி
சுவைத்து... திடீரென்று அவனுக்குப் புரை ஏறிக் கொண்டு
விட்டது. தலையைத் தட்டிக் கொண்டான். ஒரு கணம்
திக்கு முக்காடிப் போனான்.

''ரசம் ரொம்பக் காரம். தினம் இதை ஊத்தித்
தின்னுட்டு ராத்திரியெல்லாம் வயித்திலே ஒரே எரிச்சல்.''
தாய் முணுமுணுத்தாள். 'என்னைக்கு என்னைப் பெத்த
அந்த அயோக்கியனை எனக்கு காட்டினீங்களோ
அன்னியிலிருந்து என் வயிறு எரியுது. என் நெஞ்சு
நெருப்பாக் கொதிக்குது' கத்தவேண்டும் போன்றதொரு
ஆவேசம் பற்களைக் கடித்துக் கொண்டு சமாளித்தான்.
கொஞ்சம் தண்ணீரைக் குடித்து விட்டுச் சோற்றை அள்ளிப்
போட்டுக் கொண்டான்.

''கோயில் விபூதி கொஞ்சம் எனக்கும்
கொண்டாந்தியா!''

''அதுக்கு என்ன அவசரம்? வெகு சீக்கிரம் உங்க
நெற்றியிலே அதைத்தான் வச்சுக்கப்போறீங்க. அந்தப்
பாவியை...'' தனக்குள்ளே வெகுண்ட ராஜாபாதர்
இடுப்பிலிருந்த கத்தியை மெல்லத் தடவினான். கூரிய
அதன் முனையை அவன் நெஞ்சிலே பாய்ச்சி ஒரே
குத்தில் ஆளைத் தீர்த்து கட்டிட்டு... ''ஏலே டேய்!
என்னடா எங்கேயோ முளிச்சுகிட்டு யோசிக்கிறே?
நாளைக்கு அண்ணாசாலை ஆபீசுக்குப் போய் பார்க்கச்
சொன்னாங்க அந்தம்மான்னு அன்னிக்குச் சொன்னி
யேடா, மறந்து பூடாதே. டாக்டர் சிபாரிசு பண்ணி
யிருக்கார். அதனாலே கட்டாயம் உதவி பண்ணுவார்டா.

உன் நன்மைக்குச் சொல்றேண்டா என் ராஜா!'' தாயார் கெஞ்சலும் கொஞ்சலுமாகப் பேசிவிட்டு இருமத் தொடங்கினாள்.

''கட்டாயம் நாளைக்குப் போய் அவரைப் பார்க்கிறேன். கவலைப்படாதீங்க அம்மா'' எரிச்சலை அடக்கிக் கொண்டு சொன்னான் ராஜாபாதர். 'கட்டாயம் உன் வேலையைத் துவங்கும் நாள் நெருங்கிக்கிட்டுவரது. போடா போ, நாளைக்கே போய் அந்தப் பாவியைப் பார்' ஓலமிட்டது அவனது உள்ளம்.

## 6

**அன்று** இரவு அவன் உறங்கவேயில்லை. என்ன முயற்சித்தும் மோகன் விஸ்வரங்கத்தின் முகத்தை அவன் நினைவினின்று நீக்கவே முடியவில்லை.

அந்த முகத்தை அவன் பாராதபோது - உண்மை தெரியாதபோது - தந்தை வெளியூரில் எங்கேயோ காணாமல் போய்விட்டார் என்ற கதையை நம்பியபோது - சின்னஞ் சிறுவனாக அவன் இருந்த போது - எத்தனை இரவுகள் பார்த்திராத தந்தை என்பவனைப் பலதோற்றத்தில் கற்பனை செய்து கண்ணீர் வடித்துத் தலையணை நனைய அழுதிருக்கிறான்? எல்லாப் பிள்ளைகளையும் போல் - அப்பனது கழுத்தைக் கட்டிக்கொண்டு அருகிலே படுத்து உறங்கும் பாக்யம் தனக்கில்லையே என ஏங்கித் தவித்த அந்தப் பிஞ்சு உள்ளத்தின் உணர்ச்சிப் போராட்டத்தை யார் அறிவார்?

''உனக்கு அப்பா இல்லையா?'' பள்ளி ஆசிரியர் ஒரு தடவை கேட்டபொழுது கண்கலங்கி முகம் சிவந்து



தரையைப் பார்த்துக்கொண்டு நின்றானே? அப்போது அவன் பட்ட வேதனையை யாராவது புரிந்து கொண்டிருப்பார்களா?

''அப்பன் தெரியாத பொடிப் பயல் பேசவந்துட்டான்!'' என்று ஒருமுறை குப்பத்து வாலிபன் ஒருத்தன் அவனிடம் வாய்ச் சண்டைக்கு வந்தபோது உடம்பெல்லாம் பதறித் துடித்து எரிமலையாக எழுந்து அவனை அடித்து நொறுக்கி விட்டானே? அந்த நிகழ்ச்சியை மறக்க முடியுமா?

அதற்குப்பின் தலைவர் துலுக்காணத்தின் முன் குற்றவாளியாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றபோது அவர் வாயில் வந்தபடித் திட்டி காயம் பட்டவனுக்கு அபராதத் தொகை மூன்று ரூபாய் கட்டச் சொல்லித் தீர்ப்பளித்தபோது... கழுதையாக வேலை செய்து அந்தக் கடனைக் கட்டித் தீர்த்ததைத்தான் மறக்க இயலுமா? அந்த அடிநாள் நினைப்பெல்லாம் நீர் வீழ்ச்சியாக நெஞ்சைக் குமுறச் செய்தன. சூதுவாது தெரியாத கிராமத்துப் பெண் என்றுதானே மோகன் அவனது தாயை ஏமாற்றி வஞ்சித்து விட்டான். அத்துடன் அவளது வாழ்க்கையையும் நாசமடித்து விட்டான்! அப்படிப்பட்ட நாசகாலன் இந்த உலகில் நீண்ட காலம் வாழ்வதா? வாழத்தான் அவனை விட்டு வைப்பதா? உகும்!... பழிக்குப் பழி...

மறுநாட் காலை குளித்துவிட்டுச் சுத்தமாக உடுத்திக் கொண்டு பஸ்ஸைப் பிடித்து அண்ணாசாலையில் வந்து இறங்கினான். மோகன் விஸ்வரங்கத்தின் ஆபீசைக் கண்டு பிடிக்க அதிக நேரம் செல்லவில்லை. முன்பின் தெரிந்தவன் போல் வாயிலைக் காத்து நின்ற ஆபீஸ் பையன் அவனை உள்ளே போக அனுமதியளித்து விட்டான்! முன்கூட்டியே எஜமான் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

ரிஸப்ஷனிஸ்ட் அவனைப் பார்த்துப் புன்முறுவலித்தாள். "மிஸ்டர் ராஜாபாதர்... உங்களை முதலாளி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்" அவள் தேனான குரலில் 'மிஸ்டர்' போட்டு அழைத்தது கேட்டுப் பூரித்துப் போனான் அவன்.

ஒரு பியூன் வேலையைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறவனுக்கு இத்தனை மரியாதையா?... வியப்புடன் அவள் காட்டிய அறையின் கனமான கதவுகளைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே சென்றான். வெளியே பொசுக்கிய வெய்யிலே தெரியாத ஏ.சி. அறையின் குளு குளுப்பில் முதலாளி மோகன் ஜம்மென்று சாய்ந்து கொண்டிருந்தார். அவர் தனியாக இருக்கவில்லை. பைல் கட்டுகளுடன் மூக்கின் மேல் கண்ணாடி அடிக்கடி நழுவ சரிப்படுத்திக் கொண்டு அருகில் நின்றார் அவரது பி.ஏ. பஞ்சநதம். அவனுக்கு மெத்த ஏமாற்றம். தன்னந்தனியாக முதலாளியை அவர் அறையிலேயே சந்திக்கும் போது அந்தக் கத்தியால் ஒரே குத்துக் குத்திக் காரியத்தை முடித்து விட்டு வெளியே பாய்ந்து ஓடி விடுவது என்ற தீர்மானத்துடன் வந்தவன் திருதிரு வென்று விழித்துக்கொண்டு நின்றான்.

மோகனது முகத்திலே பரவலான சிரிப்பின் மலர்ச்சி "ஓ! நல்லவேளை வந்துட்டே இன்னும் கொஞ்சம் தாமதமா வந்திருந்தா நான் இங்கே இருந்திருக்க மாட்டேன்..." கூறி விட்டு அருகில் நின்ற பி.ஏ.யின் முகத்தைப் பார்த்தார்.

"இப்போ இங்கே எந்த வேகன்ஸியும் இடையாதே..." இழுத்தார் அவர்.

தாடையைத் தடவிக் கொண்டார் மோகன். அவனை உற்றுப் பார்த்தார்.



"அயாம் வெரி ஸாரி... பாய்... போன வாரமே டாக்டர் எனக்கு போன் செய்திருந்தால் இங்கே காலியாக இருந்த அந்த கிளார்க் போஸ்ட்டில் உன்னைப் போட்டிருப்பேன்... அம்பத்தூர் தொழிற்சாலையிலும் இப்போ ஒண்ணும் காலி இல்லை... ம்... உனக்கு ஆட்சேபணை இல்லைனா..." அவன் முகத்தை யோசனையுடன் பார்த்தார்.

ஏமாற்றத்தில் இடிந்து போய் நின்றான் அவன்.

"கிளார்க் வேலைதான் வேணும் இல்லாட்டி - பியூன் வேலைதான் வேணும் என்று கட்டாயமில்லை. ஏதாவது ஒரு வேலை கிடைச்சாப் போதும். என்னைப் பொறுத்தவரை உழைப்பிலே உயர்வு தாழ்வு கிடையாதுங்க..."

"சாதுர்யமாகத்தான் பேசறே. உன்னைப் பார்த்தால் எங்கேயோ பார்த்தது போல ஒரு நினைப்பு ஏற்படறது. வேலை எதுவும் இல்லை போன்னு திருப்பி அனுப்ப மனசில்ல - அதே சமயம் நான் சொல்ற வேலையை நீ செய்ய ஒப்புக்குவாயோன்னு தயக்கமாக வேறே இருக்கு - ஆமாம்! இதுக்கு முன்னாடி உன்னை நான் எங்கேயோ பார்த்த ஞாபகம். எங்கே? தெரிஞ்ச முகமா இருக்கே? ம்..." கீழுதட்டை ஆலோசனையுடன் கடித்துக்கொண்டு அவனைப் பார்த்தார்.

மனத்தை இறுக்கிய வேதனையை விழுங்கிக் கொண்டான். "என்னைப் பார்த்ததில்லை. என் தாயைத்தான் பல ஆண்டுகளுக்கு முன் உன் பாவக் கண்கள் பார்த்திருக்கின்றன...' பளிச்சென்று சொல்ல வாய் துடித்தது... சொன்னால் காரியம் கெட்டுவிடுமே!

இல்லை என்று பொருள்படத் தலையை அசைத்தான்.

''உனக்குத் தோட்ட வேலை ரொம்பப் பிடிக்குமாமே? டாக்டர் போனில் சொன்னார்.''

மௌனமாக மீண்டும் தலையை ஆட்டினான்.

''உனக்குத் தடை இல்லையினா அம்பத்தூரில் உள்ள எங்க தொழிற்சாலைத் தோட்டத்தை மேற்பார்வையிடும் பொறுப்பை உனக்குக் கொடுக்கிறேன். தொழிற்சாலையைச் சுற்றிலும் அழகானதொரு தோட்டத்தை வளர்க்க நாங்க ரொம்ப உற்சாகம் எடுத்துக்கிட்டிருக்கிறோம். அதை மேற்பார்வையிடுகிறவர் மூனு மாச வீவில் ஊருக்குப் போயிருக்கிறார். இப்ப சத்தியா அந்த வேலையை உனக்குத் தரேன். நிலத்தைக் கொத்தி தண்ணீர் பாய்ச்சி - எரு போடறது போலக் கஷ்டமான வேலைகளைச் செய்ய நாலு ஆட்கள் இருக்காங்க. நீ அவங்க வேலையைக் கவனிச்சு மேற்பார்வை பண்ணனும். அவ்வளவுதான், என்ன சொல்றே? மாசம் நூறு ரூபாய் சம்பளம். தினம் காலை ஏழு மணிக்கு இங்கே வந்து ஆபீஸ் வாசல்லே நின்னால் எங்க தொழிற்சாலை பஸ் வரும் - எங்க தொழிலாளிகள் அதிலே ஏறிக்கொண்டு அம்பத்தூருக்குப் போவாங்க. நீயும் அதில் வர ஏற்பாடு செய்கிறேன். பஸ் சாயங்காலம் இங்கே கொண்டு வந்து விட்டுவிடும். இதுக்கு மேலே உன் தகுதிக்கு இங்க இப்போ வேறே வேலை கிடையாது.'' படபடவென்று முடித்தார்.

கையெடுத்துக் கும்பிட்டான் ராஜாபாதர். ''நன்றி லார்! இந்த வேலையை நான் சந்தோஷமா ஏத்துக்கறேன்.''

''அப்ப நாளையிலிருந்து துவங்கலாம் - மிஸ்டர் பஞ்சநாதம்! இதை நீங்க நோட் பண்ணிக்கோங்க - எனக்கு அவசரமா அம்பத்தூர் போக வேண்டியிருக்கு... பின்னால் வந்து பைல்களைக் கவனிக்கிறேன்... ஓ, கே...''



விடுக்கென்று எழுந்தார் மோகன். டக்டக்கென பூட்ஸ் ஒலிக்க அவர் வெளியே சென்று விட்டார்.

'இந்த மனிதனைத் தனியாகவே சந்திக்க முடியாதா?... ஒரு சமயம் அம்பத்தூர் தொழிற்சாலையில் சந்தர்ப்பம் கிடைச்சால் -' யோசித்தபடி அவன் வெளியே வந்தான். அவர் காரில் ஏறிக் கொண்டார். வண்டி வேகமாகச் சாலையில் நகர்ந்தது... வெகு நேரம் அதையே அவன் வெறித்துக் கொண்டு நின்றான்.

மகளுக்கும் மனைவிக்கும் பென்ஸ் கார் - அப்பனுக்கு இம்பாலா... அவனுக்கு?... தொழிலாளிகளோடு தொழிலாளியாக பஸ்! வெகுண்டபடி அவன் வேகமாக வெய்யிலில் நடந்தான்.

மறுநாளே அவன் அந்த வேலையில் போய் சேர்ந்து விட்டான். துலுக்காணம் திரும்பி வந்துவிட்டார். குப்பத்திலே மீண்டும் பல குழப்பங்கள். இப்போது அவைகளைக் கவனிக்க அவனுக்கு நேரமே இல்லை. காலையில் எழுந்து வேலைக்குப் புறப்பட்டுச் சென்றால் இருட்டும் நேரத்தில் தான் வீட்டிற்கு வர முடிந்தது... எப்படியோ நாட்கள் வேகமாக ஓடின - ஒரு மாத காலம் சென்றது. அந்த மாதச் சம்பளம் வாங்கியதும்... வீட்டில் கொண்டு வந்து தாயின் கையில் கொடுத்தான். அப்போதுகூட அவன் தாயிடம் தான் யாரிடம் வேலை செய்கிறான் என்பதைப் பற்றி வாயைத் திறக்கவில்லை.

முன்னைவிடத் தோட்டம் இப்போது மிகவும் அழகாக விளங்கியதை முதலாளி கவனிக்கத் தவறவில்லை. ராஜாபாதருக்கு மலர்கள் என்றால் மிக்க விருப்பம் - அதுவும் ஒட்டு ரோஜா என்றால் உயிர். மேற்பார்வையிடத் தொடங்கியதும் சில பகுதிகளில் பலதரப்பட்ட ஒட்டு ரோஜாக் கன்றுகளை நட்டுப் பயிராக்கி வளர்க்கத் தொடங்கிவிட்டிருந்தான். ஒரு

பாத்தியில் நட்ட செடியெல்லாம் துளிர்த்துக் கொண்டு மொட்டுக்கள் விட்டு பூக்கவும் தொடங்கிவிட்டிருந்தன. செவேலென்று இதழ்களை விரித்துக் கொண்டு காற்றிலே மெல்லத் தலையசைத்து மெல்லிய மணத்தைப் பரப்பிக் கொண்டு நின்ற ஒரு செடியருகே வந்து நின்றான். அவனுக்குப் பிடித்த ரோஜா வகை. மெல்ல இதழ்களை வருடினான்... வேரின் அருகே முளைத்துக் கொண்டு வந்த புற்களைக் கவனித்து அவைகளைக் களைய கீழே உட்கார்ந்தான். அதே சமயம் ஆபீஸ் வாசலில் பலர் பேசும் குரல்கள் கேட்கவே திரும்பினான்.

முதலாளி - வியாபார நண்பர்கள் சிலருடன் சிரித்துப் பேசிக் கொண்டு வந்து வெளியே நின்றார். கார்கள் வரிசையாக நிற்க அமைந்திருந்த இடத்தருகேதான் அந்த ரோஜாப் பாத்தி இருந்தது... அவர்கள் எல்லோரும் பேசிக் கொண்டே தங்கள் கார்களை நாடியபடி வந்து கொண்டிருந்தனர். உரத்த குரலில் மோகன் உற்சாகமாகப் பேசியது அவன் காதுகளில் கணீரென்று கேட்டது.

"மஞ்சுவுக்குக் கூடிய சீக்கிரம் கல்யாணம் ஆகப் போகிறது தெரியுமில்லியா?..." சிரித்தார் மோகன்.

"மனம் போல மாங்கல்யம்னு கேள்விப்படறேன். நிச்சந்தானே?" நண்பரின் பரிகாசக் குரல்.

"இந்தக் காலத்துப் பசங்க மனசு வச்சா ஒரே பிடிதான். மஞ்சு எனக்கு ஒரே பெண். எப்படி மறுக்க முடியும்? அவளுக்குப் பிடிச்ச அந்தப் பையன் அப்படி ஒன்னும் இல்லே... என் சிநேகிதன் செல்வசிங்கத்தின் ஒரே மகன்."

"பணம் பணத்தோடு சேருகிறதுன்னு சொல்லுங்கோ..."

"இல்லை... இது காதல் கல்யாணம்... ஏதோ எதிர்பாராத விதமாக இரண்டு பக்கமும் வசதியான



குடும்பங்களாக அமைஞ்சுடுத்து... அவ்வளவுதான்..." பற்கள் அனைத்தையும் காட்டிக் கொண்டு உரத்துச் சிரித்தார் மோகன். தன் மகளுக்குக் கல்யாணம் - அவள் காதலிக்கிறவனை விரைவில் மணக்கப் போகிறாள் என்ற விஷயத்திலே அவருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி?... ரோஜாவின் வேர் அருகே பலமாக ஊன்றி முளைத்திருந்த ஒரு புற்கத்தையை அழுத்தமாகப் பற்களைக் கடித்துக் கொண்டு பிடுங்கி அப்பால் போட்டான். அவன் நெஞ்சு படபடவென்று ஆத்திரத்தில் துடித்துக் கொண்டது. தன் மகள் காதலிக்கிறாள் என்பதைப் பற்றி இப்போது பெருமைப்படுகிறான். ஏழைத் தோட்டக்காரன் மகள் காதலித்ததைப்பற்றி... துச்சமாகவல்லவா நினைத்தான், மோசக்காரன். உருக்கு ஆலைத் தீயாக எண்ணங்கள் அவன் நெஞ்சில் குமுறின. நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு மெல்ல எழ முயற்சித்தான். முதலாளியின் காலடி ஓசை அருகில் கேட்டது. நண்பர்கள் காரில் ஏறிக் கொண்டு விட்டனர். விடை கொடுத்து விட்டு அவர் ரோஜாப் பாத்தியருகே வந்து கொண்டிருந்தார். பளபளத்த அவரது பூட்ஸ்களைத்தான் முதலில் பார்த்தான். பின்னர் பார்வை அவரது ஸூட் - மேலே தரித்திருந்த கோட்... பின்னர் முகத்தின்மீது பரவியது... புன்னகையுடன் அவன் அருகே மோகன் நின்று கொண்டிருந்தார்.

"நீ வந்தப்புறம் இந்தத் தோட்டம் ரொம்ப அழகாயிடுச்சு - பாராட்ட வேண்டிய சங்கதிதான். உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்லப் போறேன். அண்ணா சாலை ஆபீஸில் ஜூனியர் கிளார்க் போஸ்ட் ஒண்ணை உண்டு பண்ணியிருக்கேன். அடுத்த மாசத்திலிருந்து அதில் உன்னைப் போடுவதாகத் தீர்மானம்." மெல்லச் சிரித்தார் அவர்.

"தாங்யூ ஸார்!" - நிமிர்ந்து அவன் எழுந்து நின்றான். அவனையறியாது அவன் கரம் இடையிலிருந்த கத்தியைத்

பாத்தியில் நட்ட செடியெல்லாம் துளிர்த்துக் கொண்டு மொட்டுக்கள் விட்டு பூக்கவும் தொடங்கிவிட்டிருந்தன. செவேலென்று இதழ்களை விரித்துக் கொண்டு காற்றிலே மெல்லத் தலையசைத்து மெல்லிய மணத்தைப் பரப்பிக் கொண்டு நின்ற ஒரு செடியருகே வந்து நின்றான். அவனுக்குப் பிடித்த ரோஜா வகை. மெல்ல இதழ்களை வருடினான்... வேரின் அருகே முளைத்துக் கொண்டு வந்த புற்களைக் கவனித்து அவைகளைக் களைய கீழே உட்கார்ந்தான். அதே சமயம் ஆபீஸ் வாசலில் பலர் பேசும் குரல்கள் கேட்கவே திரும்பினான்.

முதலாளி - வியாபார நண்பர்கள் சிலருடன் சிரித்துப் பேசிக் கொண்டு வந்து வெளியே நின்றார். கார்கள் வரிசையாக நிற்க அமைந்திருந்த இடத்தருகேதான் அந்த ரோஜாப் பாத்தி இருந்தது... அவர்கள் எல்லோரும் பேசிக் கொண்டே தங்கள் கார்களை நாடியபடி வந்து கொண்டிருந்தனர். உரத்த குரலில் மோகன் உற்சாகமாகப் பேசியது அவன் காதுகளில் கணீரென்று கேட்டது.

''மஞ்சுவுக்குக் கூடிய சீக்கிரம் கல்யாணம் ஆகப் போகிறது தெரியுமில்லியா?...'' சிரித்தார் மோகன்.

''மனம் போல மாங்கல்யம்னு கேள்விப்படறேன். நிசந்தானே?'' நண்பரின் பரிகாசக் குரல்.

''இந்தக் காலத்துப் பசங்க மனசு வச்சா ஒரே பிடிதான். மஞ்சு எனக்கு ஒரே பெண். எப்படி மறுக்க முடியும்? அவளுக்குப் பிடிச்ச அந்தப் பையன் அப்படி அன்னியனும் இல்லே... என் சிநேகிதன் சொக்கலிங்கத்தின் ஒரே மகன்.''

''பணம் பணத்தோடு சேருகிறதுன்னு சொல்லுங்கோ...''

''இல்லை... இது காதல் கல்யாணம்... ஏதோ எதிர்பாராத விதமாக இரண்டு பக்கமும் வசதியான



குடும்பங்களாக அமைஞ்சுடுத்து... அவ்வளவுதான்...'' பற்கள் அனைத்தையும் காட்டிக் கொண்டு உரத்துச் சிரித்தார் மோகன். தன் மகளுக்குக் கல்யாணம் - அவள் காதலிக்கிறவனை விரைவில் மணக்கப் போகிறாள் என்ற விஷயத்திலே அவருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி?... ரோஜாவின் வேர் அருகே பலமாக ஊன்றி முளைத்திருந்த ஒரு புற்கத்தையை அழுத்தமாகப் பற்களைக் கடித்துக் கொண்டு பிடுங்கி அப்பால் போட்டான். அவன் நெஞ்சு படபடவென்று ஆத்திரத்தில் துடித்துக் கொண்டது. தன் மகள் காதலிக்கிறாள் என்பதைப் பற்றி இப்போது பெருமைப்படுகிறான். ஏழைத் தோட்டக்காரன் மகள் காதலித்ததைப்பற்றி... துச்சமாகவல்லவா நினைத்தான், மோசக்காரன். உருக்கு ஆலைத் தீயாக எண்ணங்கள் அவன் நெஞ்சில் குமுறின. நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு மெல்ல எழ முயற்சித்தான். முதலாளியின் காலடி ஓசை அருகில் கேட்டது. நண்பர்கள் காரில் ஏறிக் கொண்டு விட்டனர். விடை கொடுத்து விட்டு அவர் ரோஜாப் பாத்தியருகே வந்து கொண்டிருந்தார். பளபளத்த அவரது பூட்ஸ்களைத்தான் முதலில் பார்த்தான். பின்னர் பார்வை அவரது ஸூட் - மேலே தரித்திருந்த கோட்... பின்னர் முகத்தின்மீது பரவியது... புன்னகையுடன் அவன் அருகே மோகன் நின்று கொண்டிருந்தார்.

''நீ வந்தப்புறம் இந்தத் தோட்டம் ரொம்ப அழகாயிடுச்சு - பாராட்ட வேண்டிய சங்கதிதான். உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்லப் போறேன். அண்ணா சாலை ஆபீஸில் ஜூனியர் கிளார்க் போஸ்ட் ஒண்ணை உண்டு பண்ணியிருக்கேன். அடுத்த மாசத்திலிருந்து அதில் உன்னைப் போடுவதாகத் தீர்மானம்.'' மெல்லச் சிரித்தார் அவர்.

''தாங்யூ ஸார்!'' - நிமிர்ந்து அவன் எழுந்து நின்றான். அவனையறியாது அவன் கரம் இடையிலிருந்த கத்தியைத்

தேடியது. அந்தச் சமயம் அந்தக் கார்கள் அவர்களைத் தாண்டி - வளைந்திருந்த தோட்டத்துப் பாதையில் சென்றன. அவர் நண்பர்களுக்குக் கையை ஆட்டத் திரும்பினார். ஒரே ஒரு வினாடிப் பொழுதுதான். பரபரப்புடன் உறையிலிருந்த கத்தியை உருவித் தயாராகத் தன் வலது புற இடுப்பில் எடுத்துச் செருகிக் கொண்டு - உறையை வழக்கம்போல் இடது பக்கத்தில் வைத்துக் கொண்டான். சுற்றிலும் கண்களை ஓட்டினான். நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. உடல் முழுவதிலும் வியர்வை குப்பென்று பூத்து வழிந்தது. வாயும் தொண்டையும் பரபரப்பிலே காய்ந்து போயின.

இம்பாலா டிரைவர் - புத்தகமொன்றில் ஆழ்ந்து விட்டிருந்தான். மற்ற கார்களில் யாரும் இருக்கவில்லை. தோட்டத்துக்கு வெகுதொலையில் வாயிலில் கூர்க்கா சோகன் அமர்ந்திருந்தான். அவன் வாயிலையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். ஆபிஸ் வாயிற்படிகளில் இறங்கி வந்த செகரட்டரி யாரையோ தேடுவதுபோல் அந்தப் பக்கம் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்.

இதைவிட அவனுக்கு வேறு ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கப் போகிறதா? உண்மை தெரிந்த நாளிலிருந்து தீட்டித் தீட்டிக் கூராக்கி வைத்திருந்த கத்திக்கு வேலை தானாகவே அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது. பேசிக் கொண்டே அவர் செம்பருத்திப் பூ புதராக வளர்ந்து நின்ற பகுதியருகே போய் நின்றார். நல்ல இடம். யாரும் பார்க்க இயலாத இடம். ஒரே குத்து. இடது மார்பில் ஓங்கிப் பலம் கொண்ட மட்டும் அந்தக் கத்தியைப் பாய்ச்ச வேண்டியது - ஆள் அத்தோடு குளோஸ் ஆகிவிடுவான். தோட்டத்தின் பின்புறமாக ஓடிவிட அவனுக்கு நேரம் இருக்கும். பின்னர் மற்றவை பற்றிச் சிந்திக்க இப்போ என்ன அவசரம்?



ஒரு சமயம் அவன் ஓடுமுன் ஆட்கள் அவனை வந்து பிடித்துக் கொண்டு விடலாம். டாக்டர் ஏகாம்பரம் மெத்த அதிர்ச்சியடைவார். ஆனால் குப்பத்துத் தலைவர் துலுக்காணம் அவனை விட்டு விடமாட்டார். தக்க வக்கீல் வைத்துக் கேஸ் நடத்துவார். பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக - கொட்டை எழுத்துக்களில் கொலை விவரம் வந்து கொண்டேயிருக்கும். பிரபல தொழில் அதிபர் மோகன் விஸ்வரங்கத்திற்கு வாலிப வயதில் தோட்டக் காரன் மகள் சம்பகத்துடன் கள்ள நட்பு இருந்தது. அதன் பயனாகப் பிறந்தவன் ராஜாபாதர். தன் தாயைக் கைவிட்ட துரோகியைத் தேடிப் பழிவாங்கப் பல வருடங்களாகத் திட்டமிட்டுச் செய்த துணிகரக் கொலை. பலவிதமாகப் பிரசுரிப்பார்கள்... படிப்பவர்கள் பிரமிப்பார்கள். மோகன் செய்த மோசம் அம்பலமாகும். மனைவியும் மகளும் தலை குனிந்து நிற்பார்கள் - நிற்கட்டும். பாவி - சண்டாளன் ஒழியட்டும் - ரத்தம் கொதித்து மூளையைத் தாக்கி... ஆவேச உணர்வுடன் இடுப்பிலிருந்த கத்தியை உருவிக் கொண்டான்.

"அந்த ரோஜாவுக்குத்தானே ஹாப்பினஸ்னு பேர்?" கேட்டார் மோகன். அருகில் சென்று அந்த மலரின் அழகை உற்றுப் பார்த்து மயங்கிய வண்ணம் நின்றார்.

"ஆமாம்!" என்றான் ராஜாபாதர். உள்ளூர ஒரு ஏளனச் சிரிப்பு. "உன் ஹாப்பினஸ் இப்போ முடியப் போகிறதே! முடி..." கொஞ்சம் முன்னால் நடந்தார் முதலாளி - தொடர்ந்தான் அவன் எமன் போல்... திடீரென்று அவர் தமது இடது கரத்தை மார்பில் வைத்துக் கொண்டு, "அப்பா... ஐயோ வலிக்குது..." என்று கூவினார். இம்பாலா டிரைவர் டக்கென்று புத்தகத்தை விசிறி ஆசனத்தில் போட்டு விட்டுக் காரின் கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்தான். கையில் பிடித்திருந்த

கத்தியை ராஜாபாதர் சட்டென்று இடுப்பில் செருகிக் கொண்டு விட்டான்.

முதலாளிக்கு என்ன? ஏன் இப்படித் திணறுகிறார்?... ஐயோ கால்கள் தள்ளாடுகிறதே...

"தண்ணி - குடிக்கக் கொஞ்சம்... நெஞ்சை வலிக்குதே" மூச்சவிட... பேச முடியாது தடுமாறிய முதலாளி தரித்துவிட்ட நெடு மரம்போல் அவன் தோள்மீது சாய்ந்து விட்டார். அதற்குள் விஷயம் எப்படித்தான் பரவியதோ, ஆச்சரியம். செகரட்டரி ஓட்டமும் நடையுமாக விரைந்தோடி வந்து கொண்டிருந்தார். "டாக்டருக்கு போன் பண்ணுங்கள் தண்ணி ஒரு டம்ளர்." ஆட்கள் பலரின் கூக்குரல். சுற்றிலும் ஒரு கூட்டம். அவனையுமறியாது ராஜாபாதர் அவரைத் தன் மடிமீது சாய்த்துக்கொண்டு தரையில் உட்கார்ந்திருந்தான்.

மோகன் லேசாகக் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தார். முகத்திலே மெல்லிய சிரிப்பு நிழலாடியது. அடுத்தகணம் அவரது கண்கள் மூடிக்கொண்டன.

"யாரது? டாக்டரைக் கூட்டி வாருங்களேன்"... ராஜாபாதர் தன்னையும் மீறிய ஒரு வேகத்திலே கத்திக் கூச்சலிட்டான்.

டாக்டர் விரைவில் வந்து சேர்ந்தார். அவன் மடியில் தலை சாய்த்து வைத்துக்கொண்டு கிடந்த மோகன் அதற்குள் பிணமாகிவிட்டு இருந்தார்.

"ஸாரி! ஹார்ட் அட்டாக்! மாசிவ் அட்டாக்!" உதட்டைச் சுழித்துக்கொண்டுவிட்டுத் தலையை அசைத்தார் வைத்தியர். பின்னர் ஆட்கள் உடலை அவனது மடியினின்று தூக்கி உள்ளே கொண்டு சென்றனர். அதற்குப் பின்னர் அவனுக்கு அங்கே நிற்கப் பிடிக்க வில்லை.



ராஜாபாதரால் அந்த அதிர்ச்சியைத் தாள முடியவில்லை. எத்தனை காலமாக அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். 'பழி தீர்க்க நல்லதொரு வாய்ப்புக் கிட்டியபோது பாவிப்பயல் எமன் அவனை முந்திக் கொண்டு விட்டானே?...' என்ற ஏமாற்றம்.

வீட்டிற்குள் நுழைந்த மகனைக் கண்டு சம்பகம் மிகவும் பயந்த விட்டாள். பேயறைந்தது போன்ற முகம். இவனுக்கு என்ன வந்துவிட்டது? இத்தனை சுருக்கா ஆபீசிலிருந்து ஏன் திரும்பி விட்டான்?

"இன்னிக்கு ஆபீஸ் லீவா...?" மெல்லக் கேட்டாள் கவலையுடன்.

"ஆமாம். பாதி நாள் ஆபீஸ் - தொழிற்சாலை எல்லாத்தையும் மூடி விட்டாங்க. முதலாளி செத்துப் போயிட்டார்."

"அட பாவமே!"

"மாரடைப்பாலே ஆசாமி ஒரே நிமிசத்துலே பட்டுனு போயிட்டான். தோட்டத்தைச் சுத்திப் பார்க்க வந்தவன் என் கையிலே சாஞ்சு அப்படியே உசிரை விட்டுட்டான். ஒரு வழியில் அந்தப் பாவிப் பயல் கொடுத்து வச்சவன்தான். பெத்த மகன் மடியிலேயே உசிரை விடற யோகம் சும்மாவா கிடைக்கும்?..."

"என்னடா உளர்ரே?" ...அவள் அதட்டினாள்.

"உண்மையைச் சொல்றேன். என் மடிலேதான் உங்க புருசன் உசிரை விட்டான். ஆனால் என் கைக் கொள்ளி வாங்கிட்டுப் போக அவனுக்குக் கொடுப்பினை இல்லை. அண்ணன் புள்ளே கொள்ளி போடப் போறானாம். பேசிக்கிட்டாங்க. நான் அக்னி சாட்சியா கட்டிக்கிட்ட பொண்டாட்டிக்குப் பிறந்த புள்ளையா, கொள்ளிபோட?" வெறுப்புடன் சிரித்தான் அவன்.

''டேய் ராஜா! என்னடா குழப்பறே? விளக்கமாச் சொல்லுடா... என் உடம்பெல்லாம் பதறுது...'' சம்பகம் நடுங்கினாள்.

''இத்தனை நாளா நான் யார்கிட்டே வேலை செஞ்சுக் கிட்டிருந்தேன்? என்னைப் பெத்த அப்பன் மோகன் விஸ்வரங்கத்துக்கிட்டத்தான் தோட்டக்காரனா வேலை பார்த்துக்கிட்டிருந்தேன். அதுதான் எனக்கு லாயக்கு. ஏன் தெரியுமா? என் பாட்டன் தோட்டக்காரன். பேரன் என்ன ஹைகோர்ட் ஜட்ஜா ஆயிட முடியுமா? ஏமாந்து போன ஏழைகள் எப்பவும் ஏழைகளாகவேதானே இருந்து சாவணும்! என் கையாலே அவனைப் பழி வாங்கணும்னு நினைச்சுக் கிட்டுத்தான் வேலைக்குப் போனேன் 'ஏண்டா அந்தக் கத்தியைத் தீட்டறேன்னு நீங்க அடிக்கடி கத்துவீங்களே - அவன் நெஞ்சிலே பாச்சத்தான் தீட்டிக்கிட்டிருந்தேன். முதல்லே சரியான விலாசம் கிடைக்கலை - கிடைச்சப்போ சட்டுனு சந்தர்ப்பம் கிடைக்கலை - சமயம் கிடைச்சப்போ எமன் என்னை முந்திக்கிட்டான். உங்களை அன்னிக்கு ஏமாத்திட்டுக் கைவிட்டுப் போனதற்குத் தண்டனை இப்போ கைமேலே கிடைச்சுடுத்து. கார் - பங்களா - மகள் - மனைவி - எல்லாத்தையும் விட்டுட்டு தோட்டத்து மண் மேலே தொப்புனு விழுந்து செத்துப் பூட்டான். உங்க புருஷன் போய்ச் சேர்ந்திட்டான் - இனிமேலே நீங்க மஞ்சள் குங்குமம் வச்சுக்கிட்டு பூமாலை போட்டுக்கிட்டு புறப்பட முடியாது... வெள்ளைப் புடவையும் விபூதியுமாத்தான் இந்த வீட்டை விட்டுக் காட்டுக்குக் கிளம்பணும் ஞாபகம் வச்சுக்கோங்க' பித்தம் பிடித்தவன் போல் ஆத்திரத்துடன் கத்தினான் ''அடப்பாவி! உனக்கு அப்படி ஒரு துர்புத்தி இருந்திச்சா பெத்தவனைக் கொல்ல மனம்கூட வந்துச்சாடா பாவிப்பயலே! என் மஞ்சள் குங்குமத்தை அழிக்க என் மகனே சதி பண்ணிக்



கிட்டிருந்தான்... நினைச்சாலும் நெஞ்சு வெடிக்குதே அறிவு கெட்ட பயலே! சாவு ஒரு தண்டனையாடா? உனக்கும் எனக்கும் கூடத்தான் ஒரு நாளைக்கு அது வரப்போவுது. அப்பகூட அது தண்டனைன்னு சொல்லிவியாடா? மடசாம்பிராணி! உன்னைப் பெத்த வயத்திலே...'' ஓவென்று கதறித் தலையில் அடித்துக் கொண்டு புலம்பி அழுதாள்.

''டேய்! குழாயடியிலே போய் உங்கப்பனுக்காகத் தலையை முழுகிட்டு உள்ளே வா பாவி மகனே...'' மார்பிலும் வாயிலும் அடித்துக் கொண்டு ஓலமிட்டபடி அவள் எழுந்து உள்ளே தலை முழுகப் போனாள்.

''அவனுக்கா நான் முழுகுவேன்? அவனுக்கும் எனக்கும் என்ன உறவு?'' ஆத்திரத்துடன் சீறிக் கொண்டு வெளியே வந்தான் ராஜாபாதர். நாயர் டீக்கடையில் ஒரு சிங்கிள் டீ வாங்கிக் குடித்தால்தான் ஆத்திரம் அடங்கும் போல் ஒரு வேகம் - விடுவிடுவென்று குப்பத்தைத் தாண்டிச் சாலைக்குள் புகுந்தான். திடீரென்று ஆகாயம் கறுத்தது. பளிச்சிட்டன மின்னல்கள். தொடர்ந்து பலத்த இடிகள்... நாயர் கடையை அவன் அணுகுமுன் 'சோ' வென்ற கோஷத்துடன் கொட்டிய மழையில் நனைந்து விட்டான். இயற்கை அவனை வற்புறுத்தி முழுக்காட்டி விட்டது.

# 7

**அ**வன் வீடு திரும்பியபோது அவள் விரித்த கூந்தலுடன் குடிசையின் மூலையில் ஒரு சிறு அகல் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அருகே சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள்.

அவனுக்குப் பேசத் துணிவு இருக்கவில்லை. விஷயம் அதற்குள் குப்பம் முழுவதும் பரவி விட்டதி னால் துக்கம் விசாரிப்பவர்கள் வந்து போய்க் கொண் டிருந்தனர்.

''மேல் தேசத்திலே தங்கிவிட்ட அவள் கணவன் திடீரென்று செத்துவிட்டதாகச் செய்தி வந்தது' என்று கதை.

துக்கம் கேட்க வந்தவர்கள்தான் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினர். சம்பகம் மௌனமாகக் கண்ணீர் வடித்தபடி மூலையில் உட்கார்ந் திருந்தாள். தினசரி இதே காட்சியைப் பார்த்துக் கொண் டிருக்க அவனுக்கு மனம் இல்லை. துலுக்காணமும் டாக்டர் ஏகாம்பரமும் தங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த போது அவனுக்கு ஒரே குழப்பம். விஷமென வெறுத்த தகப்பனின் மறைவுக்குத் துக்கப்படுகிறவன் போல் நடிக்க அவனால் இயலவில்லை. ஆனால் தாயின் நிலைமையை உத்தேசித்து வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அவன் நிலைமை மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது.

பதினைந்து நாட்கள் சென்றன. அதுவரை சம்பகம் மகனுடன் பேசவேயில்லை. அன்று காலை இருமிக் கொண்டு எழுந்து வந்தாள்.



''உங்கிட்ட ஒரு அம்பது ரூபா இருக்குமா?'' கேட்டாள் அவள். மோகன் இறந்த சில நாட்களுக்குப் பின்னர் அவன் அம்பத்தூர் தொழிற்சாலைக்குச் சென்று தனக்குத் தொடர்ந்து வேலை செய்ய விருப்பமில்லை என்று தெரிவித்துச் சம்பளக் கணக்கைத் தீர்த்துக் கொண்டு விட்டிருந்தான். அவன் பையில் அறுவது ரூபாய்க்குக் கூடுதலாகவே பணம் இருந்தது. பதில் பேசாது எடுத்துக் கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டான்.

அன்று நன்கு இருட்டிய பின்புதான் வீடு திரும்பினான். துலுக்காணத்தின் சீடர்களில் ஒருவன் வாயிலில் நின்று கொண்டிருந்தான். ''அண்ணே! எங்கே போயிட்டே? உங்கப்பாருக்கு மோட்ச விளக்கு ஏத்த அங்காளபரமேஸ்வரி கோயிலண்டை காத்துக்கிட்டு இருந்தோம். உங்கம்மாவுக்கு உடம்புக்குத் தள்ளலை. அதனால் சீக்கிரமா முடிச்சுட்டு வந்துட்டாங்க...'' கிசுகிசுத்தான்.

உள்ளே சென்றான் ராஜாபாதர். காய் விளக்கு எழுப்பிய ஒளியில் அவன் தன் தாயைக் கண்டு ஒரு கணம் பதறிப் போய்விட்டான். வெள்ளைப் புடவையும் விபூதி நெற்றியும் விரித்த கூந்தலுடன் அவள் சுவரின்மீது சாய்ந்து கொண்டிருந்தாள்.

நெஞ்சிலே சம்மட்டியால் அடித்தது போன்றதொரு அதிர்ச்சி. 'அம்மா! இந்த வெள்ளைச் சேலைக்காகவா எங்கிட்டே பணம் கேட்டீங்க?' இரைந்து அலறி அழவேண்டும் போன்ற துக்கம். சின்னப்பிள்ளையாக இருக்கையில், அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சி விளையாடுகையில் - அவள் முகத்து மஞ்சள் பூச்சின் மணம் - அதன் நினைவு நெஞ்சை நெருடவே, அவன் கண்கள் கலங்கி விட்டன.

"ஏம்மா! என்ன இந்தக் கோலம்..." முடிவில் பதட்டத்துடன் கேட்டான்.

"பூவும் மஞ்சளும் பொட்டுமாகப் போக எனக்குக் கொடுப்பினை இல்லையே..." விரக்தியாகப் பதிலளித்தாள் தாய். மகனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

மறுநாட் காலை அவள் எழுந்திருந்தபோது மிகவும் பலவீனமாக இருந்தாள். வாய் ஓயாமல் இருமித் தள்ளாடிக் கொண்டு வாயிலில் வந்து நின்றவளைக் கண்டு மகன் வாரிச் சுருட்டுக்கொண்டு எழுந்திருந்தான்.

என்னவோ சொல்ல நினைத்தாள் - இருமல் குறுக்கிட்டது. தொடர்ந்து குபுகுபுவென்று வாயிலும் மூக்கிலும் ரத்தம் வழிய மயக்கமாகச் சாய்ந்து விட்டாள்.

ஓடிச் சென்று மடியில் எடுத்துக் கிடத்திக் கொண்டான் அவன். மேல் துண்டினால் முகத்திலிருந்த ரத்தத்தைத் துடைத்தான். "அம்மா! அம்மா!" பரபரப்புடன் திகிலுடன் அழைத்தான்.

அவனுக்குப் பதிலளிக்க அவள் இந்த உலகில் இருக்கவில்லை.

சம்பகத்தின் கடைசிப் பயணத்தைக் காணக் குப்பமே திரண்டு விட்டிருந்தது. அவள் வாழ்க்கையில் ஏமாற்றத்தையும், வறுமையையும்தான் கண்டு விட்டிருந்தாள். அவள் விரும்பியது ஒன்றே ஒன்றுதான் - அது கூட அவளுக்குக் கிட்டவில்லை. 'மஞ்சளும் பூவுமாக என்னை அனுப்பி வச்சுடு ராஜா!' அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்த அவளது ஆசையின் ஆழத்தைச் சிந்தித்தவாறே வெள்ளைச் சல்லாத் துணியைச் சடலத்தின் மீது போட்ட மகன் தாங்க முடியாது கோவென்று அழுதுவிட்டான்.



அஞ்சாத சிங்கம் போன்றவன்தான். அவனையும் தாயின் அன்பு ஆட்டி வைத்துவிட்டது. துண்டால் வாயை அடைத்துக் கொண்டு கதறி அழுதான்.

யாரோ மெல்லத் தோளைத் தட்டுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். டாக்டர் ஏகாம்பரம் கூட்டத்தோடு கூட்டமாக அருகில் நின்று கொண்டிருந்தார். அவருக்குச் சற்றுத் தொலைவில் அவர் மனைவிகூட நின்று கொண்டிருந்தாள்.

அந்தஸ்தில் அவனைவிட உயர்ந்த அவர்கள்கூட அல்லவா சம்பகத்திற்கு இறுதி மரியாதை செய்ய வந்திருந்தனர்! அவர்களைக் காண அவனுக்கு மிக்க ஆறுதலாக இருந்தது.

"ராஜா உன் துணிவெல்லாம் எங்கோ போச்சு?" - ஆதரவுடன் கேட்ட டாக்டர் அவனது தோளை அணைத்துக் கொண்டார். துக்கத்திலே தவித்த அவனுக்கு அந்த வார்த்தைகள், அவரது அருகாமை எல்லாமே வேதனையைத் தணிக்கும் மருந்தாக இருந்தன.

மீண்டும் ஒட்டும் ஒட்டாத வாழ்க்கை. சம்பகம் இல்லாது வெறிச்சென்று விட்டிருந்த குடிசையிலே அதிக நேரம் தங்கியிருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. வேறு எங்கும் மறுபடி வேலை தேடிக்கொண்டு அலைய உற்சாகமில்லை. சுற்றிச் சுற்றி வந்து முடிவில் ஏகாம்பரத்திடமே வந்து சேர்ந்தான்.

"டாக்டர், உங்க கிட்டே ஏதாச்சும் வேலை செய்கிறேன். தோட்டத்தைக் கவனிச்சுக்கிறேன். செடிகளுக்குத் தண்ணி ஊத்தறேன். காரைக் கழுவித் துடைக்கிறேன். இன்னும் எந்த வேலையானாலும் செய்யறேன். என்னை வேறே எங்கேயும் வேலைக்கு

அனுப்பாதீங்க." ஒரு நாள் அவரிடம் வந்து மிகவும் கெஞ்சினான்.

"படிச்ச பையன் - என்னடா என் கழுத்தை அறுக்கிறே?" இரைந்து கொண்டே அவர் அவனைத் தம்மிடம் வேலைக்கமர்த்திக் கொண்டார். சம்பளம் வாங்க அவன் ஒப்பவில்லை. பதிலுக்கு அவனுக்கு அங்கே இரண்டு வேளைச் சாப்பாடு. எத்தனை வற்புறுத்தியும் அவன் அதை அங்கே சாப்பிடுவதில்லை. தன் அலுமினிய டிபன் பாக்சில் ஜானகி அம்மாள் போட்டுக் கொடுத்த மீதமிச்ச உணவை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் போய்த்தான் சாப்பிட்டான். அலுமினியத் தட்டிலே சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டு குழம்பை ஊற்றிக் கொண்டதும் - அவன் கண்கள் கலங்கி விடும் - எதிரே இருமிக் கொண்டு முணுமுணுக்க அவன் தாய் இல்லையே என்ற ஏக்கம் - உயிருடன் இருக்கையில் அவளது அருமை அவனுக்குப் புரியவில்லை. இல்லாதபோது அந்த வீட்டின் வெறுமை அவன் உள்ளத்தை உலுக்கியது.

அவனையே நம்பிக்கொண்டு வாழ்ந்தாள் சம்பகம். "அவங்களிடம் இன்னும் கொஞ்சம் அன்பு காட்டி ஆவலோடு பேசி சந்தோஷமாக வச்சிருக்காமல் போனேனே..." தன்னையே கடிந்து கொண்டு கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு சிந்தித்து மனவேதனையில் தனியாகத் தவித்தான் பல இரவுகள்.

அவனது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களைப் போல குப்பத்திலும், பல மாறுதல்கள். துலுக்காணம் முன்போல் உற்சாகமாகத் தமது தொழிலைத் துவங்கவில்லை. கொஞ்ச நாட்களில் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டுப் பெயரளவில் தலைவர் பதவியை மட்டும் வகித்துக் கொண்டிருந்தார். சிறையிலிருந்து



வந்ததிலிருந்து அவருக்குத் தாங்காத வயிற்றுவலி. பட்டைச்சாராயத்தைக் கையில் தொடுவதில்லை. அத்துடன் தமது வீடே கதி என்று கிடந்தார். ஆப்பக்கார அலமேலுவின் தொடர்பைத் துண்டித்துக்கொண்டு விட்டார்.

"அங்காள பரமேஸ்வரிக்குப் பூசை போட்டாங்க அவங்க மனைவி. ஆத்தாள், கண் தொறந்து பாத்துட்டாள்" என நம்பினர் குப்பத்து மக்கள் பலர்.

"துலுக்காணத்திற்கு வயதாகிக் கொண்டு வந்ததினால் ஏற்பட்ட தள்ளாமை. சிறை வாழ்வின் வேதனைத் தழும்பு. அடி நாளில் அதிகம் குடித்து வயிறும் - லிவரும் கெட்டுவிட்டன. அவர் மனமாறுதலுக்கு இவைகள்தான் காரணம்" என நம்பினார் டாக்டர் ஏகாம்பரம். துலுக்காணம் அவரிடம் தமது வயிற்று வலிக்குச் சிகிச்சை பெற்றுக் கொண்டு வந்தார்.

ஒரு நாள் மாலை - ராஜாபாதர் வீட்டிற்குத் திரும்பிய பொழுது ஆப்பக்கார அலமேலு வீட்டின் முன் பெரியதொரு கூட்டம். அவனைக் கண்டதும், அவள் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பியபடி ஓடி வந்தாள்.

"தம்பி! மோசம் செய்து விட்டாளே - சண்டாளி - வெள்ளிக்கிழமை தலை முளுவணும்னு என் மேலே போட்டிருந்த நகையெல்லாம் கழட்டிப் பெட்டியிலே வச்சிருந்தேன். கோயிலுக்குப் போயிட்டு திரும்பறதுக்குள்ளே பாவி மக பெட்டியையும் - வீட்டிலிருந்த பணத்தையும் சேலை - துணிமணியையும் - தூக்கிட்டு ஓடிப் பூட்டாளே..." முகத்தில் அறைந்து கொண்டு கத்தினாள்.

"சும்மா தனியா ஓடலை - எவனோடயோ ஓடிப்புட்டா வெட்கம் கெட்ட கழுதை" காறி உமிழ்ந்தார் கூட்டத்தில் ஒருத்தர்.

திகைத்துப்போய் நின்றான் ராஜாபாதர் - ஆனால் பூமாவிடம் அவன் எதிர்பார்த்ததுதான். நாள் முழுவதும் அண்டுவார் அடக்குவார் இன்றி அவள் குப்பத்திற் குள்ளும் வெளியிலும் பல இடங்களைச் சுற்றி வந்தாள். கண் வச்சிருந்தவன் தட்டிக்கொண்டு போய் விட்டான் - பிசகு யாருடையது?... தனக்குள் எண்ணியபடி அவன் மௌனமாக நின்றான்.

சில தினங்களுக்குப் பின்னர் இன்னொரு திடுக்கிடும் செய்தி. தோட்டத்துக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்த அவனிடம் ஏகாம்பரம் வந்து நின்றார். "சேதி தெரியுமா? அலமேலு வீட்டைப் போலீஸ் ரெய்ட் பண்ணிக் கள்ளச் சாராயம் - வெளிநாட்டுச் சரக்குகள் - புட்டிகள் - துணிமணிகள் பல விஷயங்கள் பிடிபட்டதாம். அத்தோட அவளையும் தள்ளிக்கொண்டு போய் விட்டாங்களாம்..."

அலமேலு குப்பத்திலே பலே வாயாடி - சண்டைக்காரி - கள்ளச்சாராயக் கடைக்காரி... பல குற்றங்கள் புரிந்தவள் - குறுக்கு வழியில் பணம் திரட்டத் துணிந்து புறப்பட்டவள் என்றாலும், இரக்கத்தில் மனம் கரைந்து போனான். ராணி போல் மிகவும் மிடுக்காக இருந்த அவளுக்கு இப்படி ஒரு சரிவா? "கிரைம் டஸ் நாட் பே... அப்படிங்கறது புரிகிறது இல்லையா!" பொதுவாகச் சொல்லிவிட்டு ஏகாம்பரம் நகர்ந்தார். அதைப்பற்றி அவன் தீவிரமாக அன்று முழுவதும் சிந்தித்துக் கொண்டிருந்தான்.



வாழ்த்து மடல்கள் வாங்கி வர ஒரு நாள் மாலை அவனை ஏகாம்பரம் அண்ணாசாலை புத்தகக் கடை ஒன்றிற்கு அனுப்பியிருந்தார். மெல்லச் சாலையில் நடந்தபடியே சென்றவன்... திகைப்புடன் திரும்பிப் பார்த்தபடி நின்று விட்டான். மோகன் விஸ்வரங்கத்தின் ஆபிஸிலிருந்து மஞ்சு வெளியே வந்து கொண்டிருந்தாள், பி.எ. பஞ்சநாதம் கூழைக் கும்பிடு போட்டபடி பின்னால் வருவதைக் கவனித்தான்.

'அப்படியானால் மஞ்சு இப்போது அப்பாவின் ஆட்சி பீடத்திலா அமர்ந்திருக்கிறாள்? ஆபீஸ் வேலைகளைக் கவனிக்கிறாளா? அத்தனை சொத்திற்கும் ஏக வாரிசு ஆயிற்றே? 'எண்ணிய மாத்திரம் அவன் நெஞ்சம் பொறாமையில் கொதித்தது. மீண்டும் அந்த மிருக வெறி - ஆத்திர உணர்வு - உள்ளத்தில் அலை மோதியது.

அவன் தாய் மட்டும் மிகவும் கெட்டிக்காரியாக இருந்திருந்தால்... தானே கட்டிக் கொண்ட அந்த மஞ்சள் கயிற்றை மோகன் கையில் கொடுத்து முறைப்படிக் கட்ட வைத்திருப்பாள். ராஜாபாதர் அண்ணா சாலையில் கொளுத்தும் வெய்யிலில் நின்று கொண்டு இருக்க மாட்டான்... ஏ.சி. அறையின் குளுமையில் காலைத் தூக்கி மேஜை மீது வைத்துக்கொண்டு சுழல் நாற்காலியில் ஜம்மென்று முதலாளி ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்பான். பொன்னான ஒரு சந்தர்ப்பத்தை புத்தியில்லாமல் புழுதியில் போட்டுவிட்டிருந்தாள் அவன் தாய்.

மனைவி என்ற அந்தஸ்து தர மறுத்தாலும் - மகனுக்காவது உதவி கேட்டுப் படிக்க வைத்து அவன் நிலையை உயர்த்தியிருக்கலாமே? அதற்கும் சாமர்த்தியமில்லை சம்பகத்துக்கு.

குப்பத்து ராஜாபாதரும் - பென்ஸ் காரில் ஏறி உட்கார்ந்து கொண்ட மஞ்சுவும் அண்ணன் தங்கை என்றால் யாராவது நம்புவார்களா?

வெவ்வேறு தாய்கள் என்றாலும் இருவருக்கும் ஒரே தந்தைதான். ஆனால் ஒரு வித்தியாசம். ராஜாபாதர் சமூகம் தடுத்து விட்டிருக்கும் வேலிக்கு அப்பால் பிறந்தவன். அவள் உள்ளே பிறந்துவிட்ட பெருமைக்குரியவள். அதனால் சொத்து சுகம் எல்லாவற்றையும் அனுபவிக்கும் உரிமையும் பெற்றவள். தாங்கொணா சினத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான். மீண்டும் கசப்பான எண்ணங்கள்.

மறுநாள் மாலை டாக்டர் வீட்டில் அதிக வேலை இருக்கவில்லை. குப்பத்துக் குடிசைக்குத் திரும்ப மனமின்றி ஊரைச் சுற்றக் கிளம்பிவிட்டிருந்தான். என்னென்னவோ எண்ணியபடி திருவான்மியூர் பக்கம் வந்து புதிதாக உருவாகிக் கொண்டிருந்த கட்டடங்களின் பக்கமாக நடந்து கொண்டிருந்தான். வெகு தொலைவில், தன்னந்தனியாக ஒரு பங்களா. ஒரு பக்கம் பாழடைந்த தொரு தோட்டம்; மறு பக்கத்தில் புதர் மண்டிக்கிடந்த பரவலானதொரு பூமி. 'இந்தக் கட்டடத்தை முன்பு வந்தபோது பார்த்ததில்லையே' வியப்புடன் வெறித்துக் கொண்டு நின்றான். அது சமயம் கார் ஒன்று வரும் ஓசை கேட்டது.

அந்தி மயங்கி இருள் பரவத் தொடங்கி விட்டிருந்தும் அவன் கண்டு கொண்டு விட்டான். நீல வண்ண பென்ஸ் காரை ஓட்டிக்கொண்டு மஞ்சு அந்த பங்களா அருகில் வந்து கொண்டிருந்தாள். ''இந்த வேளையில் யாருமில்லாத இடத்தில் இவளுக்கு என்ன வேலை?' தாங்க முடியாத வியப்பு அவனுக்கு. பெரியதாக



வளர்ந்து நின்ற அடுத்த தோட்டத்து வேப்பமரத்தின் பின்னால் சட்டென்று சென்று மறைந்து கொண்டு விட்டான்.

காரை விட்டு அவள் இறங்கினாள். கதவை மூடி விட்டுப் புதிய பங்களாவை நோக்கிப் போகத் திரும்பி னாள். பக்கத்துத் தோட்டத்துப் புதர் மறைவிலிருந்து வெளிப்பட்டான் ஒரு முரட்டு மனிதன். மெல்லச் சப்தமிடாது அவன் நடந்து வேப்ப மரத்தைத் தாண்டிக் கொண்டு கார் அருகே வந்தான். அவனைப் பார்த்துக் கொண்டு நின்ற ராஜாபாதரின் நெஞ்சு வேகமாகத் துடித்தது. என்னவோ நடக்கவிருக்கிறது என்றதொரு உள்ளுணர்வின் எச்சரிப்பில் வாய் உலர்ந்து போயிற்று. வைத்த கண் வாங்காது மூச்சு விடவும் பயந்தவனாகப் பார்த்துக் கொண்டேயிருந்தான். சுற்றிலும் லேசாகப் பரவிய இருள் கனமாகிக் கொண்டு வந்தது. வாட்ட சாட்டமாக முண்டா பனியனும் இடுப்பில் கைலியுமாகக் காணப்பட்ட அந்த மனிதனின் முகம் நன்கு தெரிய வில்லை. காரின் அருகில் வந்ததும் லேசாக மட்கார்ட் மீது தட்டிவிட்டு 'ஹொய்' என்று சீட்டியடித்தான் அவன். 'யாரது இடியட்?' மஞ்சுவின் குரல் சீறியது.

''என்னடி சொன்னே இடியட்டா? இந்த வேளைக்கு இங்கே உனக்கென்னடி வேலை? மச்சானைப் பார்க்க வந்தியா, இந்த மச்சானை முதலில் கவனி ஹி... ஹி'' கோரமான சிரிப்பு.

''ஷட் அப் ப்ளடி ஃபூல்!''

தொடர்ந்து கிரீச்சென்ற அலறல்... அவள் வாயை அந்த முரடன் இறுக்கி மூடிக் கொண்டிருக்கிறான் போன்று பின்னர் முனகல் சப்தம் கேட்டது. தரதரவென்று அவளை இழுத்துக் கொண்டு வேப்ப மரத்தைத் தாண்டி

பங்களா. இப்பத்தான் கட்டி முடிச்சாங்க... இங்கே நாங்க அடிக்கடி சந்திக்கிற வழக்கம் - எப்பவும் எனக்கு முன்னாடி வந்து காத்திருப்பார். இன்னிக்குக் காணோம்'' சொல்லிவிட்டு அவள் விக்கினாள்.

''திருட்டுத்தனமா, பெரியவங்களுக்குத் தெரியாமச் செய்யற காரியங்கள் எத்தனை அபாயகரமானது பாத்தியா?...'' கேட்டுக் கொண்டே முன்னே நடந்தான்.

பங்களாவின் வாயிலை அடைந்து வராந்தாவின் விளக்கைப் பொருத்தினான். அவனைப் பார்த்துத் திடுக்குற்று நின்று விட்டாள் - ''நீங்களா? ஆச்சர்யமாக இருக்கு. தெய்வம் போல எனக்கு ஆபத்துகள் வரபோதெல்லாம் வந்து உதவுகிறீங்களே... முந்திகூட அந்தக் கோவில் அருகே நடந்த கலாட்டாவின் போது உதவினீங்க. அதைவிட இன்னிக்கு நீங்க செஞ்ச உதவியை நான் உசிர் இருக்கும் வரை மறக்கமாட்டேன்.'' உணர்ச்சிவசத்தில் அவள் அவனது கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். சூடாக அவன் உள்ளங்கைமீது வடிந்த கண்ணீரில் அவன் திகைப்புற்று மேனி சிலிர்த்துப் போனான்.

''தங்கச்சி!'' அவனைமறியாது அப்படி அழைத்தான்.

''இது உங்க வீட்டுச் சாவிக்கொத்துன்னு நினைக்கிறேன். அந்த இடத்திலே கீழே கிடந்திச்சு - கதவைத் திறந்து முகத்தைக் கழுவிச் சீக்கிரம் சீர்படுத்திக்கோ. ஒரு சமயம் அந்தத் தடியன் ஆள் சேத்துக்கிட்டு மறுபடியும் வந்துடப் போறான்'' - அவசரமாகக் கதவைத் திறந்து உள்ளே விளக்கு ஸ்விட்சுகளை அழுத்தினான். பளிச்சென்று எங்கும் வெளிச்சம். வாஷ்பேசினருகே ஓடிக் குழாயைத் திறந்து பரபரப்புடன் முகத்தைக் கழுவிக் கொண்டு - புடவையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.



பின்னர் அவனும் உள்ளே வந்து தன் முகத்தைக் கழுவிக் கொண்டு கரைபட்ட ஜிப்பாவின் கைகளை நீரில் கழுவிக் கொண்டான்.

காரில் ஏறி உட்கார்ந்தாள் - அவளால் அந்தப் பதற்ற நிலையில் காரை ஓட்ட முடியாது உடல் முழுவதும் இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தது.

''உங்களுக்கு கார் ஓட்டத் தெரியுமில்லையா? என்னால் முடியாது போலிருக்கே...''

டிரைவர் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்தான். ''கார் ஓட்டத் தெரியும். ஆனால் இது மாதிரி கார்களை ஓட்டிப் பழக்கம் இல்லை. உண்மையைச் சொன்னால் லைசென்ஸ் கூடக் கிடையாது. முயற்சிக்கிறேன்.'' சாவியைத் திருப்பி - காரைக் கிளப்பினான். பச்சைக் குழந்தைபோல் அது அவன் சொன்னபடி கேட்டது.

விரைவாக அவளது பங்களாவின் போர்டிகோவில் கொண்டுவந்து நிறுத்தினான். பாய்ந்து கொண்டு வந்த நாய்களை அடக்கி எடுத்துப் போகும்படி வேலையாட்களுக்குக் கட்டளையிட்டாள் அவள். பின்னர் இறங்கினாள். ''நீங்களும் உள்ளே வாங்க - ஏதாச்சும் சாப்பிட்டு விட்டுப் போகலாம்...''

''ஒண்ணும் வேணாம்... எனக்கு அவசர வேலை ஒண்ணு வீட்டில் இருக்கு. அதனாலே...''

''சித்த ஒரு நிமிஷம் இருங்க - புடவையை மாத்திக்கிட்டு வந்திடறேன்'' உள்ளே ஓடினாள் அவள். வெளியே வருமுன் ராஜாபாதர் வேகமாகக் கேட்டைத் தாண்டி வந்து சாலையில் நகர்ந்து கொண்டிருந்த ஒரு ஆட்டோவைத் கை தட்டி நிறுத்தி ஏறிக்கொண்டு விட்டான்.

## 8

**வெ**ளியே போயிருந்த டாக்டர் ஏகாம்பரம் காரை ஓட்டிக்கொண்டு வந்தார்; ஓடிச் சென்று கேட்டைத் திறந்து விட்டான் ராஜாபாதர். இப்பொழுது அந்தத் தோட்டம் வெகுவாக மாறிவிட்டிருந்தது. வெள்ளை - ஊதா - ஆரஞ்சு போகன் வில்லாக்கள் காம்பௌண்ட் சுவருக்குமேல் சீராகக் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. முன் பக்கத்திலே ஒரு பாத்தி முழுவதிலும் ஒட்டு ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. ஜன்னல் ஓரத்தில் டாக்டர் படுக்கையறையிலே மெல்லிய மணத்தைப் பரப்பியது நைட்குவின். பின் பக்கத்தில் வாழையும் சப்போட்டாவும் தென்னையும் கவனிப் பாரற்றுக் கிடந்தவை இப்போது செழித்து வளர்ந்து கொண்டு வந்தன. அத்துடன் வீட்டுக்குத் தேவையான சிறு காய்கறித் தோட்டமும் சிறு அளவில் பயிராக்கி விட்டிருந்தான் அவன். நாள் முழுவதும் குழந்தைகளைக் கவனிப்பது போல் ஒவ்வொரு இலையையும் தொட்டு - உற்றுப்பார்த்து உரம் போட்டுத் தண்ணீர் விட்டு உற்சாகத்துடன் கவனித்ததன் பயன் தோட்டம் கிளுகிளுவென்றிருந்தது. டாக்டர் தம்பதிகளுக்கு அவன் மீது மிக்க மதிப்பு.

வண்டியினின்று இறங்கிய ஏகாம்பரம் கையிலிருந்த பிளாஸ்டிக் பையை அவனிடம் கொடுத்தார்.

''இதை நான் உள்ளே எடுத்துப் போவதில் பயன் இல்லை. அம்மா ரொம்ப ஆசாரம்... நீ சாப்பிடு.''

பைக்குள் லட்டுகள் - அதிரசம் - பொரி உருண்டை முதலியன இருந்தன.



''தாங்யூ ஸார்!'' கொஞ்சம் பிட்டு வாய்க்குள் போட்டுக் கொண்டான். சுத்தமான நெய்யில் செய்த லட்டு சுவையாகத் தானிருந்தது.

''இன்னிக்குச் செத்தா நாளைக்கு இரண்டாம் நாள்னு செத்தவர்களுக்கு நாட்கள் ஓடுகிறது எத்தனை நிசம் பாத்தியா? மோகன் விஸ்வரங்கம் இறந்து ஒரு வருஷம் ஆயிடுத்து. இன்னிக்கு வருஷத்திவசம். எனக்கு இதிலெல்லாம் வித்தியாசம் கிடையாது. அந்தம்மா போனில் கூப்பிட்டு அழுதாள் பாவம். போய்க் கலந்து கொண்டேன். வீட்டிலே கொடுங்கோன்னு இந்தப் பட்சணங்களைக் கட்டிக் கொடுத்தா அந்தம்மா. நீ சாப்பிடு...'' பரிவுடன் சொன்னார்.

உள்ளே போகத் திரும்பியவர் யோசனையுடன் நின்றார்.

''ஆமாம்! உங்கம்மா இறந்துகூட ஒரு வருஷம் ஆகப் போகிறதே'' கையிலிருந்த லட்டு உருண்டையைப் பார்த்தபடி அவன் தலையை ஆட்டினான். நெஞ்சிலே துயரம் ஒரு பெரும் உருண்டையாகத் திரண்டு எழுந்தது - அவன் தாயின் நினைவுக்கு - அவன் என்ன செய்யப் போகிறான்?

''உங்கம்மாவுக்குத் திவசம் பண்ணக் காசில்லை யேன்னு தானே யோசிக்கிறே? வீட்டுக்கு வெள்ளை யடிச்சதுக்குக் கூலியாக முப்பது ரூபாய் எடுத்து உனக்கு வச்சிருக்கேன். எடுத்துண்டு போய் ஏதோ உன்னால் ஆனபடி செய். பணக்காரன் என்றாலும் சரி ஏழையானாலும் சரி, சாவுக்குப் பின் எல்லோரும் சமம். புரிஞ்சுக்கோ? திவசம் திங்கள் இதெல்லாம் அவரவர் களின் நம்பிக்கை. என்னைக் கேட்டால் பிள்ளைகள் நல்லவர்களாக வாழ்ந்து காட்டுவதே இறந்த பெற்றோர் களுக்குச் செய்யக்கூடிய பெரிய திவசம்.''

கண்களில் துளிர்த்த நீரைச் சமாளித்துக் கொண்டு 'புரிந்தது' என்ற பாவனையில் தலையை ஆட்டினான் அவன்.

டாக்டர் ஏகாம்பரத்திற்கு அவன்மேல் ஏன் இந்த ஈர்ப்பு? அவனுக்குத்தான் அவரிடம் ஏன் இந்த விஸ்வாசம்? வாழ்க்கையில் அவனுக்குப் புரியாத விஷயங்கள் பல இருந்தன. அதில் இதுவும் ஒரு புதிர்.

ஜானகி அம்மாளுக்குப் பஞ்சாங்கம் பார்க்கத் தெரியும். அன்று மாலை அவளிடம் விசாரித்தான்.

''சதுர்த்தசி - திதி. எனக்கு ஞாபகம் இருக்கே'' பஞ்சாங்கத்தைப் புரட்டினாள். நாளைக்காலை ஸ்நானம் பண்ணிட்டு, உங்க வழக்கப்படி உன் தாயாருக்குத் திவசம் பண்ணிடு. பாவம் சம்பகம் ரொம்ப நல்லவள். மறக்காதே...'' உபதேசித்து அனுப்பினாள்.

மறுநாள் காலை அவன் எழுந்து தலைமுழுகிச் சுத்தமாக உடுத்திக் கொண்டான். அலுமினிய டிபன் செட்டைத் தூக்கிக்கொண்டு அருகிலிருந்த ஹோட்டலுக்குச் சென்றான். வெள்ளிக்கிழமைகளில் அந்த ஐயர் ஹோட்டலில் சாப்பாடு பிரமாதமாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

வரும் வழியில் சாலையருகே ஓரத்திலிருந்த ஒரு குப்பைத் தொட்டியைக் கிளறி எச்சில் இலைமேல் கிடந்த சோற்றுப் பருக்கையைத் திரட்டிக் கொண்டிருந்தாள் ஒரு சிறுமி.

''இந்தா!'' அதட்டினான். திகைப்புடன் அவள் திரும்பிப் பார்த்தாள். எண்ணெய் காணாத பரட்டைத் தலை - அழுக்கிலே மூழ்கிவிட்ட பாவாடை கிழிந்து நாராகத் தொங்கிய அழுக்குச் சட்டை. பத்து வயதில் தரித்திரத்தின் உருவம்.



''அதை அப்படியே போடு என்னோட வா. நல்ல சோறு போடறேன்.'' அழைத்தான் அவளை. எச்சில் இலையை விட்டெறிந்துவிட்டு அவன் பின்னால் ஆவலுடன் ஓடி வந்தாள். ''மெய்யாலுமே போடுவியா? ஏமாத்த மாட்டியே?...'' ஆட்டுக்குட்டிபோல் பின்னால் குதித்து நடந்து வந்தாள்.

ஒரு சிறு சோப்புத் துண்டை அவள் கையில் கொடுத்துக் குவளையில் தண்ணீரை மொண்டு ஊற்றினான். ''நல்லா தேச்சு, மூஞ்சு, கை, கால்களைக் கழுவிக்க... அப்பப்பா... என்ன அழுக்கு...?''

தாயார் வழக்கமாக உட்காரும் இடத்திற்கு எதிரே கையோடு கொண்டு வந்த ஊதுவத்தியைப் புகைய விட்டான். அந்தப் பிச்சைக்காரச் சிறுமியை உட்காரச் சொல்லி இலையை விரித்துப் போட்டு டிபன் செட்டைத் திறந்தான். ''மெய்யாலும் இதெல்லாம் எனக்கா?...'' அவள் கண்கள் வியப்பில் விரிந்தன.

சோற்றை அள்ளிப் போட்டு, குழம்பை ஊற்றி, நெய்வார்த்து, அப்பளத்தை வைத்து, ''சாப்பிடு... எல்லாம் உனக்குத்தான்'' உபசரித்தான். சோற்றைக் கலந்து உருட்டிக் கொண்டு வாயிலே திணித்து சுவைத்து விழுங்கினாள் அவள். நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு - அலுமினிய டம்ளரிலிருந்து ஒரு மடக்குத் தண்ணீரைக் குடித்தாள். அவள் வாயைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் முன் - அந்தச் சிறுமி திடீரென்று உயர்ந்து வளர்ந்து - கிழவியாகி - மஞ்சள் படர்ந்த முகத்திலே குங்குமப் பொட்டுடன் தாய் சம்பகமாக மாறிவிட்டது போன்ற ஒரு பிரமை - ஒரு கற்பனை. அதிலெழுந்த அதிர்ச்சியால் உடல் புல்லரிக்க, கண்கள் கலங்க, அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"போதும் இனிமே வவுத்திலே இடமில்லை... ஆமாம் நீ ஏன் சாப்பிடலே?" பரிவுடன் கேட்டாள் அவள்.

"சாப்பிடறேன், இனிமே நீ குப்பைத் தொட்டியிலே கிடக்கிற எச்சில் இலையையெல்லாம் தொடக்கூடாது தெரியுமா - அது ரொம்ப அசிங்கம். வியாதி வரும்... சொன்னபடி கேட்பியா...?

தலையை ஆட்டிக்கொண்டு எழுந்து அவள் கையைக் கழுவிக் கொண்டாள்.

"இந்தா. இந்தப் பையிலே பலகாரம் நிறைய இருக்கு. வூட்டிலே உன் தம்பி தங்கைக்கு கொண்டு கொடு" மோகன் விஸ்வரங்கத்தின் திவசத்துப் பலகாரம் நிறைந்த அந்த பிளாஸ்டிக் பையை அவள் கையில் கொடுத்தான். சிட்டுக் குருவியாகப் பறந்துவிட்டாள் அந்தச் சிறுமி. அடித்தட்டிலிருந்த மோரை மட்டும் குடித்துவிட்டு டிபன் செட்டை அடுக்கி வைத்தான். எச்சில் இலையைக் கொண்டு குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுக் கையைக் கழுவிக் கொண்டான். கயிற்றுக் கட்டிலின்மீது குப்புறப் படுத்துக் கொண்டான். பச்சைப் பிள்ளைபோல் அவனுக்கு அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது.

அவன் ஒரு முறைகூடச் சிந்தித்துப் பார்த்ததில்லை. அவன் தாய் மீது அவனுக்கு இத்தனை ஆழமான அன்பா? அவளது இழப்பை எண்ணிப் பல மாதங்களுக்குப் பின்னர் இத்தனை துயரமா? சம்பகம் ஏழை, என்றாலும் தெருவில் போகும் பிச்சைக்காரக் குழந்தைகளைக் கண்டால் மனம் கரைந்து போவாள். கையிலிருக்கும் தேங்காயோ, பழமோ எதுவானாலும் அதை அவர்களுக்குக் கொடுத்து விடுவாள். வயிற்றின் பசி எத்தனை கொடுமையானது என்பதைப் பூர்ணமாகப் புரிந்து கொண்டவள். அவள் மறைந்த நாள் இன்று. வயிறு நிறைய ஒரு ஏழைச் சிறுமிக்குச் சோறு போட்டதை அவள் ஆன்மா ஏற்று, அமைதி அடைந்து விடும்" அவன் அப்படி நம்பினான்.



சில நாட்களுக்குப் பின்னர் ஜானகி அம்மாளுக்காகப் பழங்கள் வாங்கி வரக் கூடையுடன் நேதாஜி சாலைப் பழக் கடைக்கு வந்திருந்தான். பொறுக்கி எடுத்த சாத்துக்குடிக்கு விலை பேசிக் கூடையில் நிரப்பிக்கொண்டான். பணத்தைக் கொடுத்து விட்டுக் கூடையுடன் அவன் வெளியேற முற்பட்டபோது, குறுக்கே ஒரு கார், அதை ஓட்டிய டிரைவர் அந்தச் சிறிய இடத்தில் வளைந்து வெளியே செல்ல முன்னும் பின்னுமாக நகர்த்தி சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். பின் ஆசனத்திலிருந்த அவள், "தம்பி!" என்று இரைந்து கூப்பிட்டாள்.

திடுக்கிட்டுக் கூடையைச் சுமந்தபடி வேகமாக கார் அருகே வந்தான். அவனுக்காகக் காரை டிரைவர் ஒருபுறம் சற்று நிறுத்தினான்.

ஒரு வருஷத்திற்கு முன்பு அந்தப் பெரிய பங்களாவில் கழுத்திலும், காதுகளிலும் வைரங்கள் ஜொலிக்க, மஞ்சளும் குங்குமமும் முகத்தில் மின்ன, மகாலட்சுமி போலிருந்த அந்த அம்மாள் இப்போது வெள்ளைச் சேலையும் விபூதி அணிந்த நெற்றியுமாகக் காணப்பட்டாள். மெய் பதறிப் போனான் அவன். "தம்பி! உன்னைத்தான் பல முறை நினைச்சுக் கொண்டேன். நீயும் கம்பெனி வேலையிலிருந்து விலகிப் போயிவிட்டேன்னு கேள்விப்பட்டேன். என் துக்கம், கவலை இதுகளில் குழம்பிக்கிட்டிருந்த எனக்கு யோசனை இல்லை. போனவாரம் அவருக்குத் திவசம் கொடுத்தோம். தொழிற் சாலையிலிருந்து எல்லாரும் வந்து சாப்பிட்டாங்க.

உன்னையும் கூப்பிட்டிருக்க வேண்டும் - தவறிப் போச்சு.''

''பரவாயில்லை, அதனால் என்னம்மா?''

''இல்லேப்பா. உன்னைக் கூப்பிடாதது தப்புன்னு ராத்திரி பூராவும் என் மனசிலே உளைச்சல். எங்க எல்லாரையும் விட நீதான் அவருக்கு உதவி செய்திருக்கே... நானோ மஞ்சுவோ அந்தப் பாக்யத்துக்குக் கொடுத்து வைக்கலை. மார்வலி வந்து மயக்கமா விழப்போறச்சே அவரை அப்படியே தாங்கி உன்மடியிலே வச்சிக்கிட்டிருந்தாயாம். கேள்விப்பட்டேன். போன ஜன்மத்திலே நீ அவர் மகனாக இருந்திருக்கணும் - இல்லாட்டி இத்தனை பேர் நாங்க இருக்கையில் உன் மடியிலேதானே அவர் உயிர் பிரிஞ்சுது?'' பேசி முடிப்பதற்குள் அவள் குரல் தழுதழுத்தது... கண்கள் பனித்தன.

இத்தனை அன்பாகப் பேசுகிற ஒரு தாயின் குங்குமத்தைப் பறிக்க அவன் எவ்வளவு பயங்கரமானதொரு திட்டம் தீட்டியிருந்தான்? அவனைப் பெற்றவள் செய்த ஒரு துளிப் புண்ணியம் அந்தப் பயங்கரக் குற்றத்திலிருந்து அவனைக் காப்பாற்றிவிட்டது - எமன் பழி ஏற்றுக் கொண்டுவிட்டான். உள்ளூர வேதனைப்பட்டான். தன் செய்கைக்கு வெட்கப்பட்டான்.

''வருத்தப்படாதீங்க அம்மா...'' குமுறினான்.

''திருத்தணி முருகன் எங்கள் குல தெய்வம். அவர்தான் உன் உருவில் வந்து எங்களுக்கு வந்த சங்கடங்களைத் தீர்த்தாரோன்னு ஒரு நினைப்பு எனக்கு.''

''என்னாங்க என்னைப்போய் சாமியாக்கிட்டீங்களே - நான் சாதாரணத் தொழிலாளி, குப்பத்திலே வசிக்கிறவன்...''



''இல்லேப்பா. கடவுள் எந்த ரூபத்திலும் வருவார்னு பெரியவங்க சொல்வாங்க. நான் நம்பறேன். மூணு தடவை எங்களைச் சங்கடத்திலிருந்து காப்பாத்தின நீ சாதாரண மனிதன் இல்லே... நிச்சயம் அந்த முருகன் அருள் உன்கிட்ட இருக்கு... பிள்ளையார் கோவில் அருகே அந்தக் காவாலிகள் கலாட்டா செய்தப்போ எங்கிருந்தோ கடவுளாட்டமா நீ வந்து உபகாரம் பண்ணினே. இத்தனை சொத்திருந்தும் - சுகமிருந்தும் கட்டாந்தரையிலே தடார்னு விழுந்து உசிரை விடாதபடி என் புருஷனை நீ தாங்கி உன் மடியிலே வச்சு அவர் மரண அவஸ்தைக்கு ஆறுதல் கொடுத்தே... எல்லாத்தையும் விட...'' சொல்லும் போதே முத்துக்களாகக் கண்ணீர் அவள் கன்னங்களில் உருள அதைக் கண்டு அவன் கலங்கிப் போனான்.

''என்னோட பெண் மானத்தைக் காப்பாத்தின மகராஜன் நீ - அதை மறக்க முடியாது - '' திடீரென்று அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''என்னம்மா?'' நடுங்கி மெய் பதறி - குழறி உள்ளம் நெகிழ்ந்து நின்றான்.

''இதெல்லாம் அந்தக் குழந்தை வந்து சொல்லிச்சா?''

''சொல்லாமலிருக்குமா? - இது என்ன சின்ன விஷயமா மூடி மறைக்க? உள்ளேயிருந்து நான் ஓடி வரத்துக்குள்ளே நீ மறைஞ்சு போயிட்டே. ரெண்டு நாளைக்கு முன்தான் எனக்கு நினைப்பு வந்தது. டாக்டர் ஏகாம்பரத்துக்கு போன் பண்ணி நானே கேட்டேன். அவர்கிட்டே தான் வேலை செய்கிறயாம். தம்பி! உன்னைப் பெத்த தாயைப் போல சொல்றேன்... கேட்டுக்கோ. உன்னைப் போல ஒரு நல்ல உண்மையான

ஆள் எங்களுக்கு இப்ப ரொம்பத் தேவை. மஞ்சு கிட்ட சொல்றேன். சந்தோஷமா உன்னை அண்ணாசாலை ஆபிசிலே வேலைக்கு எடுத்துக்கும். அதனாலே நீ ஒரு வாட்டி அங்கே போய் மஞ்சுவைப் பார்... அட சொல்ல மறந்துட்டேன். உன் விலாசத்தைக் கொடு. உனக்கு அழைப்பு அனுப்பணும்.''

''ராஜாபாதர் சௌந்தரிய குப்பம் என்றாலே வந்து சேர்ந்திடும். டாக்டர் முகவரிக்கு அனுப்பினாலும் அவர் கொடுத்துடுவார்.''

கைப் பையைத் திறந்து அவள் ஒரு டைரியை எடுத்து விலாசத்தை எழுதிக் கொண்டாள்.

''தம்பி! நீ கட்டாயம் மஞ்சு கல்யாணத்துக்கு வரணும். மறக்காதே. நீ வராட்டா என் மனசு சங்கடப் படும்.'' கூறிக் கொண்டே தன் பக்கத்திலிருந்த கூடைக்குள் கை விட்டு இரண்டு ஆப்பிள்களை எடுத்தாள்.

''இந்தா சாப்பிடு. உன் அம்மா கொடுத்ததா நினைச்சுக்கோ - உன் தாயார் கூடத் தவறிப்போய் விட்டாங்களாமே! கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தப்படறேன்'' பெருமூச்சு விட்டாள்.

கூடையைக் கீழே வைத்துவிட்டு இரண்டு கைகளையும் நீட்டிப் பெற்றுக் கொண்டான். 'உண்மை யில் மஞ்சுவின் தாயார் கருணை மிக்க, அன்பு உள்ளங்கொண்ட ஒரு நல்ல பெண்மணி - அவர்களுக்குத் தீங்கிழைக்கப் பார்த்தது எத்தனை பெரிய பாதகம்? அதுக்கு ஏதாவது ஈடு செய்ய முடிந்தால்...' மனம் கரைந்தபடி அவன் அயர்ந்துபோய் வெகுநேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.



# 9

சில நாட்களுக்குப் பின்னர் அந்த நீலவண்ண பென்ஸ் டாக்டர் ஏகாம்பரத்தின் வீட்டிற்கு வந்தது. அப்பொழுது அவன் ஹோஸ் பைப்பினால் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அவள் உள்ளே நுழைவதைக் கண்டு சற்றுப் பின்வாங்கி மறைவாக நிற்க முயற்சித்தான். ஆனால் அவளது துருதுருத்த கண்கள் கண்டு விட்டன. ''ஹாய் நீங்க இங்கேதான் இருக்கிறீங்களா? நல்லதாப் போச்சு. இப்போ நான் சௌந்தரிய குப்பத்துக்கு உங்க வீட்டைத் தேடிக்கிட்டுப்போக இருந்தேன். ''அவள் கையில் கட்டு அழைப்பிதழ்கள். ''எனக்கு இந்த ஞாயிற்றுக்கிழமை கல்யாணம். வேண்டியவர்களை நேரில் அழைக்க நானே வந்திருக்கிறேன். என் லிஸ்டில் ஏகாம்பரமும் நீங்களும் இருக்கிறீங்க.'' கன்னங்குழிய அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவன் நெஞ்சை நிறைத்தது. கையில் பிடித்திருந்த அழைப்பிதழ் கட்டைத் துழாவி அவனுடைய பெயர் எழுதியிருந்த உறையை எடுத்தாள்.

''பார்த்தீங்களா! உங்களை நான் நேரிலேயே கல்யாணத்துக்கு அழைக்க வந்திருக்கிறேன். மறுப்புச் சொல்லாமே வரணும்.''

''தாங்யூ!'' பெற்றுக் கொண்டான். கன்னமும் முகமும் சிவக்க, நெஞ்சு நெகிழ அவளை மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.

சீமானின் செல்வக் குமாரி என்று துளிக் கூடக் கர்வம் இல்லாது எத்தனை எளிமையான சுபாவம்?

''ரொம்ப உசந்த இடத்துக் கல்யாணம் - என் போலவங்களுக்கு லாயக்கில்லாத இடம்...'' இழுத்தான்.

"உசந்த இடம், தாழ்ந்த இடம்னு பணத்தால் மனிதர்களை அளவிட முடியுமா? வசதியான எங்க வட்டாரத்திலே எத்தனையோ வஞ்சகர்கள், திருடர்கள், அயோக்கியர்கள் இருக்கிறாங்க. பற்றாக்குறையால் வாழ்கிற உங்க வட்டாரத்திலே எத்தனையோ நல்லவங்க, கருணையுடையவங்க - நன்றியுள்ளவங்க இருக்கிறாங்கங்கிறது எனக்குத் தெரியும்.'' உணர்ச்சி வசத்தில் படபடவென்று பேசினாள்.

"நீ ரொம்ப அறிவான பொண்ணும்மா - உன்னைக் கட்டிக்கப் போறவர் கொடுத்து வச்சவர் - நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்.''

"இந்த வாழ்த்துக்களை நீங்க பந்தலிலே வந்து என்னிடம் சொல்லணும். அப்பத்தான் ஏத்துப்பேன்...'' கூறிவிட்டுச் சிரித்துக்கொண்டு அவள் உள்ளே ஓடினாள்.

தென்றல் ஜில்லென்று முகத்திலே வீசி விட்டுப் போவது போன்ற இன்பம்... மகிழ்ச்சி அவனுக்கு.

கன்னிகா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் மஞ்சுவின் திருமணம் விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. காலை முகூர்த்தத்திற்குப் போக அவனுக்குத் துணிவிருக்கவில்லை. பெரிய மனிதர்கள் வீட்டுக்கல்யாணத்தின் போது சில ஓசிகள் - அனாமதேயப் பேர்வழிகள் சாப்பாட்டிற்காக மெல்ல உள்ளே நுழைந்து விடுவது வழக்கம். வருபவர்களைப் பார்த்து வடிகட்டி உள்ளே அனுப்ப விழிப்புள்ள இரண்டு ஆசாமிகளை வாசலில் நிற்க வைத்திருப்பதுண்டு. இதெல்லாம் அவனுக்குத் தெரியும். "நீ யாரப்பா? பெண் வீட்டைச் சேர்ந்தவனா - மாப்பிள்ளைக்கு வேண்டியவனா?'' என்று கேட்டால், அவன் என்ன உறவு சொல்லிக் கொள்ள முடியும்? தொழிற்சாலையைச் சேர்ந்தவன் என்று கூடச்



சொந்தம் பாராட்டிக் கொள்ள முடியாதபடி - தொடர்பைத் துண்டித்துக் கொண்டிருந்தானே. பலவிதக் குழப்பத்தில் அவன் முகூர்த்தத்தைத் தவறவிட்டு விட்டான்.

அன்று மாலைதான் அவனுக்கு நினைவிற்கு வந்தது. கையோடு அந்த அழைப்பை எடுத்துக்கொண்டு போனால்? எக்கச்சக்கமாகக் கேள்வி கேட்கிறவன் வாயை அடைக்க உதவுமே! பாவம் மஞ்சு! முகூர்த்தத்திற்கு அவனை எதிர்பார்த்து ஏமாந்து விட்டிருப்பாள். மனம் கரைந்து போனான்.

யோசித்து அவன் முடிவெடுப்பதற்குள் மாலைப் பொழுது சாயத் தொடங்கி விட்டது. ஆறு மணியிலிருந்து எட்டுமணிவரை ரிசப்ஷன். கச்சேரி, பின்னர் விருந்து - அழைப்பிதழில் அச்சடிக்கப் பட்டிருந்தது. அவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டு விசேஷங்களுக்கு என்று பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த மல்ஜிப் பாவையும் வேட்டியையும் எடுத்து அணிந்து கொண்டான். அப்படியே அந்த அழைப்பிதழையும் திணித்துக் கொண்டான், அவனையுமறியாது ஏற்பட்ட பழக்கம். அந்தக் காஷ்மீர் கத்தியை எடுத்து இடதுபக்கமாக இடுப்பில் வேட்டி மடிப்புக்குள் செருகிக் கொண்டான். இருட்டுமுன் போக வேண்டுமென்ற ஆவல். பணத்தைப் பாராட்டாமல் ஆட்டோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு கிளம்பினான்.

வாயிலில் இடையூறு ஏதும் இருக்கவில்லை. கூட்டத்தோடு கூட்டமாக உள்ளே நுழைந்து விட்டான். 'அப்பாடா' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாலும் கண்களைச் சுழற்றியபடி நின்றான். குழல் விளக்குகளில் பட்டப் பகல் போன்றிருந்த மண்டபத்தில் குவிந்து விட்டிருந்த அந்த கூட்டத்தைப் பார்த்து அவனுக்கு ஒரே மலைப்பு. ஒரு கணம் அரண்டு கூடப் போய்விட்டான்.

மேடை மீது அமர்ந்து கொண்டு அந்த சங்கீத சகோதரிகள் இன்னிசை பொழிந்து கொண்டிருந்தனர். ஆண்கள் பகுதியில் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாருமே இருந்ததாகப் புலப்படவில்லை. அருகில் சென்று ஒரு நாற்காலியில் உட்காரலாம் என்றாலோ அந்தப் பெரிய புள்ளிகளைக் கண்டு அவனுக்கு அச்சமாக இருந்தது. பெண்கள் பகுதிப் பக்கம் பார்த்தால் அவனுக்கு மூச்சே திணறும் போன்ற திகைப்பு. பட்டுப் புடவைகளின் சரிகைக் கரைகள் மின்ன - வைரங்கள் டாலடிக்க - கூந்தலில் சூட்டிய மல்லிகை மணக்க - பற்கள் பளிச்சிட சிரிப்பும் பேச்சுமாக அவன் காணாத ஒரு கும்பல் அங்கு.

நெஞ்சுலர்ந்து போய் சுற்றும் முற்றும் பார்த்தபடி தண்ணீரை விட்டுத் தரைக்கு வந்த மீனாய்த் தவித்துத் கொண்டு நின்றான். மேடையில் ஒரு பக்கம் சோபாக்களில் அமர்ந்திருந்த மணமக்கள் இருவரும் எழுந்து இறங்கி வருவதைக் கவனித்தான்.

கழுத்தை நிறைத்த மாலை - முகத்தை நிறைத்த மகிழ்ச்சி. உடம்பை நிறைத்த ஊதா வண்ணத் தகடிச் சேலை என்ற கோலத்தில் நெடிய உயரமாக நின்ற அவள் எல்லோரையும் தாண்டிக் கொண்டு வேகமாக அவன் அருகே வந்தாள். உண்மையில் மணக் கோலத்தில் மஞ்சு மிகவும் அழகாகவே இருந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த மணமகனும் அவளுக்குப் பொருத்தமான வனாகவேதான் இருந்தான்.

''அண்ணா!'' தேனான குரலில் அழைத்தாள். ''இவர்தான் என் கணவர். அந்தச் சம்பவத்தை இவர்கிட்டே சொன்னேன். உன்னைச் சந்தித்து நன்றி தெரிவிக்கணும்னு துடிச்சிக்கிட்டிருந்தார். ஏன் காலை யிலேயே முகூர்த்தத்துக்கு வரலை?...'' கேட்டுவிட்டு ஸூட்டும் -



கோட்டும் - மாலையுமாக அவளருகே நின்ற மணமகனை அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

''அன்னிக்கு ஆபத்திலிருந்து காப்பாத்தினார் ஒருத்தர்னு சொன்னேனே இந்த அண்ணன்தான்...'' கணவனுக்கு அவனை அறிமுகம் செய்வித்தாள்.

அண்ணன்! மெய் சிலிர்த்துப் போன ராஜாபாதர் தொண்டையை உணர்ச்சிகள் இறுக்கிக் கொண்டன. கண்ணில் நீர் சுரக்க மாலையும் கழுத்துமாக நின்ற அந்த இருவரையும் மனம் நிறைந்து உள்ளூர வாழ்த்தினான்.

''உங்களுக்கு நாங்க ரெண்டு பேரும் ரொம்பக் கடமைப்பட்டவங்க. இன்னிக்கு மனம் நிறைஞ்சு இந்தப் பந்தலில் பலர் முன்னிலையில் நாங்கள் மகிழ்வோடு நிற்கிறது - உங்களால்தான், மிக்க நன்றி...'' கைகூப்பி வணங்கினான் மணமகன்.

பஞ்சுவுக்கேத்த மாப்பிள்ளை, எத்தனை அடக்க மான பையன்! அயர்ந்து போய் நின்ற ராஜாபாதருக்கு என்ன பேசுவது என்று ஒரே குழப்பம்.

மணமக்களை ஆசீர்வதிக்க - கைகுலுக்கிப் பாராட்டப் பரிசுப் பொருள்களைச் சுமந்து கொண்டு சிலர் அருகே வந்து நின்று கொண்டிருந்தனர்.

''என்னைத் தெரியுதாம்மா? நான்தான் ஸூப்பர் ஸில்வர் ப்ரொடக்ட்ஸின் நிர்வாகி சந்தானம். உன் அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவன் - இவன் என் மருமகன். எங்கள் கம்பெனியின் லீகல் அட்வைஸர்...'' அறிமுகப்படுத்திக் கொண்டு அருகில் வந்தனர்.

''வணக்கம், நன்றி - உட்காருங்கள் வந்துவிட்டேன்.'' கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு அவள் சட்டென்று ராஜாபாதர் அருகில் வந்தாள்.

"அண்ணா! முகூர்த்தத்திற்குத்தான் சாப்பாட்டுக்கு வரலை, ஏமாத்திட்டீங்க. இப்போ டிபன் சாப்பிட்டு கச்சேரி கேட்டுவிட்டு - பின்னர் டின்னரும் சாப்பிட்டு விட்டுத்தான் போகனும். தங்கச்சியின் உத்தரவு..." சிரித்துக்கொண்டே அவள் அவனை அழைத்துக் கொண்டு மேசை மீது பலகாரங்கள் பரிமாறி வைக்கப்பட்டிருந்த பகுதிக்குச் சென்றாள்.

'இங்கே பாருங்க!' கைதட்டிப் பரிமாறும் ஆளைக் கூப்பிட்டாள். "இந்தத் தட்டுக்குப் பக்கத்திலே ஐஸ் க்ரீம் இல்லை. உடனே கொண்டுவந்து வைக்கச் சொல்லுங்க." சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் பலர் வியப்புடன் அவனைப் பார்த்தனர். முகம் சிவந்து போனான் ராஜாபாதர்.

"என்னம்மா? இத்தனை பெரிய மனுசங்க நடுவிலே ஒரு குப்பத்துக்காரனை அண்ணன்னு கூப்பிடறே அவங்க என்ன நினைப்பாங்க?"

"மானத்தைக் காப்பாத்த முன் வந்தவர் ஒரு பெண்ணுக்கு அண்ணன் முறை. கூடப் பிறந்தவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. குபேரனாக இருக்கணும்னு நியதி இல்லை... அண்ணா! நானும் என் கணவரும் முற்போக்கான சிந்தனை கொண்டவங்க. எங்களுக்குப் பணம், பதவி, அந்தஸ்து இதெல்லாம் முக்கியமல்ல" உணர்ச்சி வசத்தில் படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

உடல் சிலிர்த்து உள்ளம் சிலிர்த்து - மகிழ்ச்சி பொங்க பேச முடியாது ஒரு கணம் அவன் திணறிப் போனான்.

"தங்கச்சி! எனக்கு இத்தனை அருமை செய்கிற உனக்கு நான் மணப்பரிசு ஒண்ணும் கொண்டு வரலை - வெட்கமா இருக்கு" தழு தழுத்தான்.



"எனக்குத்தான் ஒரு பெரிய பரிசு கொடுத்திட்டீங்களே அண்ணா! என் மானத்தைக் காப்பாத்தி மகிழ்ச்சியோட என்னை வாழ வைச்சுட்டீங்களே. அதுக்கு மேலே உசந்த பரிசு ஏதாவது இருக்கா?..." தாழ்ந்த குரலில் கேட்டாள்.

கண்களில் நீர் கசிய உணர்ச்சியால் உடல் ஆட அவன் எழுந்தான். இடுப்பில் செருகிக் கொண்டிருந்த அந்தக் காஷ்மீரக் கத்தியை எடுத்தான். "தங்கச்சி! இதை வண்ணக் காகிதத்திலே சுத்தி எடுத்துக்கிட்டு வர புத்தி தோணலை... இப்படியே இதை என் பரிசாக ஏத்துக்கோம்மா. இதால பழங்களை நறுக்கிச் சாப்பிடும் போது இந்த ஏழை அண்ணனை நினைச்சுக்கோ. இது பழங்காலத்துப் பொருளாம்..." கைகள் நடுங்க... கத்தியை அவளிடம் நீட்டினான். மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட அவள்... உறையின் வேலைப்பாட்டை வியப்புடன் பார்த்தாள். "ரொம்ப அழகாக இருக்கு அண்ணா. அவர்கிட்டே காட்டிட்டு வறேன்... சாப்பிடுங்க... பின்னால் வந்து பார்க்கிறேன்." சொல்லிவிட்டு அவள் விரைந்தாள்.

'விர்' என எழுந்து ராஜாபாதர் கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு பந்தலை விட்டு வெளியே வந்தான்.

உறையினின்று உருவி எடுத்த கத்தியைக் கண்டு வியப்படைந்து போனாள் மஞ்சு. பிடியின் மீது மோகன் என்ற பெயர்! விளக்கம் கேட்க அவன் இருந்த பக்கம் பார்த்தாள். அவன் அங்கு இல்லை.

சாலையில் மின்விசைக் கோளாறினால் விளக்குகள் அணைந்து விட்டிருந்தன. பல்வேறு உணர்வுகளின் மோதலில் உள்ளமும் உடலும் பதறக் கண்களில் நீர்

பொங்க இருளில் அவன் நடந்து போய்க் கொண் டிருந்தான்.

''சமுதாய வேலிக்கு அப்பால் பொறந்தவன் ஆனாலும் உனக்கு உண்மையில் அண்ணன் அம்மா... வஞ்சகத்தையும் - சூழ்ச்சியையும் கொடுத்து என் நெஞ்சத்தைப் பாழாக்கின இந்தப் பட்டணத்தைவிட்டே போறேன். தங்கச்சி! நீயும் உன் புருஷனும் நல்லா இருக்கணும்னு இந்த அண்ணன் உண்மையிலேயே வாழ்த்தறேன்...'' துக்கத்தில் திணறிய அவன் விளக்கொளியில் பிரகாசித்த மண்டபத்தைத் திரும்பி ஒருமுறை பார்த்துவிட்டு வேகமாக நடந்தான். இருள் அவனை வேகமாக விழுங்கியது.

முற்றும்

★★★

அந்தப் பாழடைந்த தோட்டத்திற்குள்ளே சென்றான் அவன். பிடியைத் தளர்த்தி விட்டான் போலும். ''ஐயோ அம்மா! யாராச்சும் ஓடிவாங்க.'' உரத்த குரலில் அலறினாள் அவள். ''சீ வாயை மூடுடி கழுதே பேசாம, கத்தாம இருந்தா உசிரோட வுட்டுடுவேன். இல்லாட்டா...'' உறுமினான் அவன்.

உடல் வியர்க்க ராஜாபாதர் கேட்டுக் கொண்டே நின்றான். மஞ்சுவுக்கு இந்தத் தண்டனை வேணும். அலங்கோலப் படட்டும்! மானம் அழியட்டும். ஒரு கணம் அவனது உள்ளத்தில் ஒரு வெறி. ஒரு குரூரமான மகிழ்ச்சி.

டார் டார் என்று புடவை கிழியும் சப்தம். தொடர்ந்து காய்ந்த சுள்ளிகள் ஒடிபடும் ஓசை. சருகுகள் மிதிபடும் சப்தம்... ''பாவி - சண்டாளா விடுடா. என்னைக் காப்பாத்த யாரும் இல்லையா?'' தொண்டை கிழிய மஞ்சு அலறினாள்.

''போடி! எவன் வருவான்?'' என்று பதிலளித்த முரடனின் ஏளனமான சிரிப்பு. நெருப்பாக அது ராஜாபாதரின் நெஞ்சிலே பாய்ந்தது. அவனையுமறியாது அவன் உடல் கிடுகிடுக்க பிறரின் துன்பங்களைப் பார்க்கப் பொறுக்காதவன்... அக்கிரமத்தைக் கண்டு ஆத்திரத்தில் துடிப்பவன்... அவனால் தாள முடியவில்லை. பார்த்துக் கொண்டு நிற்கவும் முடியவில்லை. உடலில் உள்ள நரம்புகளும் தசைகளும், பிசாசு போன்றதொரு வெறியில் முறுக்கிக் கொண்டன. 'ஐயோ!' என்று மீண்டும் துடிதுடித்த பெண்ணின் அலறல் அவன் உடலில் ஓடிய ரத்தத்தை ஒரு கணத்தில் கொதிக்கச் செய்தது. அலறியவள் அவன் ரத்தத்தின் ரத்தமாயிற்றே! வீறு கொண்டு வெகுண்டெழுந்த சிங்கம் போல், 'யாரடா அவன்?'' கூக் குரலிட்டபடி ஒரே பாய்ச்சலில் அந்த முரடன் மேல் இருட்டில் மோதினான். பலத்த கைகலப்பு. முரடனும் வலுவானவனாகத் தானிருந்தான். பலம் கொண்ட மட்டும் அவனும் போராடினான். ராஜாபாதரின் முகத்திலே பலத்த அடி. உதட்டில் பல் பட்டு... ரத்தம் சூடாக உப்புக் கரித்துக் கொண்டு வாயிற்குள்ளே வழிந்துமேலே சொட்டியது. அவ்வளவுதான். அதிகமானதொரு மிருக பலம் உடலில் புகுந்து கொண்டு விட்டது. அந்த முரடனைக் கரடியாகப் பிடித்து இழுத்து வந்து வேப்ப மரத்தின் மீது மொத்து மொத்தென்று மொத்தத் தொடங்கி விட்டான். ஒரு வினாடி அவன் கைப்பிடி தளர்ந்தது. முரடன் தப்பினோம் பிழைத்தோம் என்று தலைதெறிக்க அங்கிருந்து மணற்பாதைப் பக்கம் ஓடத்தொடங்கினான்.

அன்று கண்டானே லோசனாவின் குடிசையில், அதே காட்சிதான் மறுபடியும். கிழிந்த புடவையும் அலங்கிய கூந்தலுமாகப் பயத்தில், நடுங்கியபடி நின்று மஞ்சு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். ''என்னத்துக்கு அழுவுறே? அவன்தான் போய் விட்டானே?'' சொல்லிக்கொண்டே காலில் தட்டுப்பட்ட கொத்துச் சாவியைக் குனிந்து எடுத்தான். ''நல்ல வேளை - நீங்க உதவினீங்க... இல்லாட்டா...'' நடுங்கியது அவள் குரல்.

''எதுக்கும்மா இந்த வேளையிலே - இந்தத் தனி பங்களா பக்கம் வந்தே?'' கேட்டுக்கொண்டே அவன் முன்னால் நடந்தான்.

''எனக்கு இன்னும் சில மாதங்களில் கல்யாணம் நடக்கவிருக்கு. எங்கப்பா சமீபத்திலே இறந்துபோனார். வருஷம் முடியறதுக்குள்ளே அத்தானை அடிக்கடி சந்திச்சு வீட்டிலே பேசக் கூடாதுன்னு அம்மா கோவிச்சுக் கிண்டாங்க. அத்தானைப் பார்க்காம - பேசாம இருக்கக் கஷ்டமா இருந்திச்சு. இது அவருடைய குடும்பத்துப்